Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

ரூபா 30.00
ஜனவரி 28 - பெப். 03, 2016
பக்கம்24
முரசு 1154

## புதிய அரசமைப்பு எப்பவோ முடிந்த காரியம்



## சர்வதேச எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்குமா?



## சிந்திப்பவர் புத்தியை மது மயக்கிவிடும்!



## அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்...



## இந்த இளைஞனின் இதயக் குமுறல்...

## ஆன்மீகம்

### ௐ எதிர்மறை சக்தியை விரட்டும் பரிகாரம்

கால்களை தண்ணீரில் வைத்தபடி சிறிதுநேரம் கண்களை மூடி அமரவேண்டும். பின்னர் மனதில் 'என் உடம்பில் மனதில் உள்ள அனைத்து எதிர்மறை சக்திகளும் வெளியேறவேண்டுமென" பிரார்த்திக்கொண்டே இரண்டு கால்களை நன்றாக கால் பாதங்களால் தேய்த்து சுத்தப்படுத்தவேண்டும்.

இவ்வாறு மனதில் நினைத்தபடி 15 நிமிடம் கால்களை தேய்க்கவேண்டும். 15 நிமிடம் செய்த பின்னர் தண்ணீரை பார்த்தால் சிலருக்கு தண்ணீர் மிகவும் கறுப்பாக மாறியிருக்கும்.

சிலருக்கு தண்ணீரில் நாற்றம் எடுக்கும், சிலருக்கு ஏதும் இல்லாமலும் போகலாம். சிலர் இதை செய்துமுடித்ததும் மிக்வும் களைப்பாக உணருவார்கள். இது உங்களை சுற்றி இருந்த எதிர்மறை சக்திகள் விரட்டி அடிக்கப்பட்டிருப்பதை குறிக்கும்.

இதை தினமும் தொடர்ந்து செய்துவந்தால் உங்கள் வாழ்க்கையில் நல்ல செயல்கள் நடக்க ஆரம்பிக்கும். ஹிமாலயன் ரொக் உப்பை (himalayan rock salt) கிடைக்காதவர்கள் கவலைப்படவேண்டாம். இந்துப்பு மற்றும் கல் உப்பு அல்லது கடல் உப்பை பயன்படுத்தலாம்.

### இயேசுவின் பார்வையில் புனிதம்

புனிதம் என்ற பெயரில் மனிதத் தேவையை பொருட்படுத்தாது விடுவது, அந்த புனிதத்தை மாசுபடுத்துகின்ற செயல் என்பதை, மிக அழகாக நமக்கு எடுத்துரைக்கிறது. புனித பொருட்களை மற்றவர்களின் தேவைக்கு பயன்படுத்துவது தான், அந்த புனிதப்பொருட்களுக்கான உண்மையான விலை. இன்றைய நாளில் ஓய்வுநாளில் பசியாயிருந்த சீடர்கள் கதிர்களைப் பறித்து உண்கிறார்கள். பரிசேயர்கள், ஓய்வுநாளை மீறிய செயலாகப் பார்க்கிறார்கள். அதனைக் கண்டிக்கிறார்கள். குற்றம் காண துடிக்கிறார்கள். ஆனால், இயேசு புனிதம் என்கிற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை நமக்கு எடுத்துரைக்கிறார்.

புனித நாளோ, புனித பொருட்களோ மனிதத்தேவையை நிறைவுசெய்கிறபோதுதான், புனிதத்தன்மையைப் பெறுகிறது. பலிக்கு வைக்கப்படுகிற அப்பம், பசியாயிருக்கிறவனுக்குக் கொடுக்கப்பட்டால், அதுதான் உண்மையான பலி. அதுதான் உண்மையான புனிதம்.

இன்றைக்கு புனிதம் என்றபெயரில், நாம் மனிதத்தேவைகளை புறந்தள்ளிவிடுகிறோம். புனிதம் நிச்சயமாக பேணிக்காக்கப்பட வேண்டும். ஆனால், அந்த புனிதத்தன்மை சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும், என்பதுதான் இயேசுவின் ஆசை.

### ஸக்ராத் கஸ்டம்

பெருமனார் (ஸல்) கூறுகிறார்கள். ஒவ்வொரு அடியானும் ஸக்ராத் நேரத்தில் கடுமையான கஷ்டத்தை அனுபவிக்கிறான். உயிர்பிரியும் தறுவாயில் இறப்பவரின் ஒவ்வொரு உறுப்பும், மற்ற உறுப்பை நோக்கி நீ என்னை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கிறாய்! மறுமை நாள்வரை நாம் பிரிந்தே இருப்போம் எனக்கூறி எல்லா உறுப்புகளும் அழுகின்றன.

அறிவிப்பவர் :- ஹலரத் அனஸ்(ரலி)

நூல் :- திப்ரானி.

ஹலரத் ஹஸன்(ரலி) அறிவிக்கிறார்கள்: அடியானின் உயிர் எலும்புகளைவிட்டும் பிரியும் போது சொல்லாலோ, எழுத்தாலோ வர்ணிக்க முடியாதளவு கஷ்டமடைகிறான். மேலும் சுய நினைவு இழந்து, மேல்மூச்சு, கீழ்மூச்சு எடுக்க ஆரம்பித்துவிடுகிறான். ஆனால் ஷஹீதுகளுக்கு மட்டும் இந்நிலை கிடையாது.

நூல் : இப்னு அபித்துன்யா

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

## தேன் கிண்ணம்



### முறிந்து போன காதல்

இரவோடும் பகலோடும்
உறவாடிய எமது காதல்
வெயிலிலும், மழையிலும்
செழித்து வளர்ந்த எமது காதல்
நிலவிலும் அமாவாசையிலும்
ஒளிவீசிய எமது காதல்!
வானும் மண்ணும்
அறிந்திருந்த எமது காதல்!
நீரிலும் நிலத்திலும்
நிலைத்திருந்த எமது காதல்!
ஏக்கத்திலும், தூக்கத்திலும்
விழித்திருந்த எமது காதல்!
இன்பத்திலும் துன்பத்திலும்
இணைந்திருந்த எமது காதல்!
இன்று திருமணத்தில்
முறிந்து போயுள்ளது!
உன் கழுத்தை அலங்கரிக்கும்
தாலிக் கொடிக்கு
சொந்தக்காரன்
நான் இல்லாமல்
போனதால்...!

த.நகுலேஸ்வரன்,
மட்டக்களப்பு,

## விடியலைக் காணாத பொழுது

தூய்மையான உனதன்பு
தூரமாகிப்போனதால்
பாரமாகி கனக்கிறது
உன்னை பரிணமித்த பாமர நெஞ்சு.

பெண்ணே!
ஏழையென் அவாக்களெல்லாம்
வெடித்துப் பறக்கின்ற
பருத்திப்பஞ்சாகிப் போனதடி
உன்னால்.
அன்பே! நீ
என் நினைவில் தறிபட்டு
நிலைப்பட்டதால்தான்.
என்னுள் காதல் எழப்பட்டது.
நேசம் நீளப்பட்டதால்தான் நீ
என் இதயத்தால் ஆளப்பட்டாய்...

என்னவளே!
நீ நிலவாக ஆனதால்தான்
நான் வானமாக மாறினேன்
நீ தாமரையாக தோன்றியதால்தான்
நான் குளமாக மாறினேன்.
நீ பூவாக புலர்ந்ததால்தான்
நான் தேனாக தென்பட்டேன்.
நீ பனித்துளியாக புலப்பட்டதால்தான்
நான் புல்வெளியாக எழப்பட்டேன்.
நீ மேகமாக கருக் கொண்டதால்தான்
நான் மலையாக தோன்றினேன்.
நீ தென்னங்கீற்றாக
தலையசைத்ததால்தான்
நான் தென்றல் காற்றாக மாறினேன்.
நீ என்பது எதுவரைக்கும் நீளுமோ...
நான் என்பது அதுவரைக்கும் ஆளும்.

குறு நாளில் கூடிவந்த உன் காதல்
வரும் நாளில்
வீணாகிப்போகுமென்று
உருகி நேசித்த ஒரு நாளில்
உணரமறந்தேன்.
எந்நாளும் என்னோடு
நீயிருப்பாயென்று...

உன் இதயமென்னும் தாம்பூலத்தட்டில்
அர்ச்சனை பூவாகி கிடந்ததடி
எனதன்பு
எப்போதும் - இப்போது
என் சரீரம் என்னும் சடக்கோயில்
உன் சந்நிதியிழந்து கிடக்கிறது.
தேவி நீ! திரும்பவந்தால்
அபிசேக பால்வார்க்கும்
என்னாயுள் - உனக்கு.

உன் மதிமுகம் காணாத
என் விழிகள்கூட
துயிலை துணையாக்கி கொள்ளுதடி
இனியமுகம் இன்னும் காணாமல்
இயக்கமற்றிருக்கின்றேன்.

என்னவளே! எந்நாளோ
எனை நீ தேடிவரும் திருநாள் - அந்நாள்
என் வாழ்வு விடியலைக் காணும்
பொன்னாள்.



M.A.நிஜாம்,
புல்மோட்டை.

## தே வ தை



இளையவள் இவளோ - சிட்டு
இவளது வயதோ இருபத்தெட்டு
வளையல் கரமோ பட்டு - இவள்
வளையலோ என் கரம் பட்டு
நெற்றியில் குங்குமப் பொட்டு - இவள்
இடையோ வில் விட்டு
பற்றுவேன் கரங்கள் தொட்டு - கவிதை
வளர்ப்பேன் இவளையே நட்டு
கங்கையில் பாயும் கயல் இவள்
கவர்ச்சி மயிலின் ஒயில்
கைகள் இரண்டும் பார்த்தால் கவர்ச்சி
ஊட்டிடும் இவளது கூந்தல்
கால்களோ வாழைத் தண்டு
இவள் பார்வையோ இளந்தென்றல்
உடனே சர்க்கரைப் பந்தல்
இவளுக்காக என்னைப் படைத்தானே
நான் கொடுத்து வைத்தவன்தான்.

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.


தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,
மாநகரசபை கட்டடம்,
3 ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262,
0774150799**




### ஜனவரி - 28

முடிந்தால் சமாதானமாக இரு.
ஆனால் என்ன நேர்ந்தாலும்
உண்மையை மட்டும் கூறு.

– மார்டின் லூதர் கிங்

மீள்குடியேற்ற காணிகளில்

# திருடர்கள் தொல்லைகள் குறித்து பொலிஸாரின் நடவடிக்கை அவசியம்!


## செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்டுவரும் எமது மக்களின் காணிகளில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக அம்மக்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டிவருகின்றனர். பல வருட காலமாக தமது சொந்த காணி, நிலங்களில் மீள்குடியேற எதிர்பார்ப்பு கொண்டிருந்த இம்மக்கள், அதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும் நிலையில், அதற்குரிய ஏற்பாடுகளுக்கு பாரிய இடர்களுக்கு மத்தியிலேயே தயாராக வேண்டிய சூழ்நிலையில், இவ்வாறான திருடர்களின் தொல்லைகள் பெரும் பாதிப்புகளை உண்டுபண்ணி வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் அவர்கள், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இரவுவேளைகளில் அங்கிருக்கக்கூடிய பெறுமதியான மரங்களை திருடர்கள் தறித்துச் செல்வதாகவும், மேலும் எஞ்சியிருக்கின்ற கட்டிடங்களிலுள்ள பாவனைக்கு உகந்த ஏனைய பொருட்கள் திருடப்படுவதாகவும் இம் மக்கள் தெிவிக்கின்றனர்.

இம்மக்களுக்கு மீள்குடியேறுவதற்கான காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பினும் அதற்கான வசதிகள் முழுமையாக இன்னும் மேற்கொள்ளப்படாதநிலையில், பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ள இவர்கள், தற்போது கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி தங்களுக்கான அடிப்படை வசதிகளுக்கு முயலும்போது, இவ்வாறான திருடர்களின் தொல்லைகள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, இதனைத் தடுக்க



வேண்டுமென செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தன் சமஷ்டியை வலியுறுத்துவதால் தெற்கில் கவலை

எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் சமஸ்டி அடிப்படையிலான தீர்வொன்று க்கு வலியுறுத்திவருவதாக திவயின சிங்களப் பத்திரிகை கவலை தெரிவித் துள்ளது. இதுகுறித்து அப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களை நிர்வகிக்க கொழும்பு அரசாங்கத்துக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார். இறையாண்மை என்பது அரசாங்கத்துக்கு அன்றி பொதுமக்களுக்கே உரியது என்று தெரிவித்துள்ள அவர், இந்நாட்டில் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் அமைப்பு நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும் சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் மக்கள் பேரவை அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக முன்வைக்கும் பிரே ரணைகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளதாகவும் குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சி.வை.தாமோதம்பிள்ளை நினைவு தினம்



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரித் தமிழ் மன்றத்துடன் இணைந்து யாழ்ப்பாணத் தமிழ் சங்கம், சி.வை.தாமோதரம்பிள்ளையின் நினைவுதினம் வெள்ளிக்கிழமை 29 ஆம் திகதி, மாலை 3.00 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சி.வை. தாமோதரம்பிள்ளையின் நினைவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். மற்றும் பாடசாலை மாணவர் இணைந்துகொள்ளும் சொல்லாடு களம் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

# குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் சாகும் வரை தூக்கிலிடுங்கள் வித்தியா கொலைச் சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் தெரிவிப்பு


புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகள் கடந்த திங்கட்கிழமை(25) ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.றியாஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்போது நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்ட சந்தேகநபர்கள் தாங்கள் குற்ற வாளிகள் அல்லவெனவும், வீண்பழி சுமத்தப்பட்டுக் கடந்த 8 மாதங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். தம்மிடம் சட்டத்தரணி வைத்துக் கொள்வதற்கான போதிய வசதி இல்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள சந்தேகநபர்கள் தாம் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் சாகும்வரை தூக்கிலிடுமாறும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். அத்துடன் குறித்த வழக்கு விசாரணைகளை துரிதகதியில் முன்னெக்குமாறும் சந்தேகநபர்கள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொலைக்குற்றத்திற்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்க சட்டத்திருத்தம் செய்ய வேண்டும்

## நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதியிடம் பரிந்துரை



இந்தியாவின் தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளது போன்று, கொலைக்குற்றத்திற்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கும் வகையில் இலங்கையின் தண்டனைச் சட்ட நடவடி கோவையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் மிருசுவிலைச் சேர்ந்த முருகேசு சத்தியநாதன் என்பவரை உலக்கையால் அடித்துக் கொலை செய்துவிட்டு, அவருடைய ஹை ஏஸ் வாகனத்தைக் கொள்ளையடித்துச் சென்ற வழக்கில் தலைமறைவாகியுள்ள ஒருவர் உட்பட மூன்று எதிரிகளுக்கு நீதிபதி இளஞ்செழியன் மரண தண்டனை விதித்து கடந்த திங்களன்று தீர்ப்பளித்திருந்தார்.

மரண தண்டனை வழங்கும் ஒரு நீதிபதி அந்தத் தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பில் தனது தனிப்பட்ட அபிப்பிராயத்தை ஜனாதிபதிக்கு அறிக்கை வடிவத்தில் அனுப்பி வைக்கவேண்டும் என்று தண்டனை நடவடி கோவையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமைக்கு அமைவாகவே, நீதிபதி இளஞ்செழியன் கொலைக்குற்றத்திற்கு மரணதண்டனை அல்லது ஆயள் தண்டனை வழங்கும் வகையில் இலங்கையின் சட்ட நடவடி கோவையில் திருத்தம் செய்யவேண்டும் என்று ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

அந்தப் பரிந்துரை அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இந்திய உச்ச நீதிமன்ற ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 4 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் ஒருவரின் மரண தண்டனையை இந்திய ஜனாதிபதி ஆயுள் தண்டனையாகக் குறைத்திந்தார். ஏனைய மூவருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான ஆணை ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது. மரண தண்டனை வழங்கப்பட்டு, 15-20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்ததன் பின்பே, இந்த ஆணையை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார்.

மரண தண்டனைக்கான நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டு, 20 ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்ததன் பின்னர் தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவது அவசியமா என்ற சட்ட வினா தொடுத்து இந்த மூவரும் இந்திய உச்சநீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவை விசாரணை செய்த இந்திய பிரதம நீதியரசர் சதாசிவம் தலைமையிலான குழாம் மூன்று பேரினதும், மரண தண்டனையை ரத்துச்செய்து அதனை ஆயுள் தண்டனையாக மாற்றியது.

இந்தத் தீர்ப்புக்குப் பல காரணங்கள் கூறப்பட்டபோதிலும், இந்திய தண்டனைச் சட்டக் கோவையில் கொலைக் குற்றம் புரிந்தவருக்கு நீதிமன்றம் மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கலாம் எனப் பரிந்துரை செய்யப்பட்டிப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தண்டனை குறைப்பு செய்யப்பட்டது.

கொலைக்குற்ற வழக்கு ஒன்றில், நீதிபதிகள் விரும்பினால் ஆயுள் தண்டனை கொடுக்கலாம் என்ற குற்ற நடவடி கோவையின் பரிந்துரைக்கு அமைவாகவே, ராஜிவ் காந்தி கொலைக் குற்றவாளிகளுக்கான மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. அதில் ஒருவர் இலங்கைப் பிரஜை. அவருக்கும் இந்திய உச்ச நீதிமன்றம் கருணைகாட்டி ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது. அங்கே நீதிபதிகளுக்கு கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கும்வகையில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு சட்டம் பரிந்துரை செய்கின்றது.

ஆனால் இலங்கை குற்ற நடவடி கோவையில் பிரிவு-296இன் படி, கொலைக்குற்றம் புரிந்த குற்றவாளிக்கு மரண தண்டனை மட்டுமே நீதிபதி வழங்கவேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது. நீதிபதி விரும்பினாலும் குறைந்தபட்ச தண்டனை வழங்க முடியாது. எனவே, இந்த சட்டச்சரத்து மாற்றப்படவேண்டும். கொலைக் குற்றவாளிகளுக்கு இந்திய தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவை ஒத்ததாக மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும். அப்படி சட்டம் திருத்தப்பட்டால் கொலைக் குற்றவாளிகளுக்கு, வழக்குகளின் தன்மைக்கு ஏற்றவகையில், நீதிபதிகள் மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்குவதற்கு சுதந்திரமாகச் செயற்படமுடியும்.

இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாம் பதவியில் இருந்து 5 ஆண்டுகளில் எந்தவொரு தூக்குத் தண்டனையிலும் கையொப்பம் இடவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

இலங்கையில் போதைவஸ்து குற்றம் என்பது பாரதூரமான குற்றமாகும். அத்தகைய குற்றவாளிக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கலாம் என்றே சட்டம் பரிந்துரைக்கின்றது. எனவே, கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனைதான் தீர்ப்பு எனச் சட்டம் பரிந்துரை செய்திருப்பது சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கமுடியாத சூழ்நிலைக்கு நீதிபதி-களை ஆளாக்கியுள்ளது.

மிருசுவில் கொலை வழக்கில் மூவருக்கு நீதிபதி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். மற்றைய இருவரும் தண்டனை பெறுவதற்காக போகம்பறை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இந்த வழக்கின் குற்றவாளிகள் இளைஞர்கள். அவர்கள் வாழ வேண்டியவர்கள். யுத்தத்திலும் சுனாமியிலும் பல இலங்கை பிரஜைகள் மாண்டு போனார்கள். மரண தண்டனை மூலமும் உயிர்கள் காவு கொள்ளப்படுவது ஏற்புடைத்தல்ல. எனவே, இவர்கள் இருவரையும் தூக்கிலிடாமல், அவர்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கும் வகையில் தண்டனை குறைப்பு செய்யுமாறு பரிந்துரைக்கின்றேன்.

நீதிபதி மரண தண்டனை தீர்ப்பு எழுதுகின்றார். ஜனாதிபதி தூக்குத்தண்டனையை நிறைவேற்று வதற்கான ஆணையைப் பிறப்பிக்கின்றார். சிறைச்சாலை அலுகோசு கழுத்தில் தூக்குக் கயிற்றைப் போட்டு தண்டனையை நிறைவேற்றுகின்றார். மனித உயிர் ஒன்றைப் பறிப்பதற்கு அரச சேவையில் உள்ள இந்த மூவருக்கும் சட்டம் அனுமதியளித்திருக்கின்றது. மேல் நீதிமன்ற நீதிபதி என்ற முறையில், இது ஒரு சீரான முறையல்ல என்பதே, எனது அபிப்பிராயமாகும். ஆகவே, இந்தியாவில் இருப்பது போன்று குற்ற நடவடி கோவையில் கொலைக்குற்றத்திற்கு மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை என்று இலங்கையின் குற்ற நடவடி கோவையில் திருத்தம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## போர்க்குற்ற விசாரணை போய்ச்சுது பரலோகம்!

**இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஜெனிவாத் தீர்மானத்தை நிறை வேற்றுவது தொடர்பாக அண்மையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்தியாவின் புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த விசேட பேட்டியிலும், பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியிலும் "போர்க் குற்ற விசாரரணை பற்றி தற்போது பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அதைவிட வேறு பல விடயங்கள் உள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.**

**ஜெனீவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது குறித்து உங்கள் கருத்து என்ன..? எனக்கேட்ட போது இலங்கையில் போதியளவு நீதிபதிகள் உள்ளதாலும், சுதந்திரமான நீதித்துறை உள்ளதாலும் வெளிநாட்டு நீதி-பதிகள் தேவையில்லை. இதற்கு நாமே விசேட நீதிமன்றம் அமைத்து விசாரணை செய்வோம் எனக்கூறியுள்ளார்.**

**அப்படியானால் எப்போது அதை அமைக்கப் போகின்றீர்கள்?. எனக்கேட்டபோது, அவ்வாறான விடயங்கள் குறித்து தற்போது ஆராயத் தேவையில்லை. தற்போது எங்களிற்கு இதை விட வேறு விடயங்கள் பல உள்ளன. அது குறித்து நாங்கள் கவனம் செலுத்துகின்றோம் எனக் குறிப்பிடடுள்ளார்.**

**அவ்வாறானால் போர்க்குற்ற விசாரணைக்கு முன்னுரிமை கொடுக்கத் தேவையில்லையா? எனக் கேட்டபோது, நாங்கள் உடனடியாக செய்து முடிக்கவேண்டிய விடயங்கள் பல உள்ளன. அது முடிந்தபின்னரே இது தொடர்பாக ஆராய்வோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

**இதை ஆழமாக நோக்கவேண்டிய தேவையும் உள்ளது. அதேவேளை மற்றைய சிங்கள அரசியல்வாதிகளைப் போல் ஜனாதிபதியவர்களையும் பார்க்கமுடியாத தேவைப்பாடும் உள்ளது. அதாவது திட்டமிட்டு தமிழ் மக்களிற்கு இழைக்கப் பட்ட போர்க்குற்றத்தை நல்லாட்சியரசு புறந்தள்ளுகின்றது. என எடுத்த எடுப்பிலும் கூறிவிட முடியாது...? அப்படியானால் அதை ஏன் பின்போடுகின்றது என்பதில்தான் அரசின் இக்கட்டுக்கள் வெளிப்படுகின்றன.**

**மகிந்த அரசு தேர்தலில் தோற்ற நாளில் இருந்தே தான் போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது என்பது தொடர்பாக பல முன்னெடுப்புக்களிற்கு முகவரி போட்டுவருகின்றது.**

**இனவாதத்தை இருப்பில் ஏத்தி பெரும்பான்மை மக்கட் பலத்தை தன்வசம் இழுக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்து. தற்போது அதில் வெற்றியும் கண்டுள்ளது. மகிந்தவின் கூட்டு எதிரணி அரசியல் முன்னெடுப்புக்களிற்குத் தடை போடும் பலம்வாய்ந்த அமைப்பாக இருப்பதனாலேதான் சில முடிவுகளை அரசும் உடனுக்குடன் எடுக்கமுடியாமல் உள்ளது. அதேவேளை பல குற்றச்செயல்களில் இருந்து தானும் தப்பித்துக் கொள்கின்றது.**

**ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கையும் ஏற்றுக் கொண்டு அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக உறுதிமொழி வழங்கியிருந்தது. இவ்வாறு அரசாங்கம் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை ஒருபோதும் மீறமுடியாதென பலதரப்புக்களால் வலியுறுத்தியும் கண்டனங்களைத் தெரிவித்தும் வருகின்றன.**

**யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக் கள் சந்தேகம் நிலவுவதாகவும், வெளிநாட்டு நீதவான்களின் உதவி பெற்றுக் கொள்ளப்படாது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து அதிர்ச்சிய ளிப்பதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத் தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யாஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார்.**

**யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் பல்வேறு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குற்றச்செயல்கள் இடம்பெற்றமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. ஜனாதிபதியின் கருத்து, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு நிறுவனங்களில் சாட்சியமளித்த பாதிக்கப்பட்ட மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது என சூகா தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**இலங்கை படையினர் சித்திரவதைகள், துன்புறுத்தல் களில் ஈடுபடுவதாகவும் மனித உரிமை மீறல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி நிராகரித்திருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறாக பல சிக்கல்கள் எழும்போது நல்லாட்சியரசு அரசு தொடர்ந்தும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க சிங்கள இனவாதம் இடம்கொடுக்குமா? என்பதும் இனவாதத்தைத் தாண்டி நல்லாட்சியரசு தொழிற்பட அதிகாரம் கிடைக்குமா? என்பது தான் இன்றுள்ள அரசியல் ஏக்கங்களாகும்.**

## பலப்படுத்த முடியாத 13 இன் மத்தியில் அதியுச்ச சமஸ்டி சாத்தியப்படுமா?

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒன்று கூடல் இடம்பெற்றது. அதில் ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வை என்றுமே தாம் ஏற்கமாட்டோம் எனவும், அதியுச்ச அதிகாரம் கொண்ட சமஷ்டித் தீர்வையே நாம் ஏற்போம் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் தெரிவித்து இருந்தார். 13ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் கூறப்பட்ட மாகாணசபை அதிகாரங்களைக் கூட முழுமையாக அமுல்படுத்த முடியாத நல்லாட்சியரசிடமிருந்து அதியுச்ச சமஷ்டித் தீர்வை எவ்வாறு பெற்றெடுக்கமுடியும் என்பதுதான் தற்போதுள்ள கேள்வியாகும்.

13 இல் குறிப்பிட்டது போல் மாகாண சபைக்குரிய அதிகாரங்களை முற்றுமுழுதாக வழங்க நல்லாட்சியரசினாலும் முடியவில்லை. அதேவேளை இணக்கவழியில் பயணித்த கூட்டமைப்பால் எதிர்க்கட்சித் தலைமையை வைத்திருந்தும்கூட பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாணசபைக்குப் பெற்றுக் கொடுக்கமுடியவில்லை. இவ்வாறிருக்கும்போது ஒற்றை யாட்சிக்கப்பால் அதியுச்ச சமஷ்டியை எவ்வாறு வென்றெடுக்க முடியும் என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். அவ்வாறு கிடைத்தால் அதை விடப்பெரிய விடயம் வேறொன்றும் இல்லை ஆனால் கிடைக்குமா? தருவார் களா? கூட்டமைப்பால் பெற்றெடுக்கமுடியுமா? என்பதுதான் இன்றுள்ள எதிர்பார்ப்பாகும்.

"அரசியல் கைதிகளை விடுவிப்பதில் இருந்து முக்கிய மான பல விடயங்களில் பின்வாங்கும் நல்லாட்சியரசினால் அதியுச்ச சமஷ்டி முறைத் தீர்வை பெற்றுத்தருவதென்பது சாத்தியப்படாது" என்பது தெரிந்தும்கூட கூட்டமைப்பின் மத்தியில் உள்ள உள்ளக முரண்பாட்டிற்கு முற்றுப் புள்ளிவைக்க சம்பந்தன் இதை எடுத்துவிடுகின்றாரா? அல்லது பொதுமக்களின் மத்தியில் மீண்டும் தமது இருப்பைத் தக்கவைக்க தாளம் போடுகின்றாரா? என்பதுதான் புரியவில்லை. அன்றுதொட்டு இன்றுவரை தமது அரசியல் நிலைப்பைத் தக்கவைக்க தமிழ் அரசியல் தலைவர்கள் எடுத்துவிட்ட சாத்தியப்படாத கோரிக்கைகளால்தான் சிங்கள இனவாதம் கொக்கரிக்க ஆரம்பித்தது. இது தற்போது ஓரளவு குறைந்துள்ளநிலையில் சந்தர்ப்பம் பார்த்து சிலவற்றை சாதிப்பதைவிடுத்து, மீண்டும் இனவாதத்தை இலங்கையில் தூண்டப் போகின்றார்கள்.

தமிழ் மக்களிற்கான தீர்வின் தேவையை சிங்கள மக்களிற்குப் புரியவைக்கவேண்டும்.

"ஒற்றை ஆட்சியாட்சிக்குள் அதிகாரப்பகிர்வா...? அல்லது சமஸ்டியா...? இனப்பிரச்சினைத் தீர்விற்கு வழிகோலும்" எனும் விடயத்தில் கண்டபடி சிலர் கருத்துக்களை வெளியிடுவதால் மீண்டும் இலங்கையில் ஓர் இனவாதப் போர் மூளும் அபாயம் தற்போது ஏற்பட்டு உள்ளது. எது நீடித்தும், நிலைத்தும் நிற்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வு என்பதற்கப்பால் விமர்சனங்களால் வீண்வம்பை விலைக்கு வாங்கப்போகின்றோம் என்பது தெளிவாகின்றது. ஆகவே கடந்த காலங்களில் தமிழ் மக்களிற்கு அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தின் எதிரொலியே இன்றைய அரசியல் தீர்வுக் கோரிக்கை என்பதை சிங்கள சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியது இன்றைய தமிழ் அரசியல் தலைமைகளின் கட்டாய கடமையாகும். ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதற்கப்பால் தமிழர்கள் சமஸ்டியைக் கோரும் அர்த்தமும் அதன் ஆழமும் சிங்களப் பிரஜைகள் மத்தியில் தெளிவு பெறவேண்டும். ஏனெனில் "தமிழ் மக்களிற்கு இடம்கொடுத்தால் மடம் கட்டிவிடுவார்கள்" எனும் எண்ணப்பாடுகள்தான் அன்று தொட்டு இன்றுவரை சிங்கள சிந்தனையில் சிலவற்றிற்குத் தடைபோடும் எடைகொண்ட விடயங்களாக உள்ளன.

ஆகவே அரசியல் தீர்வு தொடர்பான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு முன் அதன் அவசியத்தையும், கடந்த காலத்தில் தமிழ் மக்களிற்கு இடம்பெற்ற அரசியல் ஏமாற்றங்களையும் சிங்கள மக்களிற்குப் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களை அடக்கியாளவோ, தமிழ் மக்களின் தலை நிமிர்வை நிலைநாட்டவோ நாம் இங்கு அரசியல் உரிமையைக் கோரவில்லை என்பதை இதர இனங்களிற்கு தமிழினம் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். நிரந்தர இன முரண்பாட்டைத் தடுக்க இலங்கையில் ஓர் அரசியல் தீர்வு தேவை என்பதை முதலில் ஒவ்வொரு இனங்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

இனமுரண்பாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் மாத்திரமல்ல அனைத்து இனங்களும்தான் என்றால், அனைத்து இனங்களும் ஒரு பொதுமைப்பட்ட ஓர் அரசியல் தீர்விற்கு முன்வரவேண்டியது அனைவரினதும் கட்டாய கடமையல்லவா...? அவ்வாறு ஏற்றுக்கொண்டால் அரசியல் தீர்வு என்பதை தமிழர்களிற்கு மாத்திரம் உரித்துடைய தொன்றாக எண்ணாதீர்கள் எனும் எண்ணக்கருக்களை இதர இனங்கள் மத்தியில் விரிவாக்க வேண்டும்.

இதற்கு அப்பால் சுயலாப அரசியலிற்காக மார்புதட்டி பேசுவதால் இறுதியில் மண்கவ்வும் நிலைதான் மிஞ்சும். நல்லாட்சியரசு எதற்காக தற்போது அரசியல் தீர்வை முன்வைக்கின்றது என்பதன் அடிப்படை வேறு. தென் இலங்கை அரசியல் வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையால் பெரும் பாதிப்பை பெரும்பான்மையினங் களும் அனுபவித்துவிட்டனர். ஆகையால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பது உட்பட சில அரசியல் விடயங்களிற்கு அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தேவைப் படுகின்றது. அதற்குள் இனப் பிரச்சினைத் தீர்வின் விடை யத்தை போட்டு தமது சுய லாப அரசியல் நாடகத்தை அரங்கேற்றுகின்றனர் சிலர்.

2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் ரணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த வேளை ஊடகவியலாளர்கள் ரணிலிடம் தமிழ்மக்களிற்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வா...? அல்லது சமஷ்டியா? கொடுக்கப் போகின்றீர்கள் எனக்கேட்டபோது மௌனமாக இருந்த ரணில் இன்றும் இந்த விடயத்தில் அதே மௌனம் காக்கின்றார்.




சிங்கள அரசியல்வாதி களிடம் இருந்து தமிழர்கள் என்றுமே தமக்கான நிரந்தர தீர்வை வென்றெடுக்க முடியாது என்பதையும் தமிழ்மக்களின் பிரச்சினைகளை என்று சிங்கள மக்கள் புரிந்துகொள்கின்றார்களோ அன்றேதான் தமிழர்களிற்கு இலங்கையில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இதை சிங்கள மக்களிற்கு புரியவைக்கும் அரசியல் பயணத்தை இதுவரை எவரும் முன்னெடுக்கவில்லை. இதுவே இலங்கையின் இனப்பிரச்சினை யின் அடிப்படைப் பலவீனம். தமிழ் மக்களிற்கான தீர்வின் தேவையை சிங்கள மக்கள் புரிந்துகொண்டால் மக்களின் பாதையில் பயணிக்கவேண்டிய சிங்கள அரசியல்வாதிகளால் மறுப்பிற்கு இடமிராது.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

பகுதி -17-

WikiLeaks

# கே.பிக்கு நடந்தது என்ன?

**கே.பிக்கு நடந்தது என்ன?**

அன்பார்ந்த நம் வாசகர்களே! தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர் குமரன் பத்மநாதன் கைது செய்யப் பட்டமை தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வாஷிடங்னில் உள்ள வெளியுறவு தலைமைக் காரியாலயத்துக்கு 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி அனுப்பப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இப்போது பார்ப்போம்.

விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர் குமரன் பத்மநாதன் அல்லது கே.பி கைதுசெய்யப்பட்டு இலங்கை பாதுகாப்பு படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன. ஆயினும் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர்கள் எவரும் இது சம்பந்தமான விபரங்களை தூதரகத்துக்கு சொல்ல விரும்பவில்லை. கே.பி எப்படி கைது செய்யப்பட்டார்? எங்கு தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்? போன்ற விபரங் களை மூடுமந்திரமாகவே இவர்கள் வைத்துள்ளனர்.

ஆயினும் இவர் கொழும்புக்கு அருகில் தடுத்துவைக்கப்பட்டு உள்ளார் என்று தெரிகின்றது. ஆயினும் இவர் கைது செய் யப்பட்ட இடம் தொடர்பாக ஊடகங்கள், அரச தரப்பு ஆகியன கூறுகின்ற தகவல்கள் முரண்படுகின்றன. தாய்லாந்தில் கைது இடம்பெற்றது என்று சிலர் கூறுகின்றனர். மலேசியாவில் தான் கைது இடம்பெற்றது என்று ஏனையோர் கூறுகின்றனர்.

ஆனால் இக்கைது விடயத்தில் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டு இருக்கவே இல்லை என்று தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். அத்துடன் தாய்லாந்தில் கைது இடம்பெறவில்லை என்றும் கூறி உள்ளார்கள்.

### கதை முடிந்தது

கே.பி இப்போது கொழும்பில் இருக்கலாம் என்கிற தகவலை தவிர கைது தொடர்பாக வேறு விபரம் எதுவும் தெரியாது என்று வெளிநாட்டு அமைச்சு செயலாளர் பாலித கோஹண எமக்கு தெரிவித்தார். கே.பியின் கைது விடுதலைப் புலிகளின் கதை முடிந்துவிட்டதையே காட்டுகின்றது என்று கூறினார்.

இன்று மாலை இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் நாணயகார ஊடகவியலாளர் மாநாடு நடத்தினார். பிற்பாடு எம்முடன் பேசினார். கே.பி கொழும்பில் தடுத்து வைக்கப் பட்டு விசாரிக்கப்படுகின்றார் என்று உறுதிப்படுத்தினார். கே.பி.-க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறிய இவர் கே.பி.-க்கு எதிரான குற்றப்பத்திரம் இன்னமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றார்.

கே.பி கடந்த 05 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் என்று இவர் உறுதிப்படுத்தியபோதிலும் கைது இடம்பெற்ற இடத்தை கூறவே இல்லை. ஆனால் கே.பி ஏனையோர் மத்தியில் இலங்கை கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்று நாணயகார கூறினார்.

### போனவர் திரும்பவில்லை!

மலேசியாவில் கோலாலம பூரில்தான் கைது இடம்பெற்றது என்று ஒரு கதை அடிபடு கின்றது. ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜின் செய்தி அறிக்கையின்படி கோலாலம்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பிரித்தானிய பிரஜைகள் இருவரை கே.பி சந்தித்துப்பேசினார், கையடக்க தொலைபேசிக்கு அழைப்பு ஒன்றுவந்தது. மன்னிப்புக்கேட்டு வெளியில் சென்றவர் திரும்பி வரவே இல்லை.

இச்செய்தியின்படி மலேசியாவில் கே.பி கைதுசெய்யப்பட்டு பாங்கொங் கொண்டு செல்லப் பட்டார். ஏனென்றால் இலங்கைக் கும் மலேசியாவுக்கும் இடையில் நாடு கடத்தும் உடன்பாடு கிடை யாது.

### காட்டிக்கொடுப்பு

கே.பி.-யின் வன்முறை அற்ற அணுகுமுறையில் அதிருப்தி அடைந்த புலிகள் இயக்க உறுப்பினர்களே கே.பியின் இடத்தை காட்டிக்கொடுத்தனர் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.


கோஹணவின் கருத்தை பார்க்கின்றபோது கே.பி.யின் கைது அரசாங்கத்தால் மகத்தான வெற்றியாக காட்டப்படலாம். போருக்கு பிற்பாடு புலிகள் இயக்கத்தின் கடைசி தலைவராக கே.பி பார்க்கப்பட்டார். கே.பி.-யின் கைதுடன் புலிகளை முடித்து விட்டனர் என்று அரசாங்கம் உணரக்கூடும். புலிகள் இயக்கத்தில் தற்போது மிஞ்சி உள்ள ஏனைய தலைவர்களோடு பார்க்கின்றபோது கே.பி சர்வதேச பிரசித்திவாய்ந்த கிரிமினல் ஆவார். பிரபாகரனின் மரணத்தை தொடர்ந்து அடுத்த தலைவர்போல கே.பி காட்டிக் கொண்டு செயற்பட்டார். புலிகளின் நிதி சேகரிப்பு வலையமைப்பின் முக்கியமான பகுதி இவரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்று கூறப்படுகின்றது. புலிகள் இயக்கம் அரசியல் அமைப்பாக மாறி தமிழர் உரிமைக்காக அமைதிவழியில் போராடவேண்டிய தருணம் இது என்று கே.பி அறிக்கைகள் விட்டு இருந்தார்.

இவரின் கைது மிஞ்சி உள்ள புலிகள் இயக்கத்தின் மீது எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும்? என்பதை இப்போது கூறமுடியாது. ஆயினும் புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக, அரசியல்ரீதியாக அல்லது ஏதேனும் ஒருவகையில் மீளக்கட்டி எழுப்புகின்ற முயற்சிகளுக்கு இக்கைது பாரிய வீழ்ச்சியாக பார்க்கப்பட வேண்டும்.

(யாத்திரை தொடரும்)




ஊடுருவி



# வளரும் வன்முறை வாசலுக்கு வருமா?

# ISIS



**ஈராக்கின் ISIS தீவிரவாத அமைப்பின் தாக்குதல் பட்டியலில் இந்தியா!**

உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த தீவிரவாத அமைப்பாக 1990 களில் கருதப்பட்டது ஒசாமா பின்லேடனின் அல்-கொய்தா அமைப்புதான். ஆனால் இன்று அதைவிட பலமடங்கு அபாய மானதாக கருதப்படும் அமைப்பு ஒன்று ஈராக்கின் உள்நாட்டுப் போரில் பெரும் வெற்றியை பெற்று வருகிறது.

ஈராக் மற்றும் கிழக்கு சிரியாவில் பெரும் பகுதியை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது. உலகின் எந்த தீவிரவாத அமைப்பும் இவ்வளவு பெரிய வெற்றிகளை தனது காலத்தில் அடைந்ததில்லை. அந்த அமைப்பின் பெயர் Islamic State of Iraq and al-Sham. சுருக்கமாக ISIS என்று அழைக்கப்படுகிறது. Al-Sham என்ற அரபுச்சொல்லுக்கு கிழக்கு கடற்கரை பகுதி அல்லது சிரியா அல்லது டமாஸ்கஸ் என்ற சூழ்நிலைக்கேற்ப பொருள் கொள்ளப்படும்.

2010 முதல் அபு துவா என்று அழைக்கப்படும் அபு பக்கர் அல் பக்தாதி Abu Bakar al-Baghdadi என்பவரின் தலைமையில் செயற்பட்டு வரும் இந்த தீவிரவாத அமைப்பின் நோக்கம் முடிந்தவரை ஷியா முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களை யும் கொல்வதுதான். இந்த அமைப்பானது ஈராக் மற்றும் சிரியா பகுதிக்கு மட்டும் மிரட்டலாக இல்லாமல் சன்னி தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்காக உள்ள சவூதி அரேபியா, ஜோர்டான், துருக்கி போன்ற அண்டை நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த மிகப் பயங்கர தீவிரவாத அமைப்பின் செயல்பாடுகள் தற்போது மேலும் விரிவடைந்து பாகிஸ்தான்வரை நீண்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கக்கூடியவை என்று சொல்ல முடியாவிட்டாலும் இந்தியா போன்ற நாடுகளுக்கு மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. பாகிஸ்தானில் இயங்கிவரும் பல்வேறு தீவிரவாத அமைப்புகளில் ஒன்றான டெஹ்ரிக் இ கிலாபத் (Tehreek-i-Khilafat) டான் பத்திரிகைக்கு அளித்த செய்தியில் தனக்கு ISIS தீவிரவாத அமைப்புடன் தொடர்புண்டு என்பதை முதன் முதலாக வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ISIS அமைப்பு தனது இலக்கை அரபு நாடுகளுடன் நிறுத்திக்கொள்ளாது என்பதும், அது உலகம்முழுவதும் தனது இலக்கை செயல்படுத்த அந்தந்த பகுதிகளில் செயல்படும் தீவிரவாதிகளுடனும், தீவிரவாத அமைப்புகளுடன் கைகோர்க்க ஆரம்பித்துள்ளன என்பதும் தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

**(தொடரும்)**





37

# படிப்பிற்கப்பால் துடிப்பால் வெற்றிகண்ட மண்டேலா

கோர் நாளுக்கு நாள் மண்டேலாவை தன்பக்கம் இழுக்க முயற்சிசெய்து கொண்டே இருந்தான். மண்டேலாவும் கோரின் நட்பின் பிடியில் சிக்குண்டதால் கோர் இழுத்த இழுப்புக்கெல்லாம் மறுக்காமல் சென்று கொண்டிருந்தான். ஒரு முறை மண்டேலாவும் கோரும் விவாதிக்கும் போது, "நெல்சன், கல்வியால் மட்டும் முன்னேற்றம் கண்ட நாடு என்று ஏதாவதொரு நாட்டையாவது உன்னால் சொல்லமுடியுமா?" என்று கேட்க மண்டேலா வாயடைத்துப்போக கோர் தொடர்ந்தான்.

"கல்வி சிறந்ததுதான் நான் மறுக்கவில்லை. ஆனால் அந்த கல்வியையும் பி.ஏ. பட்டத்தையும் வைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்துவிட்டால் நம் இலட்சியம்தான் நிறைவேறுமா? கல்வியை மட்டுமே நாம் நம்பிக்கொண்டிருந்தால் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இலவுகாத்த கிளிகள்போல காத்திருக்க வேண்டியதுதான்" என்று ஒரு குட்டி பிரசங்கமே செய்துவிட்டான். அது உண்மைதான் என்று தோன்றியது மண்டேலாவுக்கு. கல்லூரி புத்தகங்கள் வாயிலாகவும் நூலகத்தில் படித்த வேறு பல புத்தகங்கள் ஊடாகவும் மண்டேலா வரலாறு வாசித்திருந்தான்.

"பேராசிரியர்களும் ஆசிரியர்களும் பல நுணுக்கமாக விஷயங்களை விவாதித்திருக்கிறார்கள். ஆனால் கோர் ஒரே கையசைவில் நான் இதுவரை படித்த கல்வியையே புறக்கணிக்கின்றான். புத்தகங்களை கேள்விக்குள்ளாக்குகிறான். நான் அறிந்துவைத்திருக்கும் உண்மை களை திரிபுகள் என்கிறான். எனக்குச் சற்றும் பரிச்சயம் இல்லாத ஒரு கோணத்திற்கு என் சிந்தனை பார்வையை மாற்றியமைக்க முயல்கிறான். பட்டம்பெற்ற நான் பட்டம் பெறாத அவனிடம் பல சந்தர்ப்பங்களில் தோற்றுப்போகிறேன்" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

கோர் அழைத்துச்செல்லும் ஒவ்வொரு கூட்டமும் ஒரு புது விஷயத்தை மண்டேலாவுக்கு அறிமுகம் செய்துவைத்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மிகவும் துடிப்பாக இருந்தபடியால் மண்டேலாவை கவர்ந்துவிட்டது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கூட்டங்களில் ஆபிரிக்க மக்களை நேரடியாகப் பாதிக்கும் விஷயங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு விவாதித்தார்கள். ஆபிரிக்கர் களுக்கு எதிரான சட்டங்கள், முட்டுக்கட்டைகள், உரிமைகள், வாடகைகள், பேரூந்துக் கட்டணங்கள் போன்ற அனைத்து விடயங்களும் தாமாகவே சரியாகிவிடும் என்று நாம் நம் வேலைகளை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தால் எதுவும் மாறப்போவதில்லை. நம் உரிமை-களை நாம் போராடியே பெற்றாக வேண்டும் என்ற கொள்கையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மண்டேலாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டின.

சில மாதங்கள் பிறந்து மடிந்தன. ஜோங்கிந்தாபா ஜொஹன்னர்ஸ்பெர்க் வந்திருப்பதாகவும் மண்டேலாவை சந்திக்க விரும்புவதாகவும் மண்டேலாவுக்கு ஒரு செய்திவந்தது. அந்த செய்தியை கொண்டு வந்து சேர்த்தது அவனது உற்ற நண்பன் சிசுலு. மண்டேலாவோ வளர்ப்புத் தந்தையான ஜோங்கிந்தாபாவை நீண்டகாலத்திற்கு பிறகு சந்திக்கப் போவதை நினைத்து உச்சிகுளிர்ந்து அகமகிழ்ந்தான். ஆனாலும் அவன் மனதில் பழைய நினைவுகள் வந்து முட்டிமோதி சங்கடத்தையும் பயத்தையும் வரவழைத்தன. அநாதையாக எதிர்காலமே சூனிய மாகிப் போய், வாழ்க்கையே வெட்ட வெளியாய் வெறுமையாகிய நிலையில் தன்னந்தனியாக தத்தளித்துக் கொண்டிருந்த தன்னை தத்தெடுத்து அரவணைத்து பஞ்சணையில் தூங்கவைத்து அழகுபார்த்து சொந்தமகனாகவே நினைத்து வளர்த்து ஆளாக்கிய அந்த அப்பாவி ஜீவனைவிட்டு ஓடி வந்துவிட்டேனே என்ற குற்ற உணர்வு அவனை மென்மேலும் தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கியது. இவன் மனதை அறிந்தவனான உற்ற நண்பன் சிசுலு "மண்டேலா நீ பழையதை எல்லாம் நினைத்து வருந்தாதே. நடந்தவை நடந்தவை

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

யாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற தூயஎண்ணத்துடன் நீ உன் தந்தையை சந்தித்து முதலில் மனம்விட்டு மன்னிப்பு கேள். இப்போது கலங்காதே. நானும் உன் தந்தையை சந்திக்க உன்னுடன் துணைக்கு வருகிறேன்" என்று ஆறுதல் கூறி தேற்றியதும் மண்டேலாவும் சமாதானமடைந்த வனாக தயக்கம், சங்கடம், குற்ற உணர்வு அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு தந்தையை சந்திக்கும் ஆவலுடன் அம்பிலிருந்து புறப்பட்ட வில்லாக சிசுலுவுடன் விரைந்தான்.

# சர்வதேச எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்குமா?



கடந்த முப்பது வருட காலத்திற்குள் பொருளாதாரத் தடை என்கின்ற கடுமையான அரசியல், ராஜதந்திர ரீதியான தண்டனை ஈராக் நாட்டை மட்டுமல்ல ஈராக்கின் பலமான தலைவராக விளங்கிய மறைந்த சதாம் ஹூசேன் அவர்களையும் மீண்டும் வாசகர்களுக்கு கொண்டு வரும். சதாம் அயல் நாடான குவைத்தின்மீது படையெடுத்து சர்வதேச நாடுகளின் கண்டனத்துக்கு உள்ளானார். ஏற்கனவே ஈராக் - ஈரான் யுத்தத்தின்காரணமாக ஈராக்கின் பொருளாதாரம் நலிவுற்ற வேளையில் அமெரிக்காவின் நேரடியானதும் மறைமுகமானதுமான நடவடிக்கைகளினால் ஐ.நா.வின் பொருளாதாரத் தடை ஈராக்கிற்கு எதிராக நிறைவேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2003 இல் அமெரிக்கா ஈராக்கிற்குள் புகுந்தமையும் சதாம் ஹூசேன் கொல்லப்பட்டமையும், இன்று ஈராக் பல பகுதிகளாகப் பிரிந்து காணப்படுவதும் ISIS இன் கோரத்தாண்டவம் நடைபெறும் நாடாக தாழ்ந்துள்ளது.

இந்தப் பின்னணியில் ஈரான் நாட்டுக்கு எதிரான தடைகள் (Sanction) அலசி ஆராயப்பட வேண்டியள்ளது. மன்னர் 'ஷா'வின் ஈரான் அமெரிக்காவின் பேராதரவு பெற்ற பொருளாதாரத்தில் எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி வருமானத்தால் சிறந்து விளங்கியது. எனினும் அயோத்துல்லா கோமேனியின் வழிகாட்டலில் இஸ்லாமிய புரட்சிமூலம் 1979 ஆம் ஆண்டு மன்னர் 'ஷா' பதவி கவிழ்க்கப்பட்டு ஆட்சிமாறியது. இஸ்லாமிய புரட்சித் தீ முடிநாடுகளான சவூதி, ஓமான், கட்டார், ஐக்கிய அரபுக் குடியரசு, பஹ்ரயின் போன்ற நாடுகட்கு பரவி முடியாட்சிகளுக்கு முடிவு வித்திடும் என்கின்ற அச்சத்தினால் இந்நாடுகள் அயோத்துல்லா கொமேனியின் ஆட்சிக் கொள்கைகளுக்கு முடிவு கட்ட முனைந்தனர்.

ஈராக் ஈரானுடன் யுத்தம் ஆரம்பித்தமைக்கு இந்நாடுகளினதும், அமெரிக்காவின் தூண்டுதல்களே காரணம் என்பது அரசியல் வித்தகர்களின் கருத்தாகும்.

இஸ்லாமிய புரட்சியை தொடர்ந்து அமெரிக்கா ஈரானுக்கு எதிரான சில தடைகளை பிரகடனப்படுத்தியது. 1995 இல் மேலும் தடைகளை விஸ்தரித்தது. ஈரான் நாட்டுடன் வர்த்தக தொடர்புபேணும் உலக நாடுகளின் கம்பனிகள் நிறுவனாங்களுக்கும் தண்டனைகளை வழங்குவதே இத்தடைகளின் நோக்கமாகும். அமெரிக்காவின் தடைகள் ஆரம்பித்தல், எண்ணெய், வாயு, பெற்றோலிய இரசாயனப் பொருட்கள், உற்பத்தி சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம், பொருட்களின் ஏற்றுமதி, ஈரானிய இராணுவத்துடன் வர்த்தக தொடர்பு பேணும் வேறுநாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவே விதிக்கப்பட்டன. அத்துடன் வங்கி காப்புறுதி, கடல் வாணிபம் ஆகியவற்றையும் தடைகள் உள்ளடக்கின. அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டம் இத்தடைகளின் மூலம் ஈரானைத் தனிமைப்படுத்தி சர்வதேச அழுத்தங்களால் ஈரான் அரச கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.

ஈரான் யுரேனியம் செறிவாக்கும் கருத்திட்டத்தை அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், சந்தேகத்துடன் நோக்கின. யுரேனிய செறிவாக்கல்மூலம் ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கக் கூடும் என சந்தேகித்தனர். ஆனால் யுரேனியம் செறிவாக்கல் ஈரானிய மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், வைத்திய நோக்கங்களுக்காகவும், பயன்படுத்துவதே ஈரான் அரசாங்கத்தின் திட்டமென வாதித்தது. ஈரான் இந்த அழுத்தங்களுக்கு பணியமறுத்ததைக் காரணங்காட்டி 2006 இல் ஐ.நா. பாதுகாப்பு சபை (UNSC) ஈரான் மீது தடைவிதிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதனால் ஈரானின் பொருளாதாரம் தாழ்வுற்று, மக்களின் வாழ்க்கைத்தரம் குன்றியது. 2006 க்கு முன்னர் பல தீர்மானங்களை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றி ஈரான் நாட்டின் மீதான இறுக்கமான பிடியை அதிகரித்தது. அதேவேளை அரசியல், இராஜதந்திர பேச்சுவார்த்தைகளும் மறுபக்கமாக நடந்தன. 2006 இல் உலகின் பலமிக்க நாடுகளான (பாதுகாப்புச் சபை நாடுகள்) அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகளுடன் ஜேர்மனியும், மொத்தமாக ஆறு நாடுகளும் ஈரானுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஈடுபட்டன. ஆகையால், இந்த ஆறு நாடுகளையும் (P5+1) எனவும் அழைக்கப்படுகிறது. பேச்சுவார்த்தைகளின் பலனாக 02.04.2015 இல் இணக்கம் ஒன்று ஏற்பட்டது. இணக்கப்பாட்டின்போது ஒரு கட்டமைப்பு ஏற்பட்டது. இதன் பிரகாரம் ஈரான் தனது அணு உற்பத்திகளை ஆகக் குறைந்தது பத்து வருடங்களுக்கு மட்டுப்படுத்த இணக்கம் தெரிவித்தது. இதனை கருத்திற்கொண்டு P5+1 நாடுகளின் சிபாரிசுகள் ஐ.நா. பாதுகாப்புச் சபை 16.01.2016 இல் ஈரானுக்கெதிரான பொருளாதாரத் தடைகளை விலக்கியது. அத்துடன் இதே தினத்தில் சர்வதேச அணுசக்தி நிலையம் ஈரான் தனது அணு ஆயுத உற்பத்தி கட்டமைப்பினை செயலிழக்கச் செய்துள்ளது என சான்றுரைத்தது. ஐ.நா. பாதுகாப்புச்சபை (16.01.2015) தீர்மானத்தின் பிரகாரம்:

01. வெளிநாடுகளில் முடக்கப்பட்டு உள்ள நிதி, சொத்துக்களை ஈரான் மீளப்பெறும். கிட்டத்தட்ட 100 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

02. பெற்றோலிய உற்பத்தி பொருட்களை ஈரான் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

03. வெளிநாட்டு நிறுவனங்கள் ஈரானில் எண்ணெய், வாயு, மோட்டார் வாகன உற்பத்தி, ஹோட்டல், வேறு துறைகளில் மூலதனமிடுவது அனுமதிக்கப்பட்டு உள்ளது.

04. சர்வதேச வங்கி முறைமையின் மூலம் ஈரான் சர்வதேச வர்த்தகத்தை ஈரான் ஆரம்பிக்கமுடியும்.

மேலே கூறப்பட்ட அம்சங்களும் எண்ணெய்வள நாட்டின் முதுகெலும்பை உடைத்தெறிந்த நிலையிலும், ஈரான் மக்கள் கொடுத்த விலை மிக அதிகமானது.

ஈரான் மீதான பொருளாதார தடைநீக்கமும் ஈரானின் அணுத்திட்டங்கள் தொடர்பான விட்டுக்கொடுப்புக்களும் ஈரானிய அமெரிக்க இருதரப்பு உறவுகளிலும் ஈரானிய மேற்கு நாடுகளின் உறவுகளில் சாதகமான மாற்றங்களையும் ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. ஈரான் அமெரிக்க மேற்கு நாடுகளின் உறவுநிலை மாற்றங்கள் மத்திய கிழக்கில் ஈரான் சவுதி அரேபியா முறுகல்நிலையைத் தணிப்பதற்கு உதவும். சிரியாவிலும், ஈராக்கிலும் அராஜகம் நடத்திவரும் ISIS மீதான ஒருங்கிணைந்த எதிர்த்தாக்குதல் அதிகரிக்கக் கூடும்.

முன்னர் அமெரிக்க ஈரான் உறவுகள் சீர்கெட்டு எதிரும் புதிருமாக, அமெரிக்கா ஈரான் மீது ஈராக் பாணியிலான படையெடுப்பை நிகழ்த்துமா என்ற ஐயம் பல தரப்பினரிடையே காணப்பட்டது. ஈரான், லிபியா, வெனிசுலா ஆகிய நாடுகளை அமெரிக்கா போக்கிரி நாடுகள் என கண்டித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் ஈரானுடன் சில வர்த்தக தொடர்புகளை பேணியதால் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரல் காணப்பட்டது. மலிவான விலையில் ஈரானிடம் எண்ணெய் உற்பத்திகளை கொள்வனவு செய்வதன் மூலம் இலங்கை தனது வெளிநாட்டு செலவாணிப் பிரச்சினைகளை கையாள முயன்றது. எனினும் பொருளாதாரத் தடை நீக்கியமை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சில நிவாரணங்களை வழங்கும். எனினும் குறைந்து செல்லும் சர்வதேச எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்குமா என்ற கேள்வி மீளவும் விவாதிக்கப்படுகிறது.

—தேவ தர்மா—

# புதிய அரசமைப்பு எப்பவோ முடிந்த காரியம்!

**"கிழட்டுச் சிங்காரிக்கு அரிதாரம் பூசிய மாதிரி பழைய மாகாணசபைக்கு கொஞ்சம் 'மேக் அப்' செய்து அனுப்பப் போகிறார்கள். அவ்வளவுதான். அவ்வளவு மட்டும்தான். "காணி அதிகாரம் என்ற பெயரில் சில மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படும். பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்திலான பொலிஸ் அதிகாரமும் உண்டு. எனினும் அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள மத்திய அரசின் அதிகாரிகளினால் தேவைப்படும் சமயங்களில் கட்டுப்படுத்தப்படும் விதத்தில் அந்த அதிகாரமும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.**

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் என்றதும் நான்கு மகா வாக்கியங்கள் பற்றி நினைவுக்கு வரும். அந்த நான்கினுள் பிரதானமானது "எப்பவோ முடிந்த காரியம்" என்பதாகும்.

இலங்கைக்கு புதிய அரசமைப்பு கொண்டுவருவது பற்றிய விடயத்தைக் குறிப்பிடும்போது இந்த மகாவாக்கியம்தான் உண்மை என்று கூறலாம் போன்று தோன்றுகின்றது.

இலங்கையின் புதிய அரசமைப்பு என்பது எப்பவோ முடிந்த காரியம். எல்லாமே தீர்மானமாகிவிட்டன என்கின்றன கொழும்பு அரசின் உள்வீட்டு உயர்மட்டங்கள்.

இலங்கைக்கு புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்தும்நோக்கில் நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய கவுன்ஸிலாக மாற்றும் பிரேரணை இப்போதுதான் நாடாளுமன்றுக்கு வந்திருக்கின்றது. இனித்தான் விடயங்கள் ஆராயப்படும் என்பதுபோல ஒரு தோற்றம் வெளியில் காட்டப்படுகின்றது.

ஆனால் அதுமுற்றிலும் தவறு. எல்லாமே. எப்போதோ தீர்மானமாகி. இறுதியாகிவிட்டன என்பதை அடித்துக் கூறுகின்றன கொழும்பு அரசின் உயர்மட்டங்கள்.

"ஒற்றையாட்சிக் கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஐக்கிய இலங்கைக்குள். பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில், இணைந்த வடக்கு. கிழக்குக்கு, அதியுச்ச சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும்" என்று இப்போதும்கூட அடிக்கடி ஒரே போடாகப் போடுகிறார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

ஆனால் அவரது 'ஏவல் பிராணியான' சுமந்திரன் மட்டும் இப்போது இந்த விடயத்தில் அதிகம் பம்முகின்றார்; அடக்கி வாசிக்கின்றார். ஐக்கிய இலங்கை பற்றிப் பேசுகின்றார். ஆனால் சமஷ்டி குறித்து நீட்டி முழக்குவதில்லை. சமஷ்டிச் சாயல் (Federal Characteristics) பற்றித்தான் சாடைமாடையாகத் தொட்டு நிற்கின்றார். ஒற்றையாட்சி முறைமையை அடியோடு நிராகரிக்கின்றோம் என்று அவர் இப்போதெல்லாம் திட்டவட்டமாகக் கூறுவதில்லை. இணைந்த வடக்கு. கிழக்குத் தாயகம் பற்றியும் அவர் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. எல்லாவற்றுக்கும் ஒருகாரணம் உண்டு.

மறுபுறத்தில் நாட்டின் தலைவர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று போகுமிடம் எங்கும் உரத்த குரலில் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறுகின்றார்கள். அதற்கும் காரணம் உண்டு.

அது என்னவென்றால், நாட்டின் புதிய அரசமைப்பு வடிவம் எத்தகையது என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்ட விடயம் என்பதுதான்.

**– நன்றி: வசிட்டன் –**

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான 'நல்லாட்சிக்கான அரசு' தனது ஓராண்டு ஆட்சிக் காலத்துக்குள்ளேயே புதிய அரசமைப்புக்கான வடிவத்தை ஓரளவு இறுதியும் உறுதியும் செய்துவிட்டது என்பதுதான் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் இன்று பகிரங்கமாகிவரும் உள்வீட்டு உண்மையாகும்.

ஆளும் தரப்பின் தேசியப் பட்டியல் எம்.பியான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ணவின் வழிகாட்டுதலில் புதிய அரசமைப்புக்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ள நிபுணர் குழு பெரும்பாலும் புதிய அரசமைப்பு வடிவத்தைத் தயார் செய்து முடித்து விட்டது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 'தானைத் தலைவன்' சுமந்திரனும் அங்கம்வகிக்கின்றார் என்பதுதான் சோகம் கலந்த உண்மை.

"உத்தேச புதிய அரசமைப்பு, திட்டவட்டமாகவும் தெளிவாகவும் ஒற்றையாட்சியை வலுப்படுத்தி, உறுதிப்படுத்தி நிற்கின்றது. அதில் சமஷ்டியும் கிடையாது. சமஷ்டிச் சாயலும் கிடையாது. வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. இது சுமந்திரனுக்கும் சம்பந்தனுக்கும் ஏன் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும்கூட - நன்கு தெரிந்த உண்மைகள்தான்.

"கிழட்டுச் சிங்காரிக்கு அரிதாரம் பூசிய மாதிரி பழைய மாகாண சபைக்கு கொஞ்சம் 'மேக் அப்' செய்து அனுப்பப்போகிறார்கள். அவ்வளவுதான். அவ்வளவு மட்டும்தான்.

"காணி அதிகாரம் என்ற பெயரில் சில மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படும். பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்திலான பொலிஸ் அதிகாரமும் உண்டு. எனினும் அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள மத்திய அரசின் அதிகாரிகளினால் தேவைப்படும் சமயங்களில் கட்டுப்படுத்தப்படும் விதத்தில் அந்த அதிகாரமும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

"தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளபடி, மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான துறைகள் தொடர்பான வரையறுக்கப்பட்ட தனித் தனிப் பட்டியல்கள் தொடர்ந்து இருக்கும். ஆனால் இரண்டு அதிகார மையங்களுக்கும் பொதுவான துறைகள் என்ற பொதுப் பட்டியல் முறை நீக்கப்படும்"

இவையே புதிய உத்தேச அரசமைப்பு நகல் வடிவத்தில் உள்ளடங்கியுள்ள பிரதான அம்சங்கள் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் உண்மையைப் போட்டுடைத்துள்ளன.

இது தெரியவந்ததும்தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதைபதைத்து, பதற்றமடைந்து, தமிழ் மக்கள் பேரவை என்று ஒன்றைத் தோற்றுவித்து, விடயத்தை, சவாலை எதிர்கொள்ளத் துடியாய் துடிக்கின்றார்.

புதிய அரசமைப்பு முயற்சி என்பது நாட்டின் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் எத்தனமாக அமையவேயில்லை என்பதும் இப்போது அம்பலமாகும் நிஜமாகும்.

தென்னிலங்கை அரசின் நெருக்கடிகளுக்கான ஒரு தீர்வாகத் தான் அது இப்போது கொண்டு வரப்படுகின்றதேயொழிய. நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு தீர்க்கமான எத்தனமாக முயற்சியாக அது முன்னெடுக்கப்படவேயில்லை என்றும் கொழும்பு உயர் அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை, சீர்கெட்டுச் சென்றுள்ள நீதித்துறை முறைமை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தபடி கட்சி அணி தாவும் சூழல் ஆகிய நெருக்கடிகளால் எழுந்துள்ள அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான முயற்சியாகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தென் இலங்கை அரசியல் தலைமைகள் பிரதானமாக நோக்குகின்றன.

முழு நாட்டையுமே பல தசாப்த கால யுத்த பேரழிவுக்குள் தள்ளி பெரும் நாசத்தை ஏற்படுத்திய இனப்பிரச்சினை நெருக்கடி. இராணுவரீதியில் முறியடிக்கப்பட்டு விட்ட வெற்றிப் பெருமிதத்தில் மிதந்து கொண்டிருக்கின்றது தென்னிலங்கை. அத்தகைய நிலையில் இனப்பிரச்சினை என்ற ஒரு நெருக்கடி இருப்பதாகக் கருதவோ அல்லது அதற்கு தீர்வு ஒன்று அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப் படுகின்றது என்று உணரவோ தென்னிலங்கை தயாரில்லை.

ஆகவே உத்தேச. புதிய அரசமைப்பில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற விவகாரத்தை முக்கியத்துவம் கொடுத்து ஆராயவோ அல்லது பரிசீலிக்கவோ வேண்டிய தேவையும் அதற்கு இல்லை.

இதுதான் யதார்த்தம். இதுதான் உண்மை. இன்னும் சில மாதங்களுக்குள் புதிய அரசமைப்பு என்ற ஆவணம் முகிழ்ந்துவிடும். அப்போது உண்மைகள் எல்லாம் அம்பலமாகிவிடும்.

அது தெரிந்தும் உண்மை நிலையை உணர்ந்தும் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் "ஒற்றையாட்சியை ஏற்கோம் சமஷ்டித் தீர்வே ஒரே முடிவு. இணைந்த வடக்கு - கிழக்கு உறுதிப்படுத்தப்படும்" என்று இல்லாம் இன்னும் கதைவிட்டு "கயிறு கொடுத்து" புலுடா பண்ணிக் கொண்டிருப்பதுதான் விஷமத்தனம்.

அடுத்த சில மாதங்களுக்குள் உண்மை அம்பலமாகும்போது விடயம் புட்டுக்கொள்ளும்போது தமது முகத்தை அவர் எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்வார் என்பதுதான் கேள்வி.

# குழந்தையினுடைய கல்வி வளர்ச்சிக்கு பரம்பரை, சூழல் இரண்டினதும் பங்களிப்புகள்...

### குழந்தையின் கல்வி வளர்ச்சியில் சூழலின் பங்களிப்பு

குழந்தையின் வளர்ச்சியையும், நடத்தையையும் கட்டுப்படுத்தும் ஏதுக்கள் 'சூழ்நிலை' எனப்படும். ஒரு குழந்தையின் பிறப்பு முதல் இறப்புவரை ஒருவனைப் பாதிக்கும் எல்லா வகைத் தூண்டல்களின் தொகுப்பும் சூழ்நிலையும் அடங்கும். சூழ்நிலை ஏதுக்கள் ஒருவனது வளர்ச்சியை ஊக்குவித்தோ, தடுத்தோ செயற்படலாம். ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில் சூழ்நிலையின் பங்களிப்பை நோக்கின்,

- X பிறப்பிற்கு முந்திய சூழ்நிலை
- X பிறப்பிற்கு பிந்திய சூழ்நிலை
- X குடும்பச் சூழ்நிலை
- X பௌதீகச் சூழ்நிலை
- X உயிரியல் சூழ்நிலை
- X பௌதீகச் சூழ்நிலை

### பிறப்புக்கு முந்திய சூழ்நிலை

பிறப்பிற்கு முந்திய சூழ்நிலை என்பது தாயின் வயிற்றினுள் குழந்தை வளரும் நிலையைக் குறிக்கும். தாய் உண்ணும் உணவின் தன்மை, அவளது உடல்நிலை, உள்ளத்தில் எழும் மனவெழுச்சிகளின் தன்மை போன்றன யாவும் குழந்தையின் பிறப்புக்கு முந்திய சூழ்நிலையில் அடங்கும். குழந்தை கருவில் இருக்கும்போது தாம் ஆரோக்கியமாகவும், போசாக்குள்ள உணவுகளை உட்கொள்வதோடு உளப்பாதிப்புக்கள் ஏற்படாது பார்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறான சூழ்நிலையில் உருவாகும் குழந்தை ஆரோக்கியமாகவும், துடிப்பாகவும் வளர்ச்சியடையும். குழந்தையின் நிறை அவனது நுண்ணறிவு வளர்ச்சியில் தாக்கத்தை செலுத்துகின்றது. குழந்தையின் கல்வி வளர்ச்சிக்கு ஆரோக்கியம், போசாக்கு என்பன முக்கியமானது. இவற்றை கருவிலே பெற்றுக்கொண்ட குழந்தை திடகாத்திரமான, நல்ல கல்வியறிவுடைய குழந்தையாக வளர்ச்சியடைகின்றது.

### பிறப்புக்கு பிந்திய நிலை குடும்ப சூழ்நிலை

ஒரு குழந்தையின் ஆரோக்கியம், மகிழ்ச்சிகரமான வளர்ச்சி என்பவற்றுக்கு குடும்பம் என்ற அமைப்பை அடித்தளம், ஆரோக்கியமான குடும்ப சூழலில் வாழும் பிள்ளை உடல், உளநலத்துடன் வளரும். அமைதியான நல்ல குடும்ப சூழலில் அன்பு, ஆதரவு, அரவணைப்பு மேலோங்கிக் காணப்படும். அத்துடன் கீழ்படிவு, புரிந்துணர்வு, மதிப்பு, பாராட்டு போன்றவை கிடைக்கக் கூடியதாக அமையும். இவ்வாறான தன்மை குழந்தையின் கல்வி வளர்ச்சியில் ஆரம்ப அடித்தளமாக விளங்குகின்றது. ஆரோக்கியமான குடும்பங்கள் கல்வியில் உயரவேண்டும் என்ற எண்ணம், இலக்கு இருக்கும். அதற்காக தமக்குள் சில கட்டுப்பாடுகளையும் ஒழுங்குவிதிகளையும், தியாகங்களையும் கொண்டிருப்பர்.

சிறப்பார்ந்த குடும்பச் சூழலிலே குழந்தைகள் மொழிப் பிரயோகம், சுத்தம், உரையாடல், நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல நடத்தை போன்ற வற்றைக் கற்றுக் கொள்கின்றனர். அன்பை வெளிக்காட்டல், உற்சாக மளித்தல், உடல்நலத்தில் கவனமெடுத்தல், உணர்வுகளை கட்டுப்படுத்தல், அறநெறி ஒழுக்க விழுமியங்கள், இறையுணர்வு போன்ற விடயங்களையும் குடும்பச் சூழலிருந்து குழந்தை கற்றுக் கொள்கின்றது.

குழந்தை உளவியலாளர்களின் ஆய்வு முறைகளின்படி குழந்தையின் அறிகையாற்றல் வளர்ச்சியிலே தந்தை, தாயின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் கல்வி, கல்விசார் ஊக்குவிப்புகள், குடும்பத்தின் சமூக, பொருளாதார கட்டுமானம் போன்றவை நேரடியாக செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய குடும்பச் சூழலில் வளரும் குழந்தையின் கல்வி வளர்ச்சி மேலும் ஊக்குவிக்கப்படுகின்றது. அன்பு, ஆதரவு, அரவணைப்பு அற்ற சூழலிலும் சிதைந்த குடும்பங்களிலும் வாழ்ந்த சிறுவர்களின் கல்வி அடைவுகளும், நுண்மதித் திறனும் பாதிப்படைவதாக ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அவ்வாறே வறுமையின் உச்சம், அதீத குழப்பமுள்ள பெற்றோர் வாழும் சூழல் போன்றவற்றைப் பின்புலமாகக் கொண்ட சிறுவர்களின் அடைவுகளும் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

கற்றலுக்கு மிகப் பிரதானமானது மொழி. அந்த மொழியாற்றலை வளர்க்கும் ஆரம்ப இடம் குடும்பச் சூழல், நல்ல மொழியாற்றலை, மொழித்திறன் விருத்தியைப் பெற்ற குழந்தைகள் கல்வியில் சிறப்பான கல்வி அடைவைப் பெறமுடிகின்றது. எனவே குடும்பச் சூழல் பிள்ளையின் கற்றற் செயற்பாட்டுக்கு உந்துசக்தியாக அமைகின்றமை நோக்க முடிகின்றது.

### பாடசாலைச் சூழல்


குழந்தையின் கற்றற் செயற்பாடு களிலும் விழுமியச் செயற்பாடுகளிலும் பாடசாலையின் பௌதீகச் சூழல், உயிரியற் சூழல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

பௌதீகச் சூழல் எனும்போது பாட-சாலைக் கட்டிடங்கள், வகுப்பறைகள், பிள்ளைகளுக்கு வசதியாகவும், தேவை-களைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வேண்டும். குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைத் தளபாடங்கள் முக்கிய பங்களிப்பை வகிக்கின்றன. மாணவரது வயது வளர்ச்சிக்கு ஏற்ப கதிரை, மேசை ஏனைய தளபாடங்களும் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலையின் உயிரியற் சூழலில் பூங்கா நிழல்தரும் மரங்கள், குழந்தைகளின் கல்விச் செயற்பாட்டில் முக்கிய இடம்வகிக்கின்றது. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய பூங்கா, தோட்டம் மரநிழல் போன்றன குழந்தைகளின் உள்ளங்களை புத்துணர்ச்சிபெறச் செய்கின்றன. குழந்தைகளின் உடலும், உள்ளமும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். இவ்வாறான சூழல் குழந்தையின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும்.

குழந்தைகள் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வழிகாட்டும் இடமாக பாடசாலைச் சூழல் அமைகின்றது. சுத்தமான குடிநீர், மலசலகூடம் போன்ற அடிப்படைத் தேவைகளை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதை கற்பித்து நடைமுறைப்படுத்த வழிப்படுத்த வேண்டும். இது வாழ்நாள் முழுவதும் தொடர்வதற்கு கற்றல் வசதியளிக்கின்றது.

குழந்தைகளின் உடல் - உள ஆரோக்கியத்தையும் பேணுவதில் பாடசாலை மைதானமும் பங்களிப்புச் செய்கின்றது. குழந்தைகள் சுதந்திரமாக விளையாடுவதற்கான வாய்ப்புக்கள் வசதிகள் ஏற்படுத்திக் கொள்வதன்



மூலம் கற்றல் ஊக்கம் பெறவும், திறன்களை வெளிப்படுத்தவும் சந்தர்ப்பமளிக்கின்றது. விளையாட்டுகளூடாக குழந்தைகள் அறஒழுக்கங்கள், கட்டுப்பாடுகள், பால்வேறுபாடு போன்றவற்றைக் கற்பதற்கு பாடசாலை விளையாட்டுக் கள் துணை செய்கின்றன. பிள்ளைகள் தம்மைப்பற்றிய தற்காட்சியை வளர்த்துக் கொள்வதற்கும் விளையாட்டுக்கள் துணை செய்கின்றன.



குழந்தைக்கு பாடசாலைச் சூழலை சிறப்பாக அமைப்பதன்மூலம் பரம்பரையில் ஏற்படுகின்ற சில குறைபாடுகளைக்கூட நிவர்த்தியாக்க முடிகின்றது. குழந்தையின் நுண்மதியாற்றல் பரம்பரையில் மட்டுமல்லாமல் சூழலிலும் பெரும் பங்கு தங்கியுள்ளது. குழந்தைகளின் ஆற்றல்கள் நல்ல பண்புகள் சிறப்பாக வளர்ச்சி பெறக்கூடிய கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்கும் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. பாடசாலைச் சூழலானது சிறப்பாக அமைகின்றபோது குழந்தைகள் மிக விருப்புடன் கற்கும் திறன் அதிகரிக்கின்றது. பாடசாலைச் சூழல் குழந்தைகள் கல்வி கற்பதற்குப் பொருத்தமாக, அழகாக, கவர்ச்சியாக அமைகின்ற போது பிள்ளைகள் ஆர்வத்துடனும் விருப்புடனும் கல்வி கற்க வருகின்றனர். இதனால் அவர்களின் கற்றல் வளர்ச்சி ஏற்படுகின்றது.

குழந்தைகளின் ஆரம்ப சூழலில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக விளங்குவது முன்பள்ளிகள். முன்பள்ளிகள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றது. முன்பள்ளிகள் குழந்தைகள் தொழிற்படுவதற்கான தயார்நிலை, கற்பதற்கான தயார்நிலை தொழிற்பாடுகளிலே பங்குபற்றல் என்பன குழந்தைகள் வாழும் குடும்பச் சூழல், வாழும் அயற்சூழல், பொருளாதார நிலை என்பவற்றுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன. முன்பள்ளிக் கல்வியானது குழந்தைகளிடம் தன்னம்பிக்கை, தற்துணிவு, தொடங்கும் ஆற்றல், வெட்கமற்ற சுயவெளிப்பாடு என்பவற்றை வளர்க்கின்றன.

அந்தவகையில் குழந்தையின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைச் சூழலின் பங்கு மிக முக்கியமானதாகும். ஏந்த ஒரு குழந்தையும் எப்படியான பரம்பரையிலிருந்து வந்ததாயினும் குழந்தை உயர்வான நற்பண்புகளையும், ஒழுக்கவிழுமியங்களையும், கீழ்படிவுகளையும் வெளிப்படுத்தும் இடம் பாடசாலைச் சூழலாகும். சிறந்த கல்விமுறை கற்பித்தல் செயற்பாடுகள் நல்ல முறையில் நடைபெற அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது அதிபர், ஆசிரியர்கள் பணியாகும்.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பரம்பரை, சூழல் இரண்டுமே பங்களிப்புச் செய்கின்றன. குழந்தையின் வளர்ச்சியானது பரம்பரை, சூழல் இரண்டினதும் இடைவினையால் எழுவதாகும். உடற்பண்புகள் அறிவு சார் பண்புகளில் பரம்பரை சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றன.

குழந்தையின் பரம்பரையின் உயிரியல் மரபில் இருந்து பெறும் பண்புகள் சிறப்பாகச் செய்வதற்கு பாடசாலைச் சூழல், சமூகச் சூழல்மூலம் கிடைக்கும் நுண்மதியும் வேண்டப்படும் ஒன்றாகும். எனவே குழந்தையின் கல்வி வளர்ச்சியில் பரம்பரை இயல்புகளும் சூழல் இயல்புகளும் இணைந்து செயற்படுகின்றன. எனவே குழந்தையினுடைய கல்வி வளர்ச்சிக்கு பரம்பரை, சூழல் இரண்டினதும் ப்ங்களிப்பு நிறைவாகச் செல்வாக்கு செலுத்துகின்றமை தெளிவாகும்.

(முற்றும்)

T.தவப்பிரியா (ஆசிரியர்)
மே/மா ஹொரண எல்லகந்த தமிழ் மகா வித்தியாலயம்

உயிரினங்கள் அனைத்திடையேயும் குறிப்பாக விலங்கு முதலியவற்றிடையே இத்தகைய ஆண் - பெண் பாலுணர்வு எந்த அளவுக்கு அழுத்தமாகவும் ஆழமாகவும் இடம்பெற்றிருக்கிறது என்பதையும், ஊர்பேர் தெரியாத தலைவனையும் தலைவியையும் இவ்வுணர்வு என்ன பாடு படுத்துகிறது என்பதைப் பற்றி இதுகாறும் கண்டோம். இனி, குறிப்பிட்ட ஆண் - பெண்ணுக்கு இடைய இவ்வுணர்வு என்ன விளைவை உண்டாக்கிற்று என்பதை இலக்கியங் களில் அமைந்திருக்கிறபடி காண்போம்.

விசுவாமித்திரருடன் இராமனும் இலக்குவனும் மிதிலை நகரத்தில் சென்றுகொண்டிருக்கிறார்கள். கன்னிமாடத்தில் அன்னம் ஆடும் துறையை நோக்கில் பேரெழில் பரவச் சீதை நிற்கிறாள். அந்தச் சீதையைக் கண்டவர்கள் அவளுடைய அழகு எல்லைகாரணமாக, மண்ணுலகத்தார் இந்த அழகை ஓயாமல் தொடர்ந்து கண்டு அனுபவிப்பதற்குத் தேவர்களைப் போல இமையாத கண்களைப் பெற்றோமில்லையே என்று குறையுறும் படியாகவும், தேவர்களோ தாம் இமையா நாட்டம் பெற்றிருந்தபோதிலும் அத்தகைய கண்கள் இரண்டே ஆதலின் அவை அவளுடைய அழகினை முற்றிலும் ஒருங்கே பார்க்கப்போதாவே என்று குறையுறும்படியாகவும், சீதையின் அழகு அமைந்திருக்கிறது. அழகனும் ஓர் அணியும் அழகுபெற நின்ற பெண் கனியை வீதி வழியே சென்று கொண்டிருந்த இராமன் காண்கிறான். அதேசமயத்தில் சீதையும் அவனைப் பார்க்கிறாள். இப்படி ஒருவர் தம் கண்களால் மற்றவரைக் காண்பதை, ஒருவருடைய கண்கள் மற்றவர் கண்களைக் கவ்வின என்று கம்பன் கூறுவான். ஒன்றை மற்றொன்று கவ்வுமானால் எதற்காக அப்படிக் கவ்வுகிறது என்ற கேள்வி தானாகவே பிறக்கிறது. கவ்வுகின்ற ஒன்று கவ்வப்பட்டதை உண்டு அனுபவிக்க விழைகிறது. இங்கே கவ்வியதும் கவ்வப்பட்டதும் கண். அத்தகைய நிலையில் ஒருவர் கண்கள் மற்றவர் கண்களை அனுபவிப்பதென்பது எப்படி? அந்த ஒருவர் கண்கள் மற்றவர் கண்களின்மூலமாக ஊடுருவிச் சென்று உள்ளே புகுந்து இடம்பெறுவிடுவதுதான்.

இப்படி ஒருவர் கண்கள் மற்றவர் கண்களைக் கவ்வி உண்ணும்போது, உணர்வுதானாகவே இயங்கத் தொடங்கி விடுகிறது. பெண்ணின் உணர்வு அவளிடத்திலே தங்காது துள்ளிக் குதிக்கிறது. அதுபோலவே ஆணுடைய உணர்வும் அவனிடத்துத்தங்காது பாய்ந்து வெளிப்படுகிறது. இப்படி வெளிப்படும் இருவர் உணர்வுகளும் ஒன்றிவிடும்போது, ஒருவருடைய கண்கள் மற்றவர் கண்களைக் கவ்வி உண்ணும் அனுபவ நிறைவு பெற்றுவிடுகிறது.

**- காத்தார் -**

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இருக்கும் காதல் பிணைப்பினைக் கண்கள் வெளிப்படுத்தும் அளவுக்கு வாய்ச் சொற்கள் வெளிப்படுத்த சக்தியற்றுவிடுகின்றன. ஆகவேதான் வள்ளுவரும்,

**"கண்ணோடு கண்ணினை நோக்கு ஒக்கின்வாய்ச் சொற்கள்**
**என்ன பயனும் இல"**

என்று கூறுகின்றார். இங்கே இராமனுடைய கண்களும் சீதையுடைய கண்களும் ஒன்றையொன்று கவ்வி உண்ணவே செய்துவிடுகின்றன. அத்தகைய செயலின் காரணமாக இருவருடைய உணர்வும் ஒன்றி விடுகின்றன. உணர்வுகள் ஒன்றியவிடத்து அந்த ஓர் உணர்வு மற்றோர் உணர்வை எப்படி அனுபவிக்கிறது என்பதை எடுத்துச்சொல்வதற்கே இடமில்லாமல் போய்விடுகிறது. அனுபவிப்பதும் அனுபவிக்கப்படுவதும் அனுபவமும் ஒன்றிவிடுகிற நிலை அது.

இத்தகைய நிலை ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மாத்திரம் உண்டாகிறது என்பதில்லை. ஆண்டவனுக்கும் அடியவனுக்கும் இடையேயும் உண்டாகிறது. ஆனால் இந்த ஒன்றிவிட்டநிலை தொடர்ந்து நீடிக்குமானால் ஆண் - பெண் என்ற வேறுபாடும், அதன்காரணமாகப் பிறக்கும் உணர்ச்சித்துடிப்புகள் இல்லாமலேயே போய்விடும். அதுபோலவே ஆண்டவன் வேறு, அடியவன் வேறு என்பதுபோய் இருவருக்குமிடையேயுள்ள பக்திப் பிடிப்பும் தனிப்பட்டு எடுத்துக்கூற முடி யாமல் போய்விடும். இவ்விரு நிலையையும் ஒருங்கே உணர்த்துமாப் போல மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில் அழகாகச் சொல்லுவர்.

தலைவியோடு கூடிச் சொன்னலம் கடந்த காமப்பேரின்பத்தில் திளைத்த தலைவன், தான்பெற்ற இன்பத்தின் இயல்பைக்கூறி மகிழ்கிறான். உண்மையில் அவனும் அவளும் ஒருவரேயாவார். என்றாலும் பிரித்துப் பார்த்தாலொழிய இன்பத்தை நுகரமுடியாது. ஆண்டவனுக்கும் உயிருக்குமிடையே உள்ள தொடர்பு இத்தகைத்தே. இவற்றைச் சேர்த்து,

**சொற்பால் அமுது இவள் யான் சுவை**
**என்னத் துணிந்து இங்ஙனே**
**நற்பால் வினைத் தெய்வம் தந்தின்று**
**நான் இவளாம் பகுதி**
**பொற்பு ஆர் அறிவார், புலியூர்ப் புனிதன்**
**பொதியில் வெற்பில்**
**கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே!**

என்று மாணிக்கவாசகர் பாடுவார். இதன்படி தலைவர், "பொருள் ஒன்றாயிருந்தும் சொல்லளவிலே அமுது என்றும் அதன் சுவை என்றும் இரண்டாகப் பகுக்கப்படுதல் போன்று, உண்மையில் நானும் இவளும் ஒருயிரேயாவோம். ஆயினும் அந்த ஒருயிரையே ஆண் என்றும் பெண் என்றும் இரு கூறுபடுத்தி இறைவன் இருவராகப் படைத்திருக்கிறான். அவ்வாறு படைத்தமைக்குக் காரணம், நாங்கள் மீண்டும் அன்பால் ஒன்றுபட்டு எல்லையில்லாத பேரின்பம் நுகர்ந்து வாழ்க என்னும் அவனுடைய திருவுளக் குறிப்பே ஆகும். இவ்வாறாக எய்தும் அழகிய இன்பச்சிறப்பினை நானே அறிவதல்லது பிறர் யார் அறிவார்?" என்று, சொற்களால் விளக்கமுடியாத ஒன்றை, ஒருவகையாகச் சொல்ல முயன்று மகிழ்ச்சியடைகின்றான்.

அமுதிலிருந்து அதன் சுவையைப் பிரிக்கமுடியாது. ஆனால் அமுதினாலேயே தன் சுவையை ருசிக்கமுடியாது. ஆகையால் அமுதை ஒருவர் உண்டால் தான் அதனுடைய சுவையை ருசிக்க முடியும். எனவே அமுது - அதன் சுவை என்று பிரிக்கப்படுவது அந்தச் சுவையை நுகரும் பொருட்டே. இந்த அடிப்படையில்தான் "அமுது இவள்; யான் சுவை" என்று இப்பாட்டுக் கூறுகிறது. அப்படியானால் அமுதும் சுவையும் ஒன்றாய் இருப்பதுபோல நானும் அவளும் ஒருவரே ஆவோம்" என்பதை, "நான் இவளாம் பகுதி" என்று தலைவன் கூறுவதாக இப்பாட்டில் காணப்படும் சொற்றொடர் விளக்கிநிற்கிறது. "பகுதி" என்ற சொல்லுக்கு இங்கே தன்மை என்று பொருள்.

எனவேதான் சமுதாய வளர்ச்சிக்காக இந்த ஒன்றியநிலை என்றுமே தொடர்ந் திருக்கும் நிலையாக இல்லாமல் அவ்வப்போது மறையும் நிலையாக அமைந்துவிடுகிறது. அப்படித் தோன்றி மறையும் நிலையாக இருப்பதன் காரணமாகத்தான், அந்நிலையிலிருந்து விடுபட்டவுடன் மறுபடியும் ஆண்- பெண் என்ற வேறுபாட்டையும், அவ்வேறு பாட்டின் காரணமாக உண்டாகும் உணர்ச்சிகளையும், அந்த உணர்ச்சிப் பிடிப்பின் காரணமாக விளையும் பிணைப்புக்களையும், அதிலிருந்து தோன்றும் படைப்புக்களையும் சமுதாய வளர்ச்சியின் நன்மைக்காக நாம் காண்கிறோம். அவர்கள் அனுபவித்துச் சொல்வதைக் கேட்கிறோம். இந்த நிலையில்தான் கூடும்போது தோன்றும் மகிழ்ச்சியையும் பிரியும்போது உண்டாகும் துன்பத்தையும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவிக்குமிடத்து அவற்றுக்கு அழியா வடிவைக் கொடுப்பதை இலக்கியம் தன் சிறந்த பணியாகக் கொண்டுவருகிறது.

கம்பன் இராமனையும் சீதையையும் வைத்துக்கொண்டு இவ்வுணர்ச்சிகளை எப்படிச் சித்தரிக்கிறான் என்பதைத் தான் நாம் இப்போது பார்க்கிறோம். கன்னிமாடத்தில் நின்ற சீதையை இராமன் கண்டான். என்றும் இராமனைச் சீதை கண்டாள் என்றும் நாம் கண்டோம். அதனைக் கம்பன்,

**"என் அரு நலத்தினாள்**
**இணையள் நின்றுழி**
**கண்ணொடு கண்ணிணைக் கவ்வி**
**ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலை பெறாது**
**உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான்;**
**அவளும் நோக்கினாள்"**

என்று பாடுவான். இப்பாட்டில் 'கவ்வி' 'உண்ணவும்' என்னும் இருசொற்களும் மிக அற்புதமான படைப்புக்கள். ஒன்றையொன்று ஆவலுடனும் ஆர்வத்துடன் வேகத்துடனும் பற்றுவதற்கு 'கவ்வுதல்' என்பதைவிட அழுத்தமான சொல்லைப் பயிலமுடியாது. அது போன்றதே 'உண்ணவும்' என்ற சொல்லும். உண்ணுதல் காரணமாக உண்ணப்படுவது தன்னுடைய தனி அமைப்பை இழந்து விடுகிறது. இங்கே இராமனின் கண்கள் சீதையின் கண்களைக் கவ்வி உண்டு விடுகின்றன. அவ்வாறே சீதையின் கண்களும் இராமனின் கண்களைக் கவ்வி உண்டு விடுகின்றன. அப்படிப் பார்க்கும்போது, இருவர் கண்களும், தத்தம் தனி அமைப்பை இழந்து மற்றவர் கண்களோடு இணைந்துவிடுகின்றன. இப்படிக் கண்கள் இணைந்து ஒன்றும்போதே இருவர் உணர்வுகளும் ஒன்றிவிடுகின்றன.

இப்பாடலில் கம்பனின் இன்னொரு சிறப்பையும் காணலாம். 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்' என்றுதான் சொல்கிறான். இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர் என்று சொல்லவந்தவிடத்தும் அண்ணல் என்று இராமனை முதலில் குறிப்பிடுகிறானேயன்றிச் சீதையை முதலில் குறிப்பிடவில்லை. சீதை இராமனை நோக்கினாள் என்று சொல்லிவிட்டுப் பிறகு இராமன் சீதையை நோக்கினான் என்று சொல்லியிருந்தால், சீதைதான் முதலில் இராமனை நோக்கினாள் என்று ஆகிவிடும். அது பெண்டிருக்கு இயல்பாய் அமைகிற நாணத்திற்குக் களங்கம் ஏற்படுத்துவது ஆகும். ஆகவேதான் இராமன் சீதையை நோக்கியதைக் கவிஞன் முதலில் சொல்கிறான்.

இதிலிருக்கும் இன்னொரு சிறப்பு என்னவென்றால், 'நோக்குதல்' என்ற சொல்லின் ஆட்சி, 'நோக்குதல்' என்ற சொல்லுக்கே, கண்ணொடு கருத்தும் தொடர்புபார்த்தல் என்பது பொருள். இங்கே ஒருவர் கண்களை மற்றவர் கண்கள் கவ்வவும் உண்ணவும் உணர்வு ஒன்றவும் ஒருவரையொருவர் கண்டனர். ஆதலின் 'நோக்குதல்' என்ற சொல்லினைக் கவிஞன் ஆள்கிறான். காணல், பார்த்தல் என்ற சொற்களைக் கவிஞன் கையாண்டிருந்தால் இருவருக்குமிடையே நிகழ்ந்த இந்த உணர்வின் ஒன்றிப்பை அச்சொற்களால் உணர்த்தமுடியாது.



# காதலோ! காதல்!

# "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

(தொடரும்)

வாரமொரு வாழ்வியற்
## சிந்தனை

# திட்டமிரு தொட்டுவிடு

**வெற்றி என்பது பெற்று கொள்வது,**
**தோல்வி என்பது கற்று கொள்வது,**
**முதலில் கற்று கொள்வோம் பிறகு பெற்று கொள்வோம்**



விண்ணைக் கைகள் தொட முடியாது. ஆனால் விண்ணை விஞ்சுவது மிகத் தெளிவான எண்ணங்கள்!

"தூய சொல்லும் நேர்மையுமே ஒருவனை வெற்றி எனும் மாளி கைக்கு அழைத்துச் செல்லும்" மில்டனின் இந்த வரிகள் உண்மையை மட்டுமல்ல, மனிதன் எப்படி வாழவேண்டும் என்ற வழியைச் சொல்கிறது.

நான் மிகச் சிறந்த தொழிலதிபராக வேண்டும் என்பது இலட்சியமாக இருக்கலாம். இலட்சியத்தில் இருக்கின்ற வேகம் இலட்சியம் நிறைவேறவேண்டும் என்பதிலும் இருந்தால்தான் வெல்வது எளிது. எண்ணங்களில் தெளிவும் நம்மீதே நமக்குள்ளே நம்பிக்கையும், துணிச்சலும்தான் நமக்கான மூலதனங்கள். முதலீடுகள் என்பது ரூபாய்த்தாள்கள் அல்ல! சாதிக்கவேண்டும் என்கின்ற இலட்சிய நெருப்புதான்.

டி.வி. வந்த புதிதில் டி.வி பழுதுபார்க்கும் ஒரு தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்தார் ஒருவர். இரவுகள்கூட அவரிற்கு பகல் பொழுதானது. தொழிலில் ஒரு நேர்மை, நல்ல உழைப்பாளி என்ற பெயர் கிடைத்தது. உழைப்பாளி சரி நல்ல முதலாளி என்று நான் மாறுவது எப்போது என்ற கேள்வி, சதா மனதைத் தகிக்க ஆரம்பித்தது. காலை முழுவதும் வேலை, மாலை முழுவதும் சிந்தனை, இரவு- முழுவதும் திட்டமிடல். ஓய்வு ஒரு சில மணிநேரங்கள் மட்டுமே. மன நெருப்பு யாகத் தீயாக வளர்ந்தது.



சிறியளவில் ஓர் இடத்தில் ஒரு தொலைக்காட்சி விற்பனைக் கடையை ஆரம்பித்தார். முதல் முதலாக அனைத்து கம்பெனி டி.வி.க்களையும் ஒரு கூரையின கீழ் கொண்டுவந்தார். இன்று பல இடங்களில் அவரின் விற்பனை மையங்கள் உண்டு. 347 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். அந்த வெற்றியாளனின் வாசகம், "தொழிலுக்கு உண்மையாக இருங்கள்! நீங்களும் ஒரு நாள் முதலாளிதான்".

(தன்னுடைய) கடந்துபோன தோல்விகள் என்பதைவிட, வெற்றிக்கான முயற்சிகளையும், எத்தனை வெற்றிகள் பெற்று இருக்கிறோம் என்பதன் கணக்கிடல் களையும் விட்டொழிக்கும் நாளே நமக்குத் திருநாளே! ஏன்? ஏன் முடியாது? ஏன் என்னால் முடியாது?, ஏன் இப்பொழுதே என்னால் முடியாது என்ற பரிசீலனைகள்தான் வாழ்க்கையை எடை போடுவதற்கான எடைக் கற்கள் ஆகும். என்ன எடைகள் தான் சற்று வித்தியாசப்படும். சலனம் இருந்தால் வெற்றி அவரவர் கைகளில்தான்.

சுயநலமும் தனித்தன்மையும் நம்மை நிலை நிறுத்தி சிம்மாச னத்தில் அமரவைக்கும். சிம்மாசனங்கள் ஒருபோதும் நமக்காக நகர்ந்துவருவதில்லை. அப்படி ஒரு மந்திரமும் நடகாது. நம்முடைய தலைமைப்பண்பும் சுயபலமும் வெகுசுலபமாக நமக்கான சிம்மாசனத்திற்கு நம்மை அழைத்துச் சென்றுவிடும். நிரந்தரமாக நம் இருக்கையை மட்டுமல்ல, இருத்தலையும் தக்கவைத்துக் கொள்வதில் இருக்கிறது வெற்றி.

90 வயதிலும்கூட ஒரு பெரியவர் இரும்புப் பட்டறையில் நுட்பமாகவும், கூராகவும் வாள் செய்துகொண்டு இருந்தார். அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டு அவரிடம், உங்களின் கண்பார்வை மங்கவில்லையா? உடல் தளரவில்லையா? என்று கேட்ட பொழுது, பெரியவர் சொன்னார், "நான் 21 வயதில் பட்டறையில் வாள் செய்ய ஆரம்பித்தேன். அன்றிலிருந்து இன்றுவரை என் மனக் கண்முன் தோன்றுவது வாளின் கூர்மையான முனையும் கைப்பிடியும்தான். நல்லதொரு கைப்பிடியும் கூர்மையான முனையும் இருப்பதுதான் சிறந்த வாள். இரண்டையும் மட்டும் பார்த்து எழுச்சியுடன் செய்வது என்னுடைய வேலை. 21 வயதில் இருந்த அதே மனஎழுச்சிதான் இந்த 90 வயதிலும் என்னிடம் இருக்கிறது. பழகிப்போனது கைகள் மட்டுமல்ல மனமும்தான். நெருப்புக் கங்குகள் கூட எனக்கு கூர்மையான வாளின் முனையாகத்தான் தெரியும்" என்றாராம்.

**எண்ணங்கள் எழுச்சியாக இருந்தால்போதும். விண்ணை விஞ்சிவிடலாம்!**

---

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

### குறுக்கெழுத்துப் போட்டி - 661

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 659 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | 3 ர் | 4 ம | 5 ர | 6 பு |
| 7 வி | 8 த் | 9 தி | | 11 பு | 12 னை |
| 13 த் | 14 ர் | 15 க | 16 ர் | 17 த | |
| 19 து | 20 கீ | | 22 த | 23 ர | 24 வை |
| 25 வ | 26 ப | 27 ம் | | 29 ன் | 30 சு |
| 31 ம் | 32 அ | 33 த | 34 ர | 35 ந் | 36 வி |

**இடமிருந்து வலம்**

01. வணக்கம், பூசை.
7.கற்றோர் சபையில் பதினாறுவித அவதானம் செய்வோன்.
13.கடல், கோடான கோடி. (குழம்பியுள்ளது)
21. மாமன் மனைவி. (குழம்பியுள்ளது)
25. குறைபாடு, கேடு. குழம்பியுள்ளது)
29. சொப்பனம்.
34.ஒரு நதி, தேயமைம்பத் தாறினொன்று. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1.ஸ்ரீராமனுடைய தூதுவனாக அனுமார் சீதாபிராட்டியைச் சந்தித்த இடம்.
2.ஆண்டு.(முதல் எழுத்து தவறிவிட்டது)
3.ஆயத்தமான பணம். ஒன்றை வாங்க கொடுக்கும் முற்பணம். (குழம்பியுள்ளது)
4.ஈழத்துக் கவிஞர் தில்லைச்சிவன் என்பவரது இயற்பெயர்.
5.குறித்த நேரம். (திரும்பியுள்ளது. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது)
6.உண்மைக்காதல் இப்படியாம்.
23.கிரணம், ஒளி, பிரகாசம். (திரும்பியுள்ளது)
26.கல்வி, வித்தை, ஊகம்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 08.02.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 661
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.659 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**து.பொன்னம்பலம், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ப.சனுசன், கண்டி வீதி, பளை.
02. இ.ஈஸ்வரன், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
03. என்.நியான், பேராதனை, திருகோணமலை.
04. எஸ்.அனந்தி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
05. மா.சிவனேஸ்வரன், நிந்தவூர், மட்டக்களப்பு.
06. எம்.திவாகர், அளவெட்டி தெற்கு, அளவெட்டி .
07. எம்.யசோதரன், கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
08. எம்.என்.நிர்மல், பிரதான வீதி, மன்னார்.
09. என்.என்.பிரோஸ்கான், கொள்ளுப்பிட்டி.
10. மு.கஸ்தூரி, உடப்பு, புத்தளம்.






# மீண்டும் பெப்ரவரியில் குவியும் படங்கள் திணறுமா திரையுலகம்?

தமிழ் சினிமாவில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒவ்வொரு இயக்குனரின் தலையெழுத்து இருக்கிறது என்பார்கள். ஆனால் தற்போது உள்ள சினிமா நிலவரத்தில் 4, 5 இயக்குனர்களின் தலையெழுத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தள்ளாடுகிறது என்பது தான் உண்மை.

இந்த பொங்கலன்று வெளியான நான்கு படங்களும் பெரிய படங்களுக்கு நிகராக உள்ள படங்கள். ஆனால் நான்கும் திரையரங்கு சரியாக கிடைக்காததால் வசூலில் தள்ளாடுகிறது. இந்த நிலைமை தற்போது பெப்ரவரி மாதம் தொடர்கிறது. பெப்ரவரி 5ஆம் திகதி பெங்களூர் நாட்கள் மற்றும் பிரஷாந்தின் சாஹசம் படமும் வெளியாகவுள்ளது, அதேபோல் வருகிற 12ஆம் திகதி கிட்டத்தட்ட நான்கு படங்கள் (காதலும் கடந்துபோகும், மிருதன், ஜில் ஜங் ஜக், சௌகார்பேட்டை) வெளியாக உள்ளது.

இந்த நான்கும் திரையுலக ரசிகர்கள் எதிர்பார்க்கும் படங்கள், இவை அனைத்தும் ஒரே நாளில் வெளியானால் கண்டிப்பாக ஒவ்வொரு படத்தின் வசூலும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பது அனைவரும் அறிந்ததே. இதில் பெரும் சோகம் என்னவென்றால் நல்ல படங்கள்கூட இதில் காணாமல் போகிற நிலைமை ஏற்படுவது தான். இது திரையுலகத்துக்கு நல்ல சூழலை ஏற்படுத்தாது.






## விஜய் சேதுபதியின் அடுத்த படத் தலைப்பு அறிவிப்பு

இந்த ஆண்டு விஜய் சேதுபதி நடிப்பில் பல படங்கள் வெளிவரவுள்ளது. அதில் குறிப்பிடும் படியான படமான சேதுபதி, காதலும் கடந்து போகும் மற்றும் இறைவி போன்ற படங்கள் அவருக்கு இன்னும் நல்ல பெயரை எடுத்து தரும் என்கிறார்கள். இந்நிலையில் இவர் அடுத்து வா டீல் படத்தின் இயக்குனர் ரத்தின சிவா படத்தில் நடிக்கவிருக்கும் படத்துக்கு ரெக்கை என்று தலைப்பு வைத்துள்ளனர். இப்படம் இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

## இறுதிச்சுற்று படம் பார்த்து கண்ணீர்விட்ட பிரபலங்கள்

சுதா கொங்கரா இயக்கத்தில் மாதவன், ரித்திகா நடித்திருக்கும் படம் இறுதிச்சுற்று. இப்படம் தமிழ், ஹிந்தி என இரு மொழி களிலும் தயாராகியிருக்கிறது.

அண்மையில் இப்படத்திற்கான சிறப்பு காட்சிகள் மும்பையில் சில பிரபலங்களுக்கு மட்டும் காண்பிக்கப்பட்டது. படத்தை பார்த்துவிட்டு பேசிய ஷில்பா ஷெட்டி, படம் பார்த்து எனக்கு அழுகை வந்துவிட்டது. எவ்வளவு அருமையான படம். ரித்திகாவும் படத்தை பார்த்து அழுதுவிட்டார், ஏன் எல்லோருமே அழுதுவிட்டனர் என்றார்.

## பிரபல அப்பா – மகன் கூட்டணி இணைகிறதா?

கௌதம் கார்த்திக் ராஜதுரை இயக்கத்தில் முத்துராமலிங்கம் படத்தில் நடிக்க இருப்பது ஏற்கெனவே வந்த தகவல். அதன் பிறகு இப்படத்தை இளையராஜா இசையமைக்க இருப்பதாகவும், பஞ்சு அருணாச்சலம், இளையராஜா கூட்டணி நீண்ட இடைவெளிக்கு இணைகிறார்கள் என்றும் கூறப்பட்டது. இந்நிலையில் இப்படத்தில் நவரச நாயகன் கார்த்திக் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்க இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இப்படத்தில் கௌதம் கார்த்திக்குடன், கேத்ரீன் தெரசா, பிரபு, சுமன், ராதாரவி, விவேக், சுகன்யா, ரேக்கா, வம்சி கிருஷ்ணா, சிங்கம் புலி, சிங்கமுத்து எனப் பலர் நடிக்கின்றனர்.

## சிவகார்த்திகேயன் குடும்பத்திலிருந்து புதிய நடிகர்

சிவகார்த்திகேயன் தமிழ் சினிமாவின் இளம் சூறாவளி. நடிப்பிலும், வெற்றி படங்களிலும் அசத்திவருகிறார். தற்போது இவரது குடும்பத்தில் இருந்து மற்றொரு நடிகர் வரவிருக்கிறார். இவருடைய அப்பாவின் அண்ணன் பாபு, அருவி என்ற படம்மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார். தற்போது அப்படம் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளில் இருக்கிறது. அதோடு விக்ரம் பிரபு நடித்துவரும் சிவாஜி படத்தில் இவர் சிறப்புவேடத்தில் நடித்துவருகிறார். விரைவில் அவர் சிவகார்த்திகேயன் படத்திலும் நடிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

குடும்பத்துடன் வந்திருந்
படம்பிடிக்க தொடங்கின
எடுத்து சமூக இணைய
அனைத்தும் சமூக வ
இன்று மேலும்
ஷாலினி
ஆத்விக்
ாலினி
புகை
ஆ



## குட்டி தலக்கு பெரும் வரவேற்பு கொடுத்த தல ரசிகர்கள்

அஜித் - ஷாலினி தம்பதிக்கு ஏற்கெனவே அனோஸ்கா என்ற அழகான பெண் குழந்தை இருந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு இவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்தது முதல் இக்குழந்தையை ரசிகர்கள் அனைவரும் "குட்டி தல" என்று பெயர் வைத்து அழைக்க ஆரம்பித்தனர். ஆனால், பெற்றோர்களோ இக்குழந்தைக்கு ஆத்விக் என பெயர் சூட்டினர்.

பிறந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை ஆத்விக்கின் புகைப்படத்தை அஜித் எங்கேயும் வெளிவிடவில்லை. அவர் ஒரு புகைப்பட பிரியராக தனது மகனை ஏகப்பட்ட புகைப்படங்கள் எடுத்தும், எந்த புகைப்படமும் இதுவரை வெளியாகாமலே இருந்தது.

கடைசியாக் பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு குடும்பத்துடன் வந்திருந்த அஜித்தை ரசிகர்கள் தங்களது செல்போன்களில் படம்பிடிக்க தொடங்கினர். அப்போது, குட்டி தல ஆத்விக்கையும் புகைப்படம் எடுத்து சமூக இணையத்தளங்களில் பரவவிட்டனர். இந்த புகைப்படங்கள் அனைத்தும் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவிவந்த நிலையில், இன்று மேலும் சில புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஷாலினிக்கு நெருங்கிய உறவினரான டான்ஸ் மாஸ்டர் சாந்தி, ஆத்விக்கை கையில் வைத்துக்கொண்டபடி எடுக்கப்பட்டுள்ள ஒரு புகைப்படம், ஷாலினியுடன் ஆத்விக் விளையாடும் ஒரு புகைப்படம், ஊஞ்சலில் ஆடுவது போன்ற புகைப்படம், துணி நாற்காலியில் படுத்துக்கொண்டபடி எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகியன இணையத்தளங்களில் வைரலாக பரவிவருகிறது.

அந்த புகைப்படங்களை அஜித் ரசிகர்கள் தங்களுக்கு பிடித்தவாறு பல்வேறு விதங்களில் மெருகேற்றிவருகின்றனர். "தல"யைப் போலவே "குட்டி தல"க்கும் ரசிகர்கள் பெரும் வரவேற்பு கொடுத்துவருகின்றனர்.



போதி லட்சுமி

## எத்தனை பேர் கிண்டல் செய்தாலும் மீண்டும் நடத்திக்காட்டுவேன் – லட்சுமி

ராமகிருஷ்ணன் யுத்தம் செய், நான் மகான் அல்ல, கதகளி ஆகிய படங்களில் நடித்தவர் லட்சுமி ராமகிருஷ்ணன். இவர் சின்னத்திரையில் நடத்திய ஷோ ஒன்றை நடத்தினார். இந்த நிகழ்ச்சியை மற்றொரு தொலைக்காட்சி கிண்டல் செய்தது, அதை சிவகார்த்திகேயன் தன் பாடலில் பயன்படுத்தியது அனைவரும் அறிந்ததே.



## மகேஷ் பாபுவுடன் ஜோடி சேரும் கீர்த்தி சுரேஷ்

கீர்த்தி சுரேஷ் நடிப்பில் வெளியான "இது என்ன மாயம்" படம் சுமாரான வரவேற்பை பெற்றது. ஆனால், சமீபத்தில் வெளியான "ரஜினி முருகன்" படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுவருகிறது. இப்படத்தின் வெற்றி கீர்த்தி சுரேஸுக்கு பல பட வாய்ப்புகள் வந்தவண்ணம் உள்ளது.

பரதன் இயக்கத்தில் விஜய் நடிக்க இருக்கும் படத்திற்கு கீர்த்தி சுரேஷ் நடிக்க இருப்பதாக சில தினங்களுக்கு முன்னதாக செய்திகள் வெளியானது. இந்நிலையில், மகேஷ் பாபுவுடன் ஜோடிசேர இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகேஷ்பாபு தற்போது "பிரம்மோத்சவம்" படத்தில் நடித்துவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவருகிறது.

இப்படத்தை அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் மகேஷ்பாபு நடிக்கவுள்ளார். இந்த படத்தில் மகேஷ்பாபுவுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷிடம் பேச்சுவார்த்தை நடந்துள்ளதாம். விரைவில் இப்படம் குறித்து அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



எனக்கு இன்னொரு பேர் இருக்கு

# மூன்றாம் உலகப் போர் விமர்சனம்

இந்திய இராணுவத்தில் மேஜர் பொறுப்பில் இருக்கும் சுனில்குமார், விடுமுறைக்கு ஊருக்கு சென்றிருக்கும்போது, அவரது பெற்றோர்கள் நாயகி அகிலா கிஷோரை அவருக்கு திருமணம் செய்துவைக்கின்றனர். திருமணம்முடிந்த சிலநாட்களிலேயே மனைவியைவிட்டு பிரிந்து இராணுவத்துக்கு சென்றுவிடுகிறார் சுனில்குமார்.

அந்த நேரத்தில் சீன இராணுவத் தளபதியான வில்சன், இந்தியாவில் நாசவேலைகளை ஏற்படுத்தி அமைதியை குலைப்பதற்காக தனது மகனுடன் 100 வீரர்களை இந்தியாவுக்கு அனுப்புகிறார். அவர்கள் ஒவ்வொருவரையும் கண்காணிப்பதற்காக ஒவ்வொருவர் உடம்பிலும் கம்யூட்டர் சிப் வைத்து அனுப்புகின்றனர்.

ஆனால், இந்தியாவுக்குள் நுழைந்த 100 வீரர்களும் திடீரென தொடர்புகொள்ள முடியாமல் காணாமல்போகிறார்கள். அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது சீனா தளபதிகளுக்கு மர்மமாகவே இருக்கிறது.

இந்நிலையில், இந்திய - சீன எல்லையில் பாதுகாப்பில் இருக்கும் மேஜர் சுனில்குமார் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு இதுபற்றி தெரிந்திருக்கக்கூடம் என்று நினைத்து அவர்களை சீன இராணுவத்தினர் கடத்தி கொண்டுபோய் சிறை வைக்கின்றனர்.

அப்போது சுனில்குமாரை மட்டும் தங்களது கஸ்டடியில் வைத்துக்கொண்டு, மற்றவர்களை கொன்றுவிடுகிறார்கள். சுனில்குமாரிடம் 100 வீரர்கள் பற்றிய விவரங்களை கேட்டு அவரை பலவிதமாக டார்ச்சர் செய்து விசாரிக்கிறார்கள்.

இறுதியில், அந்த 100 வீரர்கள் என்ன ஆனார்கள் என்ற விவரம் சுனில்குமாருக்கு தெரிந்ததா? அந்த 100 வீரர்கள் என்ன ஆனார்கள்? சீன ராணுவத்தினரிடம் இருந்து சுனில்குமார் எப்படி தப்பித்தார்? என்பதே மீதிக்கதை.

நாயகன் சுனில்குமார் இந்திய ராணுவ மேஜருக்குண்டான மிடுக்குடனும், தைரியத்துடனும் அழகாக நடித்திருக்கிறார். படத்தில் இவருக்கு ஜோடி இருந்தாலும், அவருடனான காதல் காட்சிகள் மிகவும் குறைவு. போர் சம்பந்தப்பட்ட படம் என்பதால், பெரும்பாலும் துப்பாக்கி கையுமாகவே அலைந்திருக்கிறார். அக்ஷன் காட்சிகளிலும் ரொம்பவும் தெளிவு இல்லாமலே நடித்திருக்கிறார்.

அகிலா கிஷோர் சில காட்சிகளே வந்தாலும் மனதில் பதிகிறார். சீனா தளபதியாக வரும் வில்சன் வில்லத்தனத்தில் மிரட்டுகிறார். படத்தில் இவர் பேசும் வசனங்கள் இந்தியனாக நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறது. இவருக்கும் ஹீரோவுக்கும் உண்டான காட்சிகளே படத்தில் பிரதானமாக இருப்பதால் மற்ற கதாபாத்திரங்கள் யாருக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

2025-ல் இந்தியாவுக்கும் - சீனாவுக்கும் இடையே உலகப்போர் நடப்பதாக இயக்குனர் சுகன் கார்த்தி இப்படத்தை படமாக்கி இருக்கிறார். ஆனால், 2025-ம் ஆண்டின் வளர்ந்த தொழில்நுட்பம் எதுவும் நம் கண்ணுக்கு தெரியவில்லை. மேலும், கிராபிக்ஸில் வரும் போர் காட்சிகள் எல்லாம் வீடியோ கேமை பார்ப்பதுபோன்ற உணர்வை கொடுத்திருக்கிறது.படத்திற்கு பெரிய பலம் வசனங்கள்தான். நாயகனாகட்டும், வில்லனாகட்டும் இருவரும் பேசும் வசனங்கள் எல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது. வேத் சங்கரின் இசை காதுகளுக்கு இரைச்சலாக விழுந்திருக்கிறது. பின்னணி இசையில் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம். மொத்தத்தில் "மூன்றாம் உலகப் போர்" வெறும் கற்பனைதான்.




இவ்வாறு அவன் தனது இதயக்குமுறல்களைக் கொட்ட ஆயத்தமானபோது, அவனது முகத்திலே தெரிந்தது கோபமா? சோகமா...? நன்றியுணர்வா! அல்லது மூன்றும் கலந்த ஓர் புதிய தோற்றமா...? எம்மால் இனம் காண முடியவில்லை. இவ்வாறு இனம் காணமுடியாத ஓர் புதுவிதமான முக பாவத்துடன் அந்த இளைஞன் தனது இதயக்குமுறல்களை மிகநிதானமாகக் கூறத் தொடங்கினான்.

1956ஆம் ஆண்டு எனது அப்பப்பா மலைநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தர்மபுரத்திலே குடியேறினார். அவர் தர்மபுரத்தில் குடியேறிய நாளில் இருந்து அவர் சாகும்வரை வேலை தேடி அலைவதும் தனது குடும்பம் குடியிருப்பதற்கான ஒரு நிலத்தை தேடியலைவதுமே அவரது வாழ்வாக இருந்தது. இவ்வாறு நிரந்தரமான ஒரு வாழ்க்கையின்றி அலைந்தவாறே எனது அப்பாவையும் அவரது சகோதரர்களையும் பெத்துவளர்த்து, நிலமின்றி அலைந்து திரியும் வாழ்வையே தனது பிள்ளைகளிற்காக விட்டுச் சென்றார்.

எனது அப்பாவும் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்தபோதும் அவர்கூட இந்தப் பூமியிலே ஒரு துண்டு நிலம்கூடச் சொந்தமில்லாமல் அகதியைப்போல் அலைந்து திரியும் வாழ்க்கையையே எமக்காகத் தந்துவிட்டுப் போனார். எனக்கும்கூட நான் திருமணம்செய்து மூன்று பிள்ளைகளைப் பெறும்வரை ஒரு சின்னத்துண்டு நிலம்கூடச் சொந்தமாய் இருக்கவில்லை. வயல்களுக்கு நடுவே உள்ள மேட்டுப் பகுதியிலே சிறுகொட்டிலை அமைத்து எமது குடும்ப வாழ்வை மேற்கொண்டோம். வன்னியில் வாழ்ந்த விவசாய முதலாளி வர்க்கம் எம்மை மனிதர்களாகவே கருதவில்லை.

வயல்களிற்கு நடுவே குடியிருந்த நானும் எனது மனைவி பிள்ளைகளும், மழைக்காலங்களில் வெள்ளம் நிரம்பி வழியும் வயல்வெளிகளால் வெளியே வரப் பாதையின்றி ஒழுக்குவீட்டிற்குள் நுளம்புகளுடன் போராடியவாறு குளிருக்குள் கிடந்தோம். எமது முன்னோர்கள் இந்த வாழ்க்கையை சகித்துக்கொண்டு மௌனமாய் அழுதவாறு வாழ்ந்ததுபோல் எம்மால் வாழ முடியவில்லை. நான் முதலாளிகளை இடைக்கிடை எதிர்த்துநின்றேன். அதனால் எனது குடியிருப்பும் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தது. எங்குதான் நாம் இடம் மாறினாலும் வயல்களிற்கு நடுவில்தான் எமது வாழ்க்கை ஓடியது.

நான் ஏன் பிறந்தேன் என்ற எண்ணம் பல தடவை எனக்குள் எழுந்து என்னை சித்திரவதை செய்தது. என் பிள்ளைகளைப் பார்க்கும்போதெல்லாம்...!! இவர்கள் என் குடும்பத்தில் பிறந்ததால்...!! நாளை இவர்கள் வயல்களிற்கு மத்தியில்... மழையிலும் வெயிலிலும் கிடந்து தவிக்கப்போகின்றார்களே என்ற எண்ணம் என்மனதில் எழுந்து என்னைச் சித்திரவதை செய்தது. உண்மையிலேயே நிலமற்ற வாழ்க்கையின் கொடுமை என்ன என்பதை அந்த வாழ்க்கையை அனுபவித்தவர்களால்தான் உணர முடியும்...! இவ்வாறு தலைமுறை தலைமுறையாய் இந்தக் கொடுமையான வாழ்வை எமது சந்ததியினர் அனுபவித்தவாறே தமது வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தனர்.

எனது கொள்ளுத்தாத்தா இந்த நிலமற்ற வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்டு அதே வாழ்க்கையைத் தன் மகனிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அவரது மகனான எனது அப்பப்பாவும் அதே வாழ்க்கையை வாழ்ந்து அவரது மகனான எனது அப்பாவிடம் கையளித்து விட்டுப் போனார். அதே வாழ்க்கையைத்தான் எனது அப்பாவும் என்னிடம் தந்து விட்டுச் செத்தார். ஆனால் நானும் எனது பிள்ளைகளும் இன்று கால் ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரராகி இந்த மண்ணிலே நிமிர்ந்து வாழ்கிறோம்.

நானும் எனது பிள்ளைகளும் இன்று நிலமற்ற அடிமை மனிதர்கள் அல்ல. கால் ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர். இனி எந்த ஒரு விவசாய முதலாளியும் என்னையும் எனது பிள்ளைகளையும் வீட்டை விட்டுத் துரத்தமுடியாது என அந்த இளைஞன் கூறும்போது அவனது முகத்திலே ஒரு பேரொளி தோன்றியது. எதிர்காலம் பற்றிய ஒரு மாபெரும் நம்பிக்கை அவன் உள்ளத்தில் தெரிந்தது. இத்தனைக்கும் அந்த இளைஞன் தனக்குச் சொந்தமெனக் கூறிய அந்தக் கால் ஏக்கர் நிலம்கூட அவனுக்குச் சொந்தமென உறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலமாக இருக்க வில்லை. அந்த நிலத்திற்கான பொமிற் மட்டுமே அவனது கையில் இருந்தது.

**தங்கன்**

அந்த இளைஞனின் இதயக் குமுறலில் இருந்து ஒரு மனிதனின் வாழ்வில் நில உரிமையின் அவசியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் மேலும் ஆழமாக உணர்ந்துகொண்டேன். இனி அந்த இளைஞன் தனக்குச் சொந்தமான அந்தக் கால் ஏக்கர் நிலத்திற்காக அவன் தன் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டான். ஏனெனில் அந்த நிலம்தான் அவனதும் அவனது பிள்ளைகளினதும் வாழ்விற்கு மிகமிக அடிப்படையானதாய் உள்ளது. எனவே இங்குதான் நாம் தேசிய விடுதலை போராட்டத்தின் அடிப்படை எங்குள்ளது என்பதையும் தமிழ் தேசியவாதத்தின் தொடர் தோல்விக்கான காரணம் என்ன என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். உண்மையில் அந்த இளைஞன் கூறியதுபோல் அவர்களிற்கான அந்த நிலத்தைப் பெற்றுக்கொடுத்ததில் புலிகளின் பங்களிப்பு மறுக்கமுடியாத அளவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுதான்.



# இந்த இளைஞனின் இதயக்குமுறல்!

ஏற்கனவே நிலமின்றி அலையும் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்த அந்த மக்கள் 1990 இல் இருந்து 2001 ஆண்டுவரை கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றுவதும் பின் புலிகள் கைப்பற்றுவதுமாக கிளிநொச்சி, பரந்தன், முரசுமோட்டை போன்ற பகுதிகளில் சண்டை மாறி மாறி தொடர்ந்துகொண்டே இருந்தது. அந்தக் காலத்தில் நிலமற்ற மக்களாய் வாழ்ந்து கொண்டிருந்த மலையகத்தைச் சார்ந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்கள் பெரும் துயரச்சுமையை சுமந்தபடி தமது குடும்பங்களுடன் அலைந்து திரிந்தார்கள். அந்த மக்களின் துயரமான வாழ்வைத் தினமும் கண்டுகொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளரான திரு.செழியன், திரு. வின்சன்ட் போன்றவர்களின் கடும் முயற்சியால் உருவானதுதான் கோரக்கன்கட்டு குடியிருப்பு.

அந்த இரண்டு புலிப்பொறுப்பாளர்களிற்கும் பக்கதுணையாக அந்த மலையகத்து நிலமற்ற விவசாயக் கூலிகளில் இருந்து திரு. செல்வா அவர்களும் திரு. கணேஷ் அவர்களும் இருந்து அந்தக் குடியிருப்பை உருவாக்குவதற்காகப் பாடுபட்டார்களென அந்த குடியிருப்பில் வாழும் மக்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு திரு. செல்வா, திரு. கணேஷ் போன்றவர்களின் விடாமுயற்சியாலும் செழியன், வின்சன்ட் போன்றவர்களின் உறுதியான செயற்பாட்டாலும் கோரக்கன்கட்டுக் குடியிருப்பு 2003 ஆம் அண்டு "புலேந்திரன் குடியிருப்பென்ற" பெயருடன் ஓர் மாதிரிக் குடியிருப்பாக பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் உருவானது. ஆரம்பத்தில் 68 குடும்பங்களுடன் உருவான அந்தக் குடியிருப்பு 2004 ஆண்டு இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட குடியிருப்பாக மாறியது.

பொதுநோக்கு மண்டபம், பாலர் பாடசாலை, குழந்தைகள் பராமரிப்பு நிலையம் எனப் பல பொது அமைப்புக்களுடன் இக்குடியிருப்பு செயற்படத் தொடங்கியது. இக்குடியிருப்பின் செயற்பாட்டில் புலிகள் அமைப்பினர் மிக முக்கியமான பங்கை தொடர்ந்தும் வகித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு விடுதலைப் புலிகளின் வழிகாட்டலோடு செயற்பட்டுவந்த இந்தக் கிராமமானது வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது 2007ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெயர்ந்தது. இவ்வாறு இடம்பெயர்ந்த இக்குடியிருப்பு மக்கள் 2010 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இது எங்கடை குடியிருப்பு, எங்கடை நிலம் என்ற பெருமிதத்துடன் மீளவும் இங்கு வந்து குடியேறினார்கள்.

தற்போது 158 குடும்பங்கள் இக்குடியிருப்பில் வாழ்ந்து வருகின்றார்கள். இதில் யுத்தத்தால் விதவைகளான இளம்பெண்கள் இருபது பேர்வரை உள்ளார்கள். தற்போது இவர்களது சிறுவர் பாதுகாப்பு நிலைய கட்டிடங்கள் யுத்தத்தால் சிதைக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரர்களையும் கலைத்துறையில் சிறந்த கலைஞர்களையும் கொண்ட ஒரு குடியிருப்பாக இன்று புத்தாக்கம் பெற்றுவருகின்றது.

பரந்தன், முரசுமோட்டை, கண்டாவளை, தர்மபுரம் போன்ற இடங்களில் கூலி வேலைகளில் ஈடுபட்டவாறு கடந்த நாற்பது ஐம்பது வருடங்களாக குடியிருப்பிற்கான நிலம் கூட இல்லாத மனிதர்களாய் மிகவும் அவலமான வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த இந்த மக்களிற்கான நிலஉரிமையை வழங்கிய இந்தக் கோரக்கன்கட்டுக் குடியிருப்பானது தோற்றம்பெற்றபோது ஏற்பட்ட பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கும் போதுதான்... தமிழ் மக்களின் மனோபாவத்தை மிகத் தெளிவாக எம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

(தொடரும்)

இந்த வார சிறுகதை
-மால்கம்-

# யாசகம்



"யாருடா பிராண்டுறது..."

பழக்கமானவர்களில் யாரோ ஒருவர் கால் விரலைச் சுரண்டுவதுபோல் உணர்ந்த முத்து அங்கும் இங்கும் தேடினான். முகத்தில் துண்டைக் கட்டியிருந்த அவன் சத்தமில்லாமல் அறைமுழுவதும் பார்வையைச் செலுத்தினான். வெளிச்சம் ரொம்பவும் குறைவாக இருந்தது.

"ஓ...நீயா..." முத்து அந்தப் பக்கம் திரும்பும்பொழுது, "கிரீச்...கிரீச்" என்று அவன் திரும்பிய திசையிலிருந்து சத்தம் வந்தது. சடாரென மீண்டும் இந்தப் பக்கம் திரும்பினான்.

தனியா இருந்த நீ, இப்ப குடும்பத் தோட கும்மாளம் போடுறீயா... பெரிய கட்டையை எடுத்துக்கொண்டு சத்தம்வந்த திசையை நோக்கி ஓடினான்.

"இதுக்கெல்லாம் நீ சரிப்பட்டு வரமாட்டே... ராத்திரிக்குப் பொறியில மசால் வடய வச்சு உன்னய பிடிக்கிறேன் பாரு..." புலம்பிக்கொண்டே அருகில் இருந்த மூட்டையின் மீது அமர்ந்தான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் முத்துவுக்கு இதே வேலைதான். மிளகாய், மல்லி, சீனி, அரிசி, பருப்பு, புண்ணாக்கு... இவற்றின் நெடி மூக்கைத் துளைப்பதால் குடோனைச் சுத்தம் செய்வது என்பது அவனைப் பொறுத்தவரை பாவமான காரியத்தில் ஈடுபடுவது போன்றது. எண்ணெய்ப் பிசுக்குடன் நாள் கணக்காக சுத்தம் செய்யப்படாமல், கால்களை வைப்பதற்கே அருவருப்பாக உள்ள தரையைப் பெருக்குவது, சிந்தியிருக்கிற பலசரக்கு, உதிரி சாமான்களை எல்லாம் வாரி அள்ளுவது, மூட்டைகளை சரியாக அடுக்குவது, சரக்கு முடிந்த சாக்குப் பைகளை நன்றாக உதறி தனியாக அடுக்கி வைப்பது, மாச் சாக்குகளை உதறும் போது தொடர்ச்சியாக தும்மல் போடுவது இத்யாதி... உலகத்திலேயே மோசமான வேலை எதுவென்று முத்துவிடம் கேட்டால் பலசரக்கு கடை குடோனைச் சுத்தப்படுத்துவதுதான் என்பான்.

இன்று எலி நண்பர்களில் ஒருவன் முத்துவிடம் அதிக உரிமை எடுத்துக் கொண்டு காலை லேசாகக் கடித்து விட்டான். அதை அவன் பெரிது படுத்தாமல் பொறி வைத்துப் பிடித்து விடுவேன் என்று செல்லமாகக் கடிந்து கொண்டான்.

பலசரக்கு குப்பைகளை அள்ளிக் கொண்டு குடோனுக்கு முன்புறமாக. உள்ள கடைவாசலுக்கு வந்தான். வாரத்தில் ஒரு நாள் கடை திறப்பதற்கு இரண்டு மணிநேரம் முன்பாக குடோனுக்கு வந்தாலும் அன்று கடை திறந்தவுடன் மதியம்வரை பலசரக்கு சாமான்களை பிரிப்பது என்றபெயரில் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ள முத்துவுக்கு வாய்ப்பு கிடைத்தது. குடோனைச் சுத்தம் செய்து பொறுக்கி அள்ளிய மளிகைச் சாமான்களைப் பிரித்து அந்தந்த மூட்டைகளில் சேர்த்துவிடவேண்டும் என்பது முதலாளியின் கண்டிப்பான உத்தரவு. எந்த குப்பையையும் கடை ஊழியர்கள் யாரும் அவ்வளவு எளிதில் குப்பைத் தொட்டியில் போடமுடியாது. ஓர் அரிசியோ, பருப்போ அந்தந்த மூட்டைக்குச் சென்று சேரவேண்டும் என்பது அந்தக் கடையில் எழுதப்படாத விதியாக இருந்தது.

ஐயா... பிச்சை போடுங்க ஐயா...
கொலந்த பசியால துடிக்குது பிச்சை போடுங்கய்யா...

உள்ளேயிருந்து ஓடிவந்த முத்து கடைவாசலில் வைக்கப்பட்டிருந்த டப்பாவிலிருந்து சில்லறை காசை எடுத்து பிச்சைக்காரியிடம் கொடுத்தான்.

கோடி கோடியாய்ச் சம்பாதிக்கும் முதலாளிகள் சில சில்லறை காசுகளை பிச்சைக்காரர்களுக்குக் கொடுப்பதை பெரும் வள்ளல் தன்மையாக விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். மக்களை ஏமாற்றி சம்பாதிக்கும் இவர்களில் சிலர் பிச்சைக்காரர்களுக்கு சில சில்லறைகளை விட்டு எறிவதுதான் இந்தப் பாவங்களுக்கு விமோசனம் என்று நம்பினார்கள்.

தர்மம் தலை காக்கும்...
தக்க சமயத்தில் உயிர்காக்கும்...

பாடல் வரிகள் தாளம் தப்பியவாறு ஒலித்து முத்துவை சுயநினைவுக்குத் திருப்பியது. பிச்சை பாத்திரங்களை இசைக்கருவிகளாக்கி பாட்டு பாடிக் கொண்டே ஒவ்வொரு கடையாக யாசகம் கேட்கும் குழுவினர் அவர்கள். ஹெல்ப் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தொப்பியை அணிந்த ஐந்து பேர் கடை வாசலில் நின்று யாசகம் கேட்டனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர்கள் அனைவருக்குமாகச் சேர்த்து, முத்து நிறைய சில்லறைக் காசுகளை கொடுத்தான்.

இந்த வேலையையும் முத்துவே செய்து வந்தான். இப்படி யாசகம் கேட்பவர்களுக்கு சில சில்லறைகளை கொடுப்பது என்பதில் அவனுக்கு உடன்பாடில்லை. குப்பையை காசாக்கும் முதலாளியின் இந்தச் செயலும் அவனுக்கு அறவே பிடிக்கவில்லை. காரணம் புழக்கத்தில் அவ்வளவாக இல்லாத ஐந்து ரூபா காசுதான் கொடுக்கவேண்டும். அதுவும் ஒருத்தருக்கு ஒரு காசுதான் கொடுக்கவேண்டும் அதிகமாக கொடுத்துவிடக் கூடாது.

இதற்காக அன்று மாலை பிச்சைக்காரர்களிடம், பிச்சையெடுத்த மொத்த சில்லறை காசுகளில் உள்ள ஐந்து ரூபா நாணயங்களை மட்டும் ரூபாயை கொடுத்து மாற்றி வாங்கி வைத்துக் கொள்வார்- அடுத்த வாரம் வாரி வழங்குவதற்காக.

வழக்கம்போல் இன்றும் முத்துவின் எண்ண அலைகள் பலமாக வீசின. "இதெல்லாம் யாசகர்களுக்குப் போதுமா? கொஞ்சம்கூட்டியாவது போடலாம்... இதை முதலாளியிடம் சொல்ல அவனுக்கு ஆசைதான், சொல்ல முடியுமா? சொன்னால்தான் அவர் கேட்பாரா? கடுமையாக உழைக்கும் நமக்கே அவர் ஒழுங்காக சம்பளம் கொடுப்பது கிடையாது... இவராவது... கொடுக்கிறதாவது..." என சிந்தித்துக் கொண்டே குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தான்.

டப டப... டப... டப...

யோசனையில் இருந்த முத்து சுயநினைவுக்கு திரும்பி அனிச்சையாக வானா முனா பராக் என்று கடை வாசலில் நின்று கொண்டிருந்தவனுக்கு மட்டும் கேட்குமாறு குரல் கொடுத்தான்.

டப... டப... டப...டப... சத்தம் அதிர்ந்து ஓய்ந்தது. வானா முனா பராக்... இது கடை வாசலில் நின்று கொண்டிருந்தவனின் குரல். முதலாளி வரும்வரை கல்லாப்பெட்டியில் உட்கார்ந்திருக்கும் கணக்குப் பிள்ளை அந்தக் குரலை வாங்கி, வானா முனா பராக் என்று எதிரொலித்தார். தராசுக்கு அருகில் நின்றிருந்த ஊழியர் மீண்டும் வானா முனா பராக் என்று வழிமொழிய... இப்படியாக கடையின் உள்ளிருக்கும் கடைசி ஊழியர் வரை இந்த முழக்கம் முழங்கப்பட்டதுடன், அனைவரும் "அலேர்ட்" ஆனார்கள்.

சமூகத்தில் பெரும்பாலும் புல்லட் வண்டி வைத்திருப்பவர்கள் போல ஆஜானுபாகுவான தோற்றம், வீரப்பன் போல முறுக்கு மீசை, பொலிஸ் அதிகாரி போல ஹேர் கட்டிங், அரசியல்வாதி போல செயின், பிரேஸ்லெட் சகிதம் என்று எதுவுமே இல்லாமல் காமெடி நடிகர் போல சங்கரலிங்கம் இருப்பார்.

சாமி கும்பிட்டு விட்டு கல்லாவில் உட்கார்ந்த பின்தான் அர்ச்சனையை ஆரம்பிப்பார் சங்கரலிங்கம். கடையில் உள்ள ஒவ்வொரு ஊழியராகப் பெயர்சொல்லி கூப்பிட்டு ஏதாவது குற்றம் குறை சொல்லி அர்ச்சனை செய்தால்தான் அவருக்கு திருப்தி. அன்று ஒரு நாள் அப்படித்தான் உடம்பு சரியில்லை என்று அவர் கடைக்கு வரவில்லை. ஆனால் வீட்டிலிருந்து கடைக்குப் போன் செய்து அர்ச்சனையை முடித்துக்கொண்டார்.

"ஏலே, பாண்டி எங்கலே?"

"அண்ணாச்சி அவனுக்கு உடம்பு சரியில்லையாம், ரூம்ல படுத்திருக்கான்."

"என்னாலே அவனுக்கு?"

"ஏதோ கால்ல கட்டி கிளம்பியிருக்காம், கடையில நிக்க முடியாதாம்... அதான் உங்ககிட்ட லீவு சொல்லச் சொன்னான்."

"அவர் கலெக்டர் உத்தியோகம் பாக்குறாராக்கும் லீவு கொடுக்குறதுக்கு... நல்லா சட்டி சோத்த தின்னுப்புட்டு உறங்குறாகளோ தொர..."

"கட்டியிலேந்து சீழ் வடியிறதால நோவு ஜாஸ்தியா இருக்காம், அதான் வரலையாம்..."

பாண்டியைப் பற்றி கேட்ட கேள்விகளுக்கு முத்து பதில் கொடுக்க, ஒவ்வொரு முறை முயலும்போதும், கடலை கந்தசாமி தனது சக ஊழியனுக்காக முதலாளியிடம் விடாப்பிடியாக வாதாடினான். (கடலை என்பது பட்டப்பெயர்)

வேலை கிடைத்தால் போதும் என்று கிராமத்திலிருந்து வரக்கூடிய படிக்காத இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும்போது சங்கரலிங்கங்களுக்கு என்ன கவலை? ஒரு பத்துக்கு பத்து அறையைப் பிடித்து, ஒரு சமையல்காரனை சமைத்துப் போட வைத்து குறைந்த சம்பளம் கொடுத்தால் போதும்... இப்படித்தான் சங்கரலிங்கம் பணக்காரரானார்.

"ஏலே, என்ன கொழுப்பு ஜாஸ்தியாயிடுச்சா உனக்கு ... எதித்து எதித்து பேசிக்கிட்டுருக்க... அவன் வரலையாம்... நீங்க வக்காலத்து வாங்குறீயளோ... சம்பளம் வாங்குறதுக்கு முன்னாடி கடன் கேட்க தெரியுதில்ல... வக்கணையா திங்க தெரியிதில்ல... உழைக்கணும்டா..."

"என்னங்க நீங்கபாட்டு பேசிட்டே போறீங்க... டாக்டர்ட்ட போறதுக்கும் காசு தரமாட்டீங்க... முடியாம இருக்கான் அதான் வரலைன்னு சொன்னா, நீங்க என்னன்னமோ பேசுறீங்க..." - கடலை வெடித்துவிட்டான்.

கடைவாசலில் நின்று கொண்டிருந்த முத்துவும் மற்ற கடை ஊழியர்களும் கடலை கந்தசாமி பக்கத்தில் வந்து நின்றனர். நிலைமை மோசமாகி முதலாளிக்கும் ஊழியர்களுக்கும் கைகலப்பு உருவாக இருந்தது. சங்கரலிங்கம் எல்லோரையும் உற்றுப்பார்த்தார். விறுவிறுவென்று கல்லாவிலிருந்து இறங்கிய அவர், எதிரில் உள்ள கீதா கஃபே ஹோட்டலுக்கு காலை சிற்றுண்டி சாப்பிடச் சென்றார்.

முன்பொருமுறை இதே போல் உரசல் முற்றி ஊழியர்கள் சங்கரலிங்கத்தை கொலை வெறியோடு தாக்க, பக்கத்து கடைக்காரர்கள் வந்து சண்டையை விலக்குமளவுக்கு போய்விட்டது. அதற்குப் பிறகு இப்படி சண்டை ஏற்பட்டால் சங்கரலிங்கம் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிவிடுவார். இதை முத்துவும் கடலையும் பஜாரில் உள்ளவர்கள் சொல்லக் கேட்டிருந்தனர்.

"ஓ...ஹோ" முத்துவும் கடலையும் தங்களது கைகளை மாறி மாறி தட்டிக்கொள்ள, எல்லோரும் "ஓ" போட்டனர். இதைக் கேட்டு கோபமடைந்த சங்கரலிங்கம், தனது காதில் விழாத மாதிரி ஹோட்டலுக்குள் நுழைந்தார்.

"மாப்ள, இப்ப வானா முனா வந்து என்ன பண்ணுவார் தெரியுமா?" கடலை கந்தசாமி கேட்டான்.

"என்ன பண்ணுவார்? எல்லோருக்கும் கீதா கஃபேயில சூடா டீ வாங்கிக் கொடுத்து நம்மள கூல் பண்ணுவாரு..."

- முத்துவிடம் பதிலை எதிர்பார்த்த அவனுக்கு கடை உள்ளேயிருந்து பதில் வந்தது.

சண்டை நடந்தா இதத்தான அவரு வழக்கமா பண்ணுவாரு...

"இல்ல முத்து, இப்ப வந்து உன்னய பயங்கரமா கவனிப்பாரு பாரு..."

"பயங்கரமானா..." முத்து தயங்கிவாறே கேட்டான்.

"அவர் வீடு காலி பண்றதுக்கு நீதான் எல்லா சாமானையும் புது வீட்டுக்கு கொண்டு போய் சேர்த்தல்ல... டெம்போ கூட பிடிக்காம மீன்பாடி வண்டியிலேயே கொண்டு போனல்ல... அதுக்கு..."

"மூணாவது மாடியிலர்ந்து இறக்கி புது வீட்டு ரெண்டாவது மாடிக்கு ஏத்தி... கூலிக்கு ஆள் வச்சாக்கூட நாலாயிரம் செலவாய் இருக்கும், நம்மாளு உனக்கு அவ்வளவு தரமாட்டாரு... ரெண்டாயிரமாவது கொடுப்பாரு..."

முத்துவின் முகத்தில் திமர் வெளிச்சம் ஏற்பட்டது. இரண்டாயிரம் ரூபாய் என்றால் இந்த மாதம் எவ்வளவு வசதியா இருக்கும்... முதலாளியின் வீடு மாத்தறதுக்கு கஷ்டப்பட்டு உழைச்சது எல்லாம் அவனுக்கு சுகமாகப்பட்டது. இரண்டாயிரம் ரூபாயில் வீட்டுக்கு எவ்வளவு அனுப்பலாம்... அம்மாவின் மருத்துவச்செலவு, தங்கையின் படிப்பு... அய்யய்யோ இத மறந்துட்டோமே... கணுக்கால் அளவுக்கு மேல் சின்னதாகிப் போன ஆறேழு வருஷத்துக்கு முன்னாடி எடுத்த பேண்ட்டுக்கு பதிலா புதுசா ஒரு பேண்ட்டு வாங்கணும்... இந்த வாரம் சினிமாவுக்குப் போகணும்... முத்து விதவிதமாக கனவுகான ஆரம்பித்தான்.

"என்ன முத்து வீட்டு வேல எல்லாம் முடிஞ்சதில்ல..." முதலாளி கல்லாவில் வந்து அமர்ந்ததுகூட தெரியாமல் முத்து கனவில் மிதந்தான்.

"ஆ... முடிஞ்சது அண்ணாச்சி!"

"இந்தா... இத வச்சுக்க..."


கல்லாவிலிருந்து பணத்தை எடுத்தார் சங்கரலிங்கம். முத்துவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இருப்பு கொள்ளாமல் கல்லாப்பெட்டி அருகில் போய் நின்றான். மற்ற கடை ஊழியர்களைத் திரும்பிப் பார்த்து ஏதோ பெரிதாகச் சாதித்துவிட்டதைப் போல புன்னகைத்தான். மற்றவர்களும் லேசாக சிரித்தனர். கடலை "ம்.. ம்..." என்று உற்சாகப்படுத்தினான்.

முதலாளி பணத்தை நீட்டியவுடன் முத்துவுக்கு தூக்கி வாரிப்போட்டது. ஒரு நூறு ரூபாய் நோட்டை கையில் திணித்து, "வச்சுக்க முத்து" என்றார். இதை கொஞ்சமும் எதிர்பார்க்காததால் அதிர்ச்சியடைந்த முத்துவை, "அய்யா பிச்சை போடுங்க..." என்ற குரல் அவனை சகஜநிலைக்கு திருப்பியது.

ஊழியர்கள் அனைவரும் கனல் தெறிக்கும் கண்களுடன் முதலாளியையும் முத்துவையும் பார்க்கும்போது, கல்லாவில் லிருந்து சடுதியில் திரும்பிய அவன், கடைக்கு வெளியே நின்றிருந்த பிச்சைக்காரியின் தட்டில் அந்த நூறு ரூபாயை முதலாளி பார்க்கும்விதமாக போட்டான்..




# ஆண்களை சந்தேகப்படும் பெண்கள்



பெண்கள் சிலசமயங்களில் ஆண்களை பற்றி தவறாகவும் நினைப்பதுண்டு. ஆண்கள் கேட்கும், செய்யும் விஷயங்களை கூட பெண்கள் சில சமயங்களில் தவறான கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறார்கள்.

* நண்பர்களுடன் வெளியே சென்றால் ஆண்கள் மதுவருந்தத்தான் செல்கிறார்கள் என்ற எண்ணம். ஆண்கள் எப்போதும் பெண்கள் முன்பு எளிதாக புலம்பவோ, கலங்கவோ மாட்டார்கள், நண்பர்களுடன் பகிர்ந்துக்கொள்வார்கள்.

* எதையாவது பற்றி ஆண்கள் ஆழ்ந்து சிந்தனை செய்தால், தட்டிக்கழிக்க முயற்சி செய்கிறார்கள் என்று கருதுவது. ஆண்கள் எதையும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்ய முற்படுவதில்லை என்பதை பெண்கள் பெருமளவில் புரிந்துக் கொள்ளமாட்டார்கள்.

* ஷொப்பிங் செல்ல அழைத்து ஆண்கள் வரமறுத்தால், தங்கள்மீது அன்பு குறைந்துவிட்டது, நாட்டம் இல்லை என்று எண்ணுவது. காலை முதல் மாலைவரை கணினி முன்பு உட்கார்ந்து அலுத்துப்போய் வருபவனை மாலை வெளியே அழைத்தால் அவன் வரமறுப்பது உடல்நிலை ஒத்துழைக்கவில்லை என்பதால்தான். ஆனால் அதை புரிந்துகொள்ளாமல் சிலசமயங்களில் பெண்கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

* அலுவலகத்தில் இருந்து நேர தாமதமாக வந்தால், நண்பர்களுடன் அரட்டையடித்துவிட்டு வருகிறார்கள் என்ற எண்ணம் பெண்களின் மனதில் சந்தேகம் எழுகிறது. டார்கெட், டேட்லைன் போன்றவை பற்றி பெண்களுக்கு பெரிதாய் தெரிவதில்லை என்பதால்தான் இந்த எண்ணங்கள் எழுகின்றன.

* வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளும் போதெல்லாம் ஆண்கள் தப்புத்தண்டா செய்வார்களோ என்ற எண்ணம் சில பெண்களுக்கு எழுவது இயல்பு. சில ஆண்கள் அப்படி இருக்கிறார்கள் என்பதற்காக மொத்தமாக எல்லா ஆண்களையும் குறை சொல்லக்கூடாது.

* எப்போதும் சந்தேகக் கண்ணுடன் பெண்கள் ஆண்களை பார்ப்பதால்தான் ஆண்கள் சில விஷயங்களை பெண்களிடம் சொல்லாமல் மறைக்கிறார்கள். மேலும் பொய் சொல்லவும் செய்கிறார்கள். இதனால்தான் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

# எலுமிச்சை பேஷியல்



எலுமிச்சை அழகுப் பராமரிப்பில் பயன்படும் பொருட்களில் முக்கியமான ஒன்று. அதிலும் எலுமிச்சை ஒரு சரியான கிளின்சிங் பொருள். இதனைவைத்து முகத்திற்கு பேஷியல் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்குவதோடு, பொலிவான சருமத்தைப் பெறமுடியும்.

# சீரக மீன் குழம்பு

## தேவையான பொருட்கள்:

மீன் - 400 கிராம், சின்ன வெங்காயம் - 100 கிராம் , தக்காளி - 100 கிராம், பச்சை மிளகாய் - 3, பூண்டு - 6 பல், மிளகாய்த்தூள் - 2 கரண்டி, சீரகத்தூள் - 2 கரண்டி, புளி - சிறிய எலுமிச்சை அளவு

எண்ணெய் - 3 மேசைக்கரண்டி, உ.பருப்பு, வெந்தயம், சீரகம் - தலா அரைக்கரண்டி, கொத்தமல்லி கறிவேப்பிலை - சிறிது

(விரும்பினால் தேங்காய் விழுது- 2 மேசைக்கரண்டி)

## செய்முறை:

மீனை சுத்தம்செய்து நன்கு கழுவி தண்ணீர் வடிகட்டவும். சின்ன வெங்காயத்தை தோல் உரித்துவைக்கவும். தக்காளியை பொடியாக நறுக்கி வைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் சீரகம், உளுத்தம் பருப்பு, வெந்தயம்போட்டு தாளித்த பின் பச்சை மிளகாய், பூண்டு, கறிவேப்பிலை போட்டு வதக்கவும். அத்துடன் உரித்த சின்ன வெங்காயம், நறுக்கிய தக்காளி, சிறிது உப்பு சேர்த்து மசியவிடவும்.

தக்காளி மசிந்து வரும்பொழுது மிளகாய்த்தூள், சீரகத்தூள் சேர்த்து பிரட்டவும். அடுத்து அதில் புளித்தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க ஆரம்பித்தவுடன் உப்பு, மீனை சேர்த்து அடுப்பை மிதமான தீயில் வைக்கவும். மீன் வெந்தவுடன் நறுக்கிய கொத்தமல்லி இலை தூவி இறக்கவும். விரும்பினால் தேங்காய் சேர்த்தும் செய்யலாம். சுவையான சீரக மீன் குழம்பு தயார்.

# பாரதியின் குயில் பாட்டு

பா.பாலகணேசன் (M.A)
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.

பெண்மைக்கு வைக்கப்படும் அகமான சோதனையாக மாடனையும் பொருள் மனத்துயரம் (குரங்கன்) ஊடாகவும் இரண்டையும் கடந்த விருப்பக்காதல் திருமணம் இப்பாட்டின் கருப்பொருள் எனக்கூறும் எஸ்.இராமகிருஸ்ணன் கூற்றில் ஓரளவு உண்மைதெறிப்பது போன்று சாராது. ஏனெனில் ஏற்கனவே பெண் விடுதலை பற்றிப் பாரதி பெண் திருமணத்தில் செல்வாக்குப் பெறும் அம்சங்களையும் கூறாது விட்டிருக்கமுடியாதுபோல எனக்கு தோன்றுகின்றது. அத்துடன் இத்தகைய வாழ்வுமுறையைக் கண்டித்து இருக்கவும் மேற்படி கவிதையைப் பாரதியார் பாடி இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. 'குயில்' ஆன்மாதான். ஆனால், தேசத்தின் பழுதுபட்ட ஆன்மா குறியும் நெறியும் குறித்து, தெளிவின்றி நல்லதும் தீயதுமான எல்லைகளுக்கு மாறி மாறிச் சென்று தவிக்கும் 'ஆன்மா' என பாஞ்சாலி சபதப்பாடலை (விடுதலை வேட்கை) மையமாக வைத்து திறனாய்வு செய்வார் கே.ஆர். சீனிவாச ஐயங்கார்.

இவை யாவற்றையும் அவற்றையும் (குயில் பாட்டை) திறனாய்வு செய்பவரையே விளக்கி நிற்பதாகக் கூறி தந்த விளக்கத்தை தரும் சிற்பி பாலசுப்பிரமணியம் குயில் தமிழ் அணங்கு என்றும் மாஞ்சோலை தமிழ்நாடு எனவும், தமிழ் குயிலை வேட்டையாட தமிழ் நாட்டிலேயே வேடர்கள் உண்டு எனவும் தமிழ் மொழி முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கின்றது எனவும் தமிழ் மொழி காதலும், சாதலுமாக அருளும் இருளுமாக, சுழலும் விழலுமாக காலந்தோறும் இம்மொழிபட்ட பெரும் துன்பங்களைக் கூறி மூன்று தமிழ் மன்னர்கள் தமிழ் வளர்த்ததையும் அத்தமிழ் இப்பொழுது அழியும் நிலை எய்தியுள்ளது எனக்கூறி, மாடன் குயிலுக்கு உறவினன், குரங்கன் பணத்தோடுவந்த அந்நியன். தமிழை நேசிப்பதாக மாயம் செய்து வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கும் பண்டிதமரபு மாடன். அந்நிய மொழி பிதற்றித் தாய்மொழி முன்னேற்றத்தைத் தடுக்கும் தீமை குரங்கு. இவர்கள் வரலாறு நெடுகிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக நிற்கின்றன.

சொந்த உருவத்தைக்கூட மறைத்துச் செத்தைக் குயில் உருவில் சிதைந்து கிடந்தாலும், சிறகின் வலுவால் வானம் அளந்ததனைத்தையும் அளக்கும் வல்லமை பெறுகின்றது. தமிழ் குயில் என சிற்பி பாலசுப்பிரமணியம் தன் கூற்றுக்கு ஏனைய அறிஞர் கருத்தையும் அரண் சேர்ப்பார். பாஞ்சாலி சபதத்தில் நாடு, கர்ணன் பாட்டில் சமுதாயம் விடுதலை அடைய கவிபாடிய பாரதி குயில் பாட்டில் மொழி விடுதலை அடைய பாடுவதாக கூறுவார் சிற்பி பாலசுப்பிரமணியம். அவை



யாவற்றையும் விடுத்து "குயில் பாட்டு பாரதியின் இளமைக் கதையையே கூறுகின்றது" எனும் கூற்றிலும் ஒரு வலிவு உள்ளது. பாரதி தனது சுயசரிதையில் இளமைக்காதல் பற்றிக் கூறி அதன் நிறைவேறாத ஏக்கத்தை குயில் பாட்டில் கூறுகின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

பாரதியார் தனது இளமைப் பராயத்தில் ஏற்பட்ட காதலை தனது சுயசரிதையில் கூறுவது இவரது மனதில் அக்காதல் ஏற்படுத்திய தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. நிறைவேறாத நீண்டநாள் காதல் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தினால் ஏற்பட்ட அனுபவ ஏக்கமே ஒரு படைப்பாளியின் அனுபவமாகப் படைப்புமூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

அதற்கான ஆதாரத்தை குயில் பாட்டில் தேடும்போது, தூய கவிஞனின் காதலும் தூய்மையற்ற பெண் காதலுமாக எடுத்துக்காட்டப் படுவதுடன், அகத்திய முனிவரின் குயிலின் முற்பிறப்பு கதை கூறல் புண்பட்ட அவர் மனதிற்கு ஆறுதல் தேடும் ஒரே அம்சமாகவே காணப்படுகின்றது. மேலும் குயில் பாட்டின் ஆண் பாத்திரம் தூய காதலைக்கூற, பெண் பாத்திரமான குயிலி தூய்மையற்ற காதலை எடுத்துக்கூறுகின்றார் போல தெரிகின்றது.


சுயசரிதையிலும் தனது இளமைக் காதலில் தனது காதலைக் கூறிய நளினப்போக்கு குயில் பாட்டிலும் காணப்படுகின்றது.

எனவே ஒரு படைப்பாளி அனுபவித்த உண்மை அனுபவமே படைப்பு சிறப்படைவதற்கு காரண- மானது பல கவிதைகளின் போக்காக அமைந்து காணப்படுவதுபோல பாரதியின் இளமை வாழ்வில் ஏற்பட்ட காதல் அனுபவமே குயில் பாட்டு எனவும் கதை இடமுண்டு.

**(முற்றும்)**



# பாப்பா முரசு



## சிறுவர் கதை

## வாரம் ஒரு திருக்குறள்

### உட்பகை



**"உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்."**

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும், தளர்ச்சி வந்தபோது மட்கலத்தை அறுக்கும் கருவிபோல் அந்த உட்பகை தவறாமல் அழிவு செய்யும்.

குறள் : 883

## பொது அறிவு

1. இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளன?
9 மாகாணங்கள் அவையாவன:

1.வடக்கு மாகாணம், 2.கிழக்கு மாகாணம், 3.வடமத்திய மாகாணம், 4.வடமேல் மாகாணம், 5.மத்திய மாகாணம், 6.சபரகமுவ மாகாணம், 7.ஊவா மாகாணம், 8.தென் மாகாணம், 9.மேல் மாகாணம்

2. இலங்கையில் எத்தனை அரச சேவை மாவட்டங்கள் உள்ளன?
- 25 மாவட்டங்கள். அவையாவன:

1)கொழும்பு, 2)கம்பகா, 3) களுத்துறை, 4)கண்டி, 5)மாத்தளை, 6)நுவரெலியா, 7)காலி, 8)மாத்தறை, 9)அம்பாந்தோட்டை, 10) யாழ்ப்பாணம், 11)மன்னார், 12)வவுனியா, 13)முல்லைத்தீவு, 14) கிளிநொச்சி, 15)மட்டக்களப்பு, 16)அம்பாறை, 17)திருகோணமலை, 18) குருநாகல், 19)புத்தளம், 20)அனுராதபுரம், 21)பொலன்னறுவ, 22)பதுளை, 23)மொனராகலை, 24)இரத்தினபுரி, 25) கேகாலை

3. இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளன? - 22
4. இலங்கையின் தலைப்பட்டினம் எது? ஸ்ரீ ஜயவர்தனபுர
5. இலங்கையின் பெரிய நகரம் எது? கொழும்பு
6. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?
மேன்மைதங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்கள்.

### இலங்கையின் ஜனாதிபதிகளின் பட்டியல்

- வில்லியம் கொபல்லாவ (மே 22, 1972 - பெப்ரவரி 4, 1978)
- ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா (பெப்ரவரி 4, 1978 - ஜனவரி 2, 1989)
- ரணசிங்க பிரேமதாசா (ஜனவரி 2, 1989 - மே 1, 1993)
- டிங்கிரி பண்டா விஜயதுங்கா (மே 2, 1993 - நவம்பர் 12, 1994)
- சந்திரிகா குமாரதுங்க (நவம்பர் 12, 1994 - நவம்பர் 19, 2005)
- மகிந்த ராஜபக்ச (நவம்பர் 19, 2005 - ஜனவரி 9, 2015)

7. இலங்கையின் தற்போதைய பிரதம மந்திரி யார்? மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள்.
8. இலங்கையின் பரப்பளவு என்ன? 65,610 கி.மீ - 25,332 சதுரமைல்

பூமியின் பரப்பளவு : 196,936,481 - சதுர மைல் பூமியின் நிலப் பரப்பளவு : 57,505,431 - சதுர மைல் பூமியின் நீர்ப் பரப்பளவு : 139,431,011 - சதுர மைல் இந்தியாவின் பரப்பளவு : 1,222,559 - சதுர மைல்

## நட்பின் காதல்



ஒருமுறை பீர்பால் தன் சொந்த வேலைகாரணமாக அயல்தேசம் செல்லநேரிட்டது. செல்லும்வழியில் அரண்மனை ஒன்று தென்பட்டது. மிகவும் அசதியாக இருந்த பீர்பால் அதில் சிறிதுநேரம் தங்கிச் செல்லலாம் என முடிவெடுத்தார். அது அயல்நாட்டு மன்னனின் அரண்மனையாகும். அந்த விசயம் பீர்பாலுக்கு தெரியாது. அக்பரின் ஆளுகைக்குட்பட்ட மண்ணில் இருக்கும் அரண்மனை என்றே அவர் நினைத்தார்.

அந்த அரண்மனையின் பின்புறம் சென்று குதிரையைக் கட்டிவிட்டு பார்த்தார். ஆள் அரவமே இல்லை. அரண்மனைக்குள் புகுந்ததும் அடுக்களை தென்பட்டது. தமக்கிருந்த பசியில் சிறிதும் யோசிக்காமல் உணவினை எடுத்து உண்டார். பின்னர் அடுத்த அறைக்குச் சென்றார். அழகான பஞ்சு மெத்தையுடன் கூடிய படுக்கையறை. உண்ட மயக்கத்தில் அந்த படுக்கையில் படுத்து உறங்கியும்விட்டார்.

வேட்டையாடச் சென்றிருந்த மன்னர் சற்று நேரத்திற்கெல்லாம் வந்துவிட்டார். தன் உணவை உண்டுவிட்டு தன்னுடைய படுக்கையில் படுத்திருப்பவனைப் பார்த்ததும் சினம்கொண்டு பீர்பாலைத் தட்டியெழுப்பினார்.

"என் அரண்மனைக்குள் புகுந்து என் உணவினை உண்டு, என் படுக்கை அறையில் படுத்திருக்கிறாயே?" என்று அதட்டினார்.

"ஓஹோ... இது அரண்மனையா? காவலர் யாருமே இல்லாததால் இதனை சத்திரம் என்று நினைத்தேன்!" என்றார் பீர்பால் அலட்சிக்கொள்ளாமல்.

தன்னை மன்னர் என்று அறிமுகம்செய்தும் சற்றும் அஞ்சாமல் தன்னுடைய அரண்மனையை தர்மசத்திரம் என்கிறானே இவன் என கோபமுற்றார் அந்த மன்னர்.

"உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கிறதா? அரண்மனைக்கும் தர்மசத்திரத்திற்கும்கூட உனக்கு வித்தியாசம் தெரியவில்லையே!" என்று கடிந்தார் மன்னர்.

"மன்னர் அவர்களே.. இது அரண்மனையாகவே இருந்தாலும் இதனையும் தர்மசத்திரம் என்று அழைப்பதில் தவறில்லை!" என்றார் பீர்பால்.

"ஓர் அரண்மனை எப்படி சத்திரமாக முடியும்? சத்திரம் என்றால் இன்று ஒருவர் வருவார் நாளை போய்விடுவார்... மறுநாள் வேறொருவர் வருவார். பிறகு சென்றுவிடுவார். இங்கேயே தங்கமாட்டார்கள். அரண்மனை அப்படி அல்ல. நான் நிரந்தரமாக தங்கி இருக்கிறேனே!" என்றார் மன்னர்.

"மன்னர் அவர்களே உங்கள் பாட்டனார் எங்கே தங்கி இருந்தார்?"

"இதே அரண்மனையில்தான்!"

"உமது தந்தையார்?"

"இதே அரண்மனையில்தான்!"

"நாளை உங்களுக்குப் பின் யார் தங்குவார்கள்?"

"இதென்ன கேள்வி? எனது மகன் தங்குவான்!"

"ஆக இந்த அரண்மனையில் யாருமே நிரந்தரமாக தங்கி இருக்கவில்லை! தங்கள் முன்னோர் சில காலம் தங்கி இருந்துவிட்டு சென்றுவிட்டனர். இப்போது நீங்கள். உங்களுக்குப்பின் உங்கள் மகன். எனவே சத்திரத்துக்கும் அரண்மனைக்கும் எந்த வேறுபாடும் இல்லை!" என்றார் பீர்பால்.

பீர்பால் சொல்வதில் உள்ள உண்மை மன்னருக்கு விளங்கியது. வந்திருப்பவர் சாமான்யர் இல்லை என்பது விளங்கியது அவருக்கு! "தாங்கள் யார்?" என்று மரியாதையுடன் வினவினார் அரசர்.

"என்னைப் பீர்பால் என்று அழைப்பார்கள்!" என்று பதில் சொன்னார் பீர்பால்.

"அந்த மாமேதை நீங்கள்தானா? தங்களின் புகழை நானும் கேள்விப்பட்டு இருக்கிறேன். இதுவரை பார்த்தது இல்லை. நான் மிகப்பெரிய தவறு செய்துவிட்டேன். வருத்தம்வேண்டாம். என்னை மன்னித்துவிடுங்கள்!" என்றார் அரசர். அந்த மன்னனின் அன்புக்கட்டளையை ஏற்று பீர்பால் மேலும் சிலநாட்கள் அவரின் விருந்தினராகத் தங்கி இருந்துவிட்டு பிறகுதான் செல்லவேண்டிய இடத்துக்கு புறப்பட்டார்.

# அதிரடி ஐயாத்துரை



**வாசகர்களே! உங்கடை ஐயாத்துரை அண்ணை ரெண்டு கிழமையா மகளின்ர மகளின்ர சடங்கு ஒண்டுக்கு வெளிநாட்டுக்குப் போனனான் கண்டியளோ! அதால அதிரடியா வரேல்ல. இப்ப ஐயாத்துரை அண்ணை பராக்!**

* "வடமாகான விவசாயி' 2015ம் ஆண்டு தன்ர அமைச்சுக்கு ஒதுக்கிய நிதியில கனக்க 'ஓப்பின் செக்' வைச்சிருக்கிறார் எல்லோ. அதில இப்ப கனக்க செக் தாள்கள் கிழிபட்டுக் கொண்டு இருக்காம். கையெழுத்து போடுற 'அம்புலி மாமா' செயலாளர் இந்த விசயங்களை வெளியசொல்லி 'பார்' வழிய புலம்பிக் கொண்டிருக்கிறாராம். உவன் பாவி படிப்பிக்கேக்கேயும் இரண்டெழுத்தாற்ற 'பொருண்மிய' கழத்திலையும் விளையாட்டுக்காட்டி 'பங்கர்' வாசல் வரையும் போய்வந்தவனெல்லோ. பெரும்பாலும் உந்த அமைச்சின்ட தில்லாலங்கடி வேலைகள் 'ஓடிட்டிட்ட' புடிபடும் எண்டு அதிகாரிகள் மட்டத்தில ஒரே குசுகுசுப்புத்தான் கண்டியளோ.

* வடக்கு மாகாண கல்வி அமைச்சின்ர 'இந்திரமான அதிகாரி' தன்ர மகனுக்காக பள்ளிக்கூட 'வாத்திமாரோட' மோதினவரெல்லோ. விஷயம் இப்ப பெரிசாப் போட்டுது. வாத்திமார் கெம்பி எழுந்து கோர்ட்டுக்குப்போகத் தயாராகிட்டாங்கள். தன்ர அதிகாரம் தெரியாம 'தேசியப் பாடசாலையில' கைவைச்சதால பெரும்பாலும் 'இந்திரலோகத்து' அதிகாரி வேறு லோகத்திற்கு மாற்றப்படுவார் எண்டு அரசல்புரசாலாக் கதை வருதுங்க.

* ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் எல்லாம் இசைக்கச்சேரிமாரி போய்க்கொண்டிருக்கு பாருங்கோ. 'நாலு பேரும்' நாலு ராகம் பாடினம். உதில அதிகாரிகள வேற பந்தாடினம். யாழ்ப்பாணத்து 'பெரிய ஏஜென்ட்' ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு பிறகு ஆசுப்பத்திரியில அட்மிட் ஆவார் எண்டு பரவலா கதை வருகுது. ஏனெண்டு கண்டியளோ? பிறசரும் சுகரும் மனுசனுக்கு ஏறித்தான்.

* பேரவை எதிர் கூத்தமைப்பு ஊடலை ஒருமாதிரி தேவாரம்பாடி 'கூத்தாடித் தலைவர்' தற்காலிகமா தீர்த்து வைச்சது மாரி இருக்கு. இதிலையும் கூத்தாடித் தலைவர் 'கொழும்பு' பக்கம் எல்லோ நிக்கிறார். 'மாவிட்டபுரத்துக்காரரை' கிளிநொச்சியிலையும் வவுனியாவிலையும் வைச்சு சாடையா ஓரம் கட்டினது மாதிரிபடுதுங்க. 'வடக்கின் விக்கினவிநாயகனுக்கு' அவ்வளவு பயமோ?

* 'நெல்சிப்' திட்டத்தில ஊழல் நடந்தது எண்டு முந்தி ஊளையிட்டவை எல்லோ. இப்ப ஊழல் விசாரணை ரிப்போர்ட் தயாராய் இருக்கெண்டு கதை வருகுது. இதை கேள்விப்பட்ட ஒரு 'அம்புலி மாமா' உயர் அதிகாரி நாட்டைவிட்டு தப்பியோட முயற்சி எண்டும் ஒரு தகவல். இவருக்கு சப்போர்ட் யாரெண்டு தெரியுமோ? நம்மட வடக்கு பெரிய அவையின்ர 'மொனிற்றர் ஞானத்தார்தான்" இதுதான் இவையின்ர நிர்வாக கிலிசுகேடு.

* முன்னாள் 'அதிகார அம்மணிக்கு' இப்பதான் ஞானம் பிறந்திருக்கு கண்டியளோ. அம்மணி நவாலி குண்டுவீச்சைப் பற்றி 20 வருசத்துக்குப் பிறகு கதைக்க வெளிக்கிட்டிருக்கு. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம். எல்லாம் காலம் செய்யிற வேலை.

* 'வீணைக்கட்சியின்ர' அலுவலகங்களை இந்தா மூடுறம், அந்தா மூடுறம் எண்டு வெளிக்கிட்ட ஆக்கள் எல்லாம் இப்ப கப்சிப். காணாமல்போனவையின்ர உறவினர்கள் கூத்தாடிகளின்ர அலுவலகங்களை முற்றுகையிடப் போறம் எண்டு வெளிக்கிட்டிருக்கினம் எல்லோ. 'நல்ல விஷயம்'. கூத்தாடிகளுக்கு அலுவலகங்கள் எண்டு ஒண்டு இருக்குதா? இல்லாத அலுவலகங்களை முற்றுகையிடாம உவங்கட 'பிறாடோ' வாகனங்களை எல்லோ முற்றுகையிடவேணும்.

* அண்மையில நடந்த 'உழவர் விழா'வில ஏழை விவசாயிகளுக்கு ஏதேனும் குடுக்கிறது பற்றி ஒரு கதையும் இல்ல. கட்டப்பொம்மன் வீரவசனங்கள், உசுப்பேத்தல்கள், அடுக்குமொழிகள், அரசியல் பேய்க்காட்டல்கள், பம்மாத்துக்கள் எண்டு 'முத்து' முத்தாய் பொங்கி வழிஞ்சவையாம். செலவு எவ்வளவு தெரியுமோ? இலங்கைக் காசுக்கு 'ஐம்பது இலட்சமாம்'. ஆராற்ற பொக்கற்றுக்குள்ள எத்தனை இலட்சம் போனதெண்டு கடவுளுக்குத்தான் வெளிச்சம். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சதம்கூட குடுக்க வக்கில்ல. ஆனா 'வைரமா' பேசுறாங்கள்.

# ஊர் அரசியல்வாதிகள் ஒன்றுபடாதவரை பிரதேச அபிவிருத்தி பின்னடைவையே எதிர்கொள்ளும்



அரசியல்வாதிகள் ஒற்றுமைப்படாத வரை அந்தந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது வெறும் கனவாகவே போய் விடும் சாத்தியமிருக்கிறது.

மக்களுக்காக மக்களால் மேற்கொள் ளப்படும் ஜனநாயகத் தெரிவின்மூலம் பிரதேச அரசியல்வாதிகள் தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள்.

ஆனால், இந்த சொற்பதம் வெறும் வாய்ச்சொல்லளவில் மாத்திரம் நின்று விடுவதை நாம் சமகால அரசியலில் சந்தித்துவருகின்றோம்.

எந்தக் கட்சி, அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து ஒரு அரசியல்வாதி தெரிவு செய்யப்பட்டாலும் அவர் மக்களால் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது பின்னாட்களில் மறைந்துவிடுகிறது.

பிரதேச அரசியல்வாதிகள் தங்களுக் குள் நீயா? நானா? சண்டைபோடுவதால் ஒரு அரசியல்வாதி முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மற்ற அரசியல்வாதி முட்டுக்கட்டைபோடும் நிகழ்வுகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் எங்கிலும் பரவலாக நடந்து வருகின்றது.

இந்தப் போக்கு ஒரு ஜனநாயக அரசியலில் மிகவும் ஆபத்தானது என்பதுடன் மக்களின் அபிவிருத்தியையும் பாழ்படுத்திவிடும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

**எம்.எச்.ஏ.ஹுசைன்**

பொதுவாக அரசியல் அந்தஸ்தில் அவர்கள் உச்சநிலையில் இருந்தபோதும் அவர்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது எப்போதும் எட்டாக்கனியாகவே இருந்துவந்துள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் அபிவிருத்தியும் பின்னடைவையே சந்தித்துவருகிறது.

இதற்கு சிறந்த தவறான முன்னுதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பிரதேச அரசியல் நிலைமையை எடுத்துக் கொள்ளலாம்.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக ஏறாவூரைச் சேர்ந்த செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் கோலோச்சுகின்ற அதேவேளை ஏறாவூரைச் சேர்ந்த அலிஸாஹிர் மௌலானா நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். அதேவேளை, ஏறாவூரைச் சேர்ந்தவரும் முன்னாள் மாகாண சுகாதார அமைச்சராகவும் மாகாணசபை பிரதித் தவிசாளராகவும் பதவிவகித்த எம்.எஸ். எம்.சுபைர் தற்போதும் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக உள்ளார்.

இதனிடையே, கடந்த ஆட்சியில் அமைச்சராக இருந்தவரும் தற்போது முஸ்லிம் காங்கிரசின் தவிசாளராக இருப்பவருமான பஷீர் சேகுதாவூத்தும் ஏறாவூரைச் சேர்ந்தவர்தான்.

இத்தனை அரசியல் அதிகார உயர்மட்டப் பதவிகளில் ஏறாவூர் அரசியல்வாதிகள் கொடிகட்டிப் பறந்தும் ஏறாவூரில் ஒரு பொதுச்சந்தை, பொது மண்டபம், பொதுவிளையாட்டு மைதானம், பஸ் நிலையம், குறைந்தபட்சம் மழைக்கு ஒதுங்க பஸ்தரிப்பிடங்கள்கூட இல்லை.

ஏறாவூர் நகரசபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடத் தொகுதி காடுமண்டிக் கிடக்கிறது.

புதிய நகர சபைக்காக கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்ட கட்டிட வேலைகள் இன்னமும் முடிவுறாத நிலையில் இருக்கிறது.

ஏறாவூர் முஸ்லிம் கிராமங்களின் நிருவாக அலுவல்கள் சிதறுண்டு கிடப்பதால் இப்பிரதேச மக்கள் காணி மற்றும் பரிபாலனப் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

நூற்றாண்டைக் கடந்து நிற்கும் ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியின் இடப்பற்றாக்குறைக்குத் தீர்வு காணும் நோக்குடன் அருகிலுள்ள பொலிஸ் நிலையக் காணித் துண்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஏறாவூர் அரசியல்வாதி ஒருவர் கடந்த வாரம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு ஏறாவூரைச் சேர்ந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஏறாவூரைச் சேர்ந்த கிழக்கு மகாண சபை உறுப்பினரும் மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளர் சுபைர் ஆகியோரின் அனுசரணை பெற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ்வாறு ஏறாவூரைச் சேரந்தவர்கள் பலரும் சமகால அரசியலில் அதியுயர் மட்டங்களில் இடம் பிடித்திருந்தும்கூட பொது நன்மை களுக்கான விடயங்களில் வேற்றுமை யிலும் ஒற்றுமைகாணும் கனவான் அரசியல் என்பது இவர்களுக்கிடையில் தூரப்பட்ட ஒன்றாகவே இருந்துவருவதால் பிரதேசத்தின் அபிவிருத்தி அதிக பின்னடைவைச் சந்தித்துவருகிறது.

பொது நன்மை கருதிய விடங்களில் புரிந்துணர்வுடன் கூட்டுத்தீர்மானம் எடுக்கும் போக்கு இல்லாததால் ஒருவர் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை மற்றவர் மறைமுகமாக தடைசெய்யும் அல்லது புறக்கணிக்கும் மனநிலை அவதானிக்கப்பட்டுவருகிறது.

எனவே, எதிர்காலத்தில் இப்பிரதேச மக்களின் நன்மைகருதி இவ்வூர் அரசியல் முக்கியஸ்தர்கள் கருத்தொருமைப்பட வேண்டும்.

இல்லையேல் ஏறாவூரின் அபிவிருத்திக் கனவு என்பது எட்டாக்கனியாகவே இருக்கும்.

25 வருடங்கள் போர் இடம்பெற்ற காலத்திலேயே பொதுமக்கள் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதமில்லாது எல்லோரும் எவ்வளவோ தியாகங்களைச் செய்துதான் இன்றுள்ள நிலைமையை அடைந்திருக்கின்றோம்.

இது ஒரு சாதாரண விடயமல்ல. இந்தக் காலப்பகுதியில் பல்வேறு சவால்கள், எதிர்ப்புக்கள், பல்வேறு குழுக்களினது அட்டகாசங்கள், அச்சுறுத்தல்கள், பல்வேறு தரப்பினரின் சோதனைச் சாவடிகள் என்பனவற்றைக் கடந்ததாக உயிர்த்தியாகங்களைச்கூட சந்தித்த மக்களுக்கான அபிவிருத்தியில் அரசியல்வாதிகள் ஒருமித்து இயங்காது போனால் அது மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாக அமையும்.

எனவே இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து அரசியல்வாதிகள் பேதமில்லாது பணியாற்றவேண்டும்.

---

# பாலைவனப் பூ



உலகம் முழுவதும் பெண்களின் நிலை, துயரம் நிறைந்ததாகவே இருக்கிறது. மதங்களின் பெயராலும் சடங்குகளைக் கைமாற்றும் நீட்சியாலும் பெண்களைத் தங்களின் உடைமையாகக் கருதும் ஆண்களின் ஆதிக்கம் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் காணப்படுகிறது. பெண் கைவிட்டுப் போய்விடக் கூடாதென்னும் சொந்தம்கொள்ளும் மனோபாவத்தால் தங்கள்மீது சுமத்தப்படும் அத்தனை விதிகளையும் கடவுளுக்காகவும் தங்களின் சந்ததி களுக்காகவும் சிலுவைபோலச் சுமப்பவர்களாகப் பெண்கள் இருக்கிறார்கள். எங்கோ, யாரோ ஒரு சில பெண்கள் வெகுண்டெழுந்து அதிலிருந்து மீற முயலும்போது, அவர்களை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் வீசப்படும் அடக்குமுறைக்கயிறுகள், பெண்ணுடலையும் எண்ணங்களையும் தளைகளாய்ப் பிணைத்துக்கொள்கின்றன. அப்படியொரு தளையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டவர், வாரிஸ் டைரி.

நாலாயிரம் ஆண்டுகாலமாக ஆபிரிக்கக் கலாசாரத்தில் இருந்துவந்த, பெண் உறுப்புச் சிதைப்பைத் தடை செய்வதற்காக உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றிய வாரிஸ் டைரியின் சேவையைப் பேசுகிறது Desert Flower என்னும் புத்தகம். தனது சுயசரிதையான இந்தப் புத்தகத்தை வாரிஸ் டைரி, கேத்லீன் மில்லருடன் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இதன் தமிழாக்கம், "பாலைவனப் பூ" என்னும் பெயரில் வெளிவந்திருக்கிறது.

**சடங்கின் பெயரால் நிகழும் கொடுமை**

ஆபிரிக்கக் கண்டத்தின் சோமாலியப் பாலைவனத்தில் ஒட்டகம் மேய்க்கும் பழங்குடியின நாடோடிக் குடும்பத்தைச் சேர்ந்தவர் வாரிஸ் டைரி. தனது ஐந்து வயதில் வழிவழிச் சடங்கின் பெயரால், பாலுறுப்புச் சிதைப்புக்கு உள்ளானவர். பெண்ணின் அந்தரங்க இச்சையை மட்டுப்படுத்தி, பாலியல் உரிமையைச் சிறுவயதிலேயே இழக்கச் செய்யும் உறுப்புச் சிதைப்பு சடங்கின் பெயரால் சோமாலியாவிலுள்ள 80 சதவீதப் பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

உறுப்புச் சிதைப்புக்குப் பின்பு அதிர்ச்சி, தொற்று, மூத்திர ஒழுக்குக்குழாய் சிதைப்பு, ஆறாத வடுக்கள் போன்றவை தொடங்கி மரணம்வரை வேதனை தொடர்கிறது. ஆபிரிக்காவிலுள்ள இருபத்தெட்டு இஸ்லாமிய நாடுகளில் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ஆறாயிரம் சிறுமிகள், இந்த ஆபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

சிறுநீர் கழிக்கமுடியாத வேதனையாலும், மாதவிடாய்க் காலஅவதியாலும் வேதனைக்குள்ளான வாரிஸ் டைரியின், உடன்பிறந்த சகோதரியொருத்தி திடீரென்று ஒருநாள் காணாமல் போகிறாள். இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்த சிறுமியொருத்தியும் காணாமல் போகின்றாள். அவர்களுக்கு என்ன நேர்ந்ததென்று அறியும் சிறுமி வாரிஸ் டைரியின் அடிமனதில் உறுப்புச் சிதைப்பு சடங்கின் அவலங்கள் தங்கிப்போகின்றன.


ஐந்து ஒட்டகங்களும் அறுபது வயதுக் கிழவனும் ஐந்து ஒட்டகங்களுக்குப் பகரமாக, அறுபது வயதுக் கிழவனுக்கு பதிமூன்றே வயதானத் தன்னை திருமணம் செய்துவைக்க முயலும் தந்தையை ஏமாற்றிவிட்டு, பாலைவனம் வழியாக பலநூறு மைல்கள் நடந்தும் ஓடியும் தப்பிப்பிழைக்கிறாள் வாரிஸ் டைரி. பிறகு வீட்டுவேலை செய்பவளாக, பன்னாட்டு உணவகத்தில் தரையைப் பெருக்கும் தொழிலாளியாக வயிற்றுப்பாட்டைக் கழுவி, பின்னர் மொடலாகவும், ஜேம்ஸ்பாண்ட் படத்தின் நாயகியாகவும் வளர்ந்து, புகழ்பெறுகிறார். அப்போது எடுக்கப்பட்ட ஒரு நேர்காணல் அவரை வேறொரு தளத்துக்கு இட்டுச்சென்றுவிடுகிறது. அடிமனதில் அவசரமாய்த் தங்கிப்போன அழுக்கைத் துடைக்கும் முயற்சியாக, ஐ.நா சபையின் மக்கள்தொகை நடவடிக்கைக்கான பிரிவு, பெண் உறுப்புச் சிதைப்பு தடுப்பு நடவடிக்கையில் இணைந்துகொள்ள அழைப்பு கிடைக்கிறது.

உறுப்புச் சிதைப்பு என்னும் கொடுமை குறித்து வாரிஸ் டைரி என்ன சொல்கிறார் தெரியுமா?

குர் ஆன் இப்படிச் செய்யச் சொல்கிறது என்று பலர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள அத்தனை இஸ்லாம் நாடுகளிலுமே இந்த வழக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. என்றபோதும், அது இப்போது பிரச்சினையில்லை. ஆனால் குர் ஆனோ அல்லது பைபிளோ கடவுள் பெயரால் பெண்களுக்கு "அதை வெட்டிவிடவேண்டும்" என்று எங்கும் குறிப்பிடவில்லை. இந்த வழக்கம் மிக எளிதாக, ஆண்களால் நடத்தப்படுகிறது. ஐ.நா.வின் சிறப்புத் தூதர் அந்தஸ்து மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்கிறார் வாரிஸ் டைரி.



# மருத்துவம்



# ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க சில ஆலோசனைகள்!

ஆரோக்கியமான புத்திக்கூர்மையுள்ள குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டுமென்பது சகல தாய்மாரினதும் நோக்கமாகும். அதனை அடைவதற்கு கர்ப்ப காலத்தில் தாயினது உணவு சிறப்பாக இருக்க வேண்டும். இதற்கு இலாபகரமானதும் இலகுவானதுமான முறையில் உணவைப் பெறுவதற்கு சரியான ஆலோசனைகள் தாய்மாருக்கு முக்கியமானது. பிரதான உணவு வேளைகளுக்கு மேலதிகமாக சிற்றுண்டிகளை உட்கொள்வதற்கும் கிளினிக்மூலம் வழங்கப்படும் விற்றமின்களை உண்பதற்கும் தாய்மாருக்கு சரியான ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். தாயின் போஷாக்கினை அளவிடுவதற்கு உயரத்திற்குப் பொருத்தமான நிறையுள்ளதா என ஆராய்ந்தறிவது அவசியமாகும். இதனை உடற்திணிவுச் சுட்டி (BMI) என அழைக்கப்படும். BMஐ 18.5 ஐ விடக் குறைவாயின் போசணை மட்டத்தில் குறைந்து செல்வதாகக் கருதப்படும். கர்ப்ப காலத்தில் நிறை அதிகரித்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல்வேண்டும். இதன்மூலம் நல்ல பிறப்பு நிறை கொண்ட குழந்தை-ஒன்றைப்பெறும் சந்தர்ப்பம் ஏற்படும். கர்ப்ப காலம் முழுவதும் தாயின் உடல்நிறை 12-14 Kg அளவுவரை அதிகரிக்கும். இரத்தச்சோகை குறித்துக் கர்ப்பிணிப் பெண்கள் அறிந்திருத்தல் அவசியம்.

இரத்தச் சோகை உள்ளதா? என அறிவதற்கு கிளினிக்குகளில் ஹீமோகுளோபினின் அளவை இரத்தத்தில் பார்ப்பது அவசியம். இரத்தத்தில் ஹீமோகுளோபினின் அளவு குறைவாக இருந்தால் கர்ப்ப காலத்திலும் பிரசவ நேரத்திலும் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம். அத்துடன் குழந்தையின் பிறப்பு நிறையும் குறைவடையும். ஹீமோகுளோபினின் அளவு 11g ஐ விட அதிகமானால் இது திருப்திகரமான நிலை உள்ளதெனவும் 11g ஐ விட குறைவானால் இது இரத்தச்சோகை நிலை எனவும் கருதப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் மருத்துவர்கள் தரும் விசேட ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன் கிளினிக்குகளில் தரப்படும் இரும்புச்சத்து குளிசைகளுக்கு மேலதிகமாக இரும்புச்சத்து (IRON) அடங்கிய உணவு வகைகளை உணவுடன் சேர்த்துக்கொள்வதும் அவசியமாகும். ஹீமோகுளோபினின் அளவு மேலும் 7g க்கு குறைவானால் அது அதிக இரத்தச்சோகை நிலையாகும். இச்சந்தர்ப்பத்தில் அப்பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டியிருக்கும்.

கர்ப்ப காலத்தில் பெண்ணொருவருக்கு வழங்கப்படும் குளிசை வகைகள்...

01) முதல் 12 கிழமைகளுக்குள் போலிக் அமிலக் குளிசை (Folic Acid) நாளாந்தம் ஒரு குளிசை வீதம் 12 கிழமைகளுக்கு எடுக்கவேண்டும்.

இது சிசுவின் மூளை மற்றும் நரம்பு மண்டல வளர்ச்சிக்கு அவசியமாகும்.

02) முதல் 12 கிழமைகளின் பின் நாளாந்தம் ஒரு இருப்புச்சத்து குளிசையும் விற்றமின் C குளிசை ஒன்றும் இரவு உணவின் பின் எடுக்கப்படவேண்டும்.

இரத்தச்சோகை பிரச்சினையை தவிர்த்துக் கொள்வதற்கு இக்குளிசைகள் உதவுகின்றன.

03) கர்ப்ப காலத்தில் 5 மாதங்களில் வைத்தியரால் சிபாரிசு செய்யப்படும் பூச்சிக் குளிசைகள் உட்கொள்ளப்பட வேண்டும். (WORM TREATMENT) வயிற்றுப் புழுக்களிலிருந்து பாதுகாப்புப் பெறவும் இரத்தச்சோகை வராமல் காப்பதற்கும் இவை உதவுகின்றன. தேயிலை, கோப்பி, பால் போன்றன இருப்புச்சத்து குளிசைகளில் மற்றும் உணவுகளில் அடங்கியுள்ள இரும்புச்சத்து உடலினால் உறிஞ்சப்படுவதைத் தடுப்பதனால் பிரதான உணவு வேளைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரும் மற்றும் உணவின்பின் ஒரு மணித்தியாலத்திற்கும் அப்படியான பானங்களை அருந்தாமல் இருத்தல் பொருத்தமானது. விற்றமின் C குளிசையினாலும் உணவின்பின் உட்கொள்ளப்படும் பழங்களினாலும் உடம்பினுள் இரும்புச்சத்து உறிஞ்சப்படுவது இலகுவாக்கப்படுகின்றது.

04) வேறு நோய்கள் இருந்து அவற்றுக்காக மாத்திரைகள் பாவித்துக்கொண்டிருப்பின் கிளினிக்கிற்கு வந்த முதல் நாளிலேயே அந்த விடயத்தை வைத்தியரின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவரது ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

05) கர்ப்ப காலத்தில் மருத்துவ ஆலோசனை இன்றி எந்தவேளையிலும் எந்த மருந்தினையும் பாவிக்கக் கூடாது. ஏதேனும் நோய்க்கு ஆளானால் முடிந்தளவு விரைவாக வைத்தியரை நாடி ஆலோசனை பெறுதல் அவசியமாகும்.

06) கர்ப்பத்துள் வளரும் குழந்தை பூரணமாகப் போஷாக்கினை பெற்றுக் கொள்வது தாய் உள்ளெடுக்கும் உணவுகளிலிருந்தே. ஆதலால் குழந்தையின் ஆரோக்கியமான விருத்தியைக் கருத்திற்கொண்டு உள்ளெடுக்கும் உணவுகளில் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

07) முதல் 2 - 3 மாதங்களில் உட்கொள்ளும் உணவு சுவையின்றி அல்லது உணவில் விருப்பமின்றி இருந்தால் நாட்டுப் பழவகைகள், இளநீர், மரக்கறிசூப், பிஸ்கட் போன்றவற்றை உட்கொள்ளலாம். அதுமட்டுமன்றி ஏனைய நாட்களில் தான் உட்கொண்ட பிடித்தமான உணவுகளை வழக்கப்படி உட்கொள்ளலாம். புதிய பழங்களான வாழை, நெல்லி, வெரளு, விளா, கொய்யா, பழுத்த பப்பாசி, பழுத்த அன்னாசி போன்றவற்றை உட்கொள்வதன்மூலம் தாய்க்கும் சேய்க்கும் தேவையான விற்றமின் போசணைப் பதார்த்தங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

08) ஏனைய நாட்களைவிட சோறின் அளவு சற்றுக் கூடுதலாக உள்ளெடுக்கப்பட வேண்டும். மரக்கறி, கீரைவகை, பருப்பு, அவரை மற்றும் விதை வகைகள் மற்றைய நாட்களை விட சற்றுக் கூடுதலாக உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

✤ இயலுமான எல்லா வேளைகளிலும் மீன், இறைச்சி அல்லது நெத்திலி உணவுடன் சேர்த்தல் பொருத்தமானது.

✤ மீன் இறைச்சி உட்கொள்ளாதவராயின் அதற்குப் பதிலாக சோயா, பயறு, கடலை, கௌபி போன்ற அவரை வகைகளைக் கொண்ட உணவுகளை அதிகம் எடுத்தல் வேண்டும்.

✤ வாரத்துக்கு 3 முட்டைகள் வீதம் உணவுடன் சேர்த்துக் கொள்ளல் போதுமானதாகும்.

✤ இலகுவாகக் கிடைக்கக் கூடிய வசதிகள் இருக்குமானால் ஒரு நாளைக்கு ஒரு தடவை ஒரு கிளாஸ் பால் அல்லது யோகட், தயிர் போன்ற பாலுணவுகளை உட்கொள்வது அவசியமாகும்.

✤ பிரதான உணவின் பின் நாளைக்கு இரண்டு தடவைகளாவது பழமொன்றை உட்கொள்ளவேண்டும். கர்ப்ப காலத்தில் அதிக தாய்மாருக்கு ஏற்படுகின்ற மலச்சிக்கல் போன்றன ஏற்படாதிருக்க நார் சேர்ந்த மரக்கறி, பழங்கள், கீரைகளை உணவுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். கீரை வகைகளை உணவுக்கென உட்கொள்ளும்போது முடிந்தளவு பச்சையாக சலாது செய்து தயார்படுத்தல் சிறந்தது. அதனால் அதிலிருந்து போஷாக்கு பாதுகாக்கப்படும்.

உ+ம் - (வல்லாரை, பொன்னாங்கண்ணி, அகத்தி போன்றவற்றை சிறிதாக வெட்டி சலாது செய்யலாம் )

உங்களது BMI பெறுமானம் 18.5 ஐ விடக் குறைவாயின் மாச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகளை உள்ளெடுப்பது சிறந்த்து. கடைகளில் கிடைக்கும் சமைத்த உணவுகளை தவிர்த்து வீட்டில் சுத்தமாக சமைத்த உணவினை எடுப்பதற்கும் கொதித்தாறிய நீரினைப் பருகுவதற்கும் பழகிக் கொள்ளவேண்டும். எந்தவேளையிலும் இயற்கை உணவுகளை உட்கொள்ளவும் தரமற்ற செயற்கை பதார்த்தங்களை தவிர்க்கவும்.

பற்சுகாதாரம் பற்றிக் கவனித்தல் அவசியம். தினமும் பிரதான உணவு வேளையின் பின் பற்பசை கொண்டு பற்தூரிகையினால் பல்லை துலக்குதல் பொருத்தமானது.

## எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்



### உணவே மருந்து!

32. நீங்கள், தினமும் ஐந்துவிதமான பழங்களையும், சில காய்கறிகளையும் உணவாக எடுத்துக் கொள்பவரா...? ஆம். என்றால் ஆரோக்கியமும் அழகும் எப்போதும் உங்கள் பக்கம்தான்!

33. தினமும் ஒரு டம்ளர் மாதுளை ஜூஸ் குடிப்பது உடலில் இரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்கும்.

34. மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்ப்பூசணி துண்டுகள் அவசியம். மனஅழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விற்றமின் பி-6 தர்ப்பூசணியில் அதிகம்.

35. அப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் கணிசமாக இருப்பதால், தோலோடு சாப்பிடவேண்டும். பெக்டின் நம் உடலின் நச்சுக்களை நீக்குவதில் தனித்துவம் வாய்ந்தது.

36. பூண்டு சாப்பிட்டீர்களென்றால் உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

37. சிவப்பணு உற்பத்திக்கு புடோலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக்கீரை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ளவேண்டும்.

38. பச்சைப்பயறு, மோர், உளுந்து வடை, பனங்கற்கண்டு, வெங்காயம், சுரைக்காய், நெல்லிக்காய், வெந்தயக்கீரை, மாதுளம் பழம், நாவற்பழம், கோவைக்காய், இளநீர் போன்றவை உடலின் அதிகப்படியான சூட்டைத் தணிக்கும்.

39. சுண்டைக்காயை உணவில் சேர்த்தால் நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடிவிடும்.

40 வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, சர்க்கரை, சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சை போன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மை நீக்கும் உணவுகள்.

41. பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டுவந்தால், மூலநோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளித்துவந்தால் கண் நோய்கள் நெருங்காது.

42. சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிகமிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

43. சைக்கிள் கேப்பில் எல்லாம் ஸ்நாக்ஸ் சாப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்க்கவேண்டும். அதற்குப் பதிலாக தானியங்கள், முளைகட்டிய பயறு போன்றவற்றைச் சாப்பிடலாம்.

44. பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.

45. அதிக நாட்கள் உணவை ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கினை ஏற்படுத்தும்.




# விளக்கு மட்டுமா சிவப்பு?



## சத்தியவான் சாவித்திரி

சேர்! பெரிய மனிதர்கள். தாங்கள் நடிக்கும் நாடகத்திற்கு எவ்வளவு சீக்கிரம் ஒத்திகை பார்த்துவிடுகிறார்கள்! ஏதோ அவர் சொன்னதற்காக இவர்களை ஜாமீனில் விடுவது போலப் பயமுறுத்தி, கையெழுத்து வாங்கிக் கொண்டுவிட்டிருக்கிறார், பெரிய பொலிஸ் அதிகாரி.

அவரென்ன செய்வார்? அரசன் சொற்படி அதிகாரி அப்படி! அவர்களை வெளியே அழைத்துவந்து காரிலே ஏறச் சொல்லியிருக்கிறார் சுந்தரேசன்.

"மீண்டும் கார் சவாரியா? போதுமே" எனத் தோன்றியிருக்கிறது என் அக்காளுக்கு. ஆனால் இப்போதோ சுந்தரேசன் கைகளுக்குள்ளே இவர்கள் அடக்கம். அவர் விரும்பினால் என் அத்தானைத் தண்டிக்கலாம். என் அக்காளைத் ஹோமிற்கு அனுப்பலாம். பேசாமல் இருவரும் காரில் ஏறி உட்கார்ந்து இருக்கிறார்கள். கார் புறப்பட்டதும் சுந்தரேசன் அடுத்த நாடகத்தைத் தொடங்கியிருக்கிறார்.

'அந்தப் பெரிய மனிதர் கொஞ்சம் கோபக்காரர். மொத்தத்தில் நல்லவர், இருந்தாலும் இந்த வேலையெல்லாம் செய்யக் கூடாது. இன்றைக்கு இணங்காவிட்டால் நாளைக்கு இணங்கலாம். பேசாமல் விட்டுப்பிடிக்க வேண்டியதுதானே. அதற்காகப் பொலிசையா அனுப்புவது? பைத்தியக்காரன். உங்களுக்குக்கூட நான் சொல்கிறேன். இதிலென்ன தப்பு? எத்தனையோ பேர் எத்தனையோ விதமாக வாழுகிற நகரம் இது. இரவிலே மாடியில் எரியும் விளக்குகள் எல்லாம் படிப்பதற்காக மட்டுமே எரியும் விளக்குகள் அல்ல. நமக்கு வசதியான வாழ்க்கை வேண்டும். அது எப்படிக் கிடைத்தால் என்ன?

"நீங்கள் கிராமத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு சுலபத்தில் புரியாது. அவர் எத்தனைபேருக்கு வீடுகள்கூடக் கட்டிக் கொடுத்திருக்கிறார் தெரியுமா? எல்லாருமே ஒரு நாள், ரெண்டு நாள் தொடர்புகொண்டவர்கள்தான். நீங்கள் நன்றாக யோசியுங்கள். இந்த மாதிரி 'பிகு' பண்ணுகிறவர்களிடம் அவருக்கு எண்ணம் அதிகமாகிவிடும். கோர்ட்டிலே கைகட்டி நின்று ஹோமிற்குப் போய் பெயரைக் கெடுத்துக் கொண்டு சீரழிவதைவிட, காதும் காதும் வைத்தாற்போல் பழகிவிட்டு வேண்டியதைப் பெற்றுக்கொள்வதில் என்ன தவறு?" என்று உபதேசித்திருக்கிறார்.

அந்தப் பெரியமனிதர் நல்ல திறமையான தாகனையே தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று என் அத்தானுக்குத் தோன்றியிருக்கிறது.

பதில்சொல்வதற்கு வார்த்தையே இல்லாத ஒரு விஷயத்தை அவர் பன்னிப் பன்னிப் பேசியிருக்கிறார்.

என் அக்காளுக்கு நரகத்தில் இருப்பதுபோலத் தோன்றியிருக்கிறது. "தயவுசெய்து என்னைக் கொன்று விடுங்கள்...கொன்றுவிடுங்கள்!" என்று கத்தியிருக்கிறாள். அத்தானும் அழுதிருக்கிறார்.

அதன் பிறகும் சுந்தரேசன் உபதேசித்திருக்கிறார்.

"தானுண்டு, தன் குடும்பம் உண்டு" என்று வாழுகின்ற வாயில்லாப் பூச்சிகள் நச்சுப் பாம்புகளிடம் சிக்கிக்கொண்டால் கத்துவதையும் கண்ணீர் சிந்துவதையும்தவிர வேறு என்ன செய்யமுடியும்?

யாரையும் நம்பி நாங்கள் நகரத்தில் அடி எடுத்து வைக்கவில்லை. ஆனால் யாரையும் நம்பமுடியாத நரகத்தில் குடிபுகுந்துவிட்டோம்.

இரவு பன்னிரண்டு மணிக்கு என் அக்காளையும், அத்தானையும் வீட்டு வாசலில் இறக்கிவிட்டு, சுந்தரேசன் கார் வேகமாகச் சென்றுவிட்டது.

'என்னவோ ஏதோ' என்று தூங்காமலே இருந்த நான், கார் சத்தம் கேட்டவுடனேயே எழுந்து கதவைத் திறந்தேன்.

திறந்த உடனேயே ஓடிவந்த என் அக்காள் என் தந்தையின் படத்திற்கு முன்னால்போய், 'தடாலென' விழுந்தாள். கதறிக் கதறி அழுதாள். தலையைப் பிய்த்துக்கொண்டாள்.

நானும் சுலோசனா அக்காவும் ஓடிப்போய் 'என்ன என்ன' என்று விசாரித்தோம். தூங்கிக்கொண்டிருந்த கண்ணனும் திருப்பதியும் ஓடிவந்தார்கள்.

அவளால் சொல்லவா முடிந்தது? யாராவது தன்னைத் தற்செயலாகப் பார்த்தால்கூட, 'சீச்சீ' எனக் காறித் துப்பிவிட்டுத் தலைகுனிந்து கொள்ளும் ஒரு சகோதரி, இவ்வளவு அவமானம் நிகழ்ந்தபின் எந்த வார்த்தைகளால் அதை வர்ணிப்பாள்?

எங்கள் கிராமம் எவ்வளவுதான் கேவலமாக இருந்தாலும், இத்தகைய தீயநடத்தைகளுக்குப் பழக்கமில்லாதது. எவளோ ஒருத்தி மூலையில் தவறாக இருந்தாலும் ஊரெல்லாம்கூடி அவளைக் காறி உமிழும். நாங்கள் நல்ல தாயின் நல்ல மக்கள். தடுமாறிப் போன பொருளாதாரத்தில் மாட்டிக் கொண்டவர்களாதலால் ஆண்கள் வேலை தேடவேண்டி வந்தது. பெண்கள் பழிசுமக்க வேண்டிவந்தது.

மக்களே பார்த்துப் பூமாலை போட்டுப் புகழ்மாலை சூட்டிவிட்ட பிறகு, சில பெரிய மனிதர்கள் வானத்து மீனை வா என்று சொன்னாலும் வரத்தானே வேண்டும்? 'நான் அருந்ததி' என்று வாதாட முடியாதே! திரும்பத் திரும்ப அங்கேயே என் மனம் சுற்றுகிறது. ஊமை கண்ட கனவுபோல என் உள்ளம் துடிக்கிறது.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு எனக்கே அந்த நிலை என்றால், அன்று அந்த ஆபத்தில் சிக்கிக்கொண்ட என் சகோதரியின் நிலை எப்படி இருந்திருக்கும்? என் அக்காள் சொல்லமுடியாத விஷயங்களை எல்லாம் என் அத்தான் ஜாடை மாடையாகச் சொல்லிவிட்டார். கண்ணனும் திருப்பதியும் ஆத்திரத்தில் துடித்தார்கள்.

துடிதுடித்து என்ன பயன்? நாங்கள் ஆனையிட்டால் ஆயிரம் பேர் ஓடி வரப்போகிறார்களா? ஜீப் கார்கள் பறக்கப் போகின்றனவா? கறுப்புப் பணங்கள் துள்ளி விளையாடப் போகின்றனவா?

எங்களிடம் இருந்தது "சத்தியம் ஒன்றே." சத்தியம் எப்போதுமே சோதனைக்கு ஆட்பட்டது அல்லவா?

பத்தினி சீதைதானே பத்துமாதம் கண்ணீர்வடித்தாள்? பாரதத்துப் பாஞ்சாலிதானே பலரறிய அவமானப் படுத்தப்பட்டாள்? நேரிழையாள் அனுசூயைதானே நிர்வாணமாக நிற்க வேண்டிவந்தது? சத்தியம் எங்கே இருக்கிறதோ, தகராறும் அங்கேதானே இருக்கும்!

யோக்கியர்களைக் கடிக்கின்ற பாம்புகள்தானே சமுதாயத்தில் மிக அதிகம்! பூவிலும் நாகமிருக்கும். பூவுலகில் வஞ்சகமறியாத புஷ்பங்கள் எப்படி வாழமுடியும்?

மனது விரும்பியே தவறு செய்யும் பெண்களுக்கு சபைகளில்கூட மாலை மரியாதை கிடைத்துவிடுகிறது. தவறு என்றாலே நடுநடுங்கும் பெண்கள் கூடப் பொலிஸ் ஸ்டேஷன்களில் நிறுத்தப்படுகிறார்கள்.

இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம் எங்களைப் போன்ற அப்பாவிகளுக்குக் கிடைக்கவில்லையே சேர்! வாழ வழியில்லாத ஒருத்தி வாழ விரும்பினால் தவறு செய்தே தீரவேண்டும் என்று ஒரு சமுதாயம் இருக்குமானால் அந்தச் சுடுகாட்டில் எங்களைப் படைத்த ஆண்டவனை நொந்துகொள்வதைத் தவிர வேறு யாரை நாங்கள் நொந்துகொள்ள முடியும்.

அக்காவுக்கு நாங்கள் ஆறுதல் சொன்னோம். ஆனால் எங்கள் மனம் ஆறுதல் அடையவில்லை.

விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தோம்.

எங்களைப் படைத்தவனை நொந்துகொண்டு படுத்தோம்.

தாய், தந்தையரைப் பூஜித்துக் கொண்டு படுத்தோம்...

"நாளைப் பொழுது எப்படி விடியுமோ?" என்ற கவலையோடு படுத்தோம். சுமார் நான்கு மணியளவில் எல்லோருமே ஓரளவு தூங்கி விட்டோம். அந்தத் தூக்கம் தாளமுடியாத அசதியினால் வந்ததே தவிர அமைதியினால் வந்தது அல்ல.

ஆகவே ஆறு மணிக்கே எல்லாரும் விழித்துக்கொண்டோம்.

நான் பக்கத்தில் திரும்பிப் பார்த்தேன். என் அக்காளைக் காணவில்லை.

"அக்கா! அக்கா!" என்று அலறினேன். எல்லோரும் அங்குமிங்கும் தேடினார்கள்.

பாத்ரூம் கதவு உள்பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தது. ஓங்கி ஓங்கித் தட்டினோம். அது திறக்கப்படவில்லை.

கண்ணனும் திருப்பதியும் அதை எட்டி உதைத்தார்கள். கதவு திறந்து கொண்டது.

சேர்! என் அக்காள் அதிர்ஷ்டக்காரி. அவள் பெரிய மனிதரிடமும் சிக்கவில்லை. பொலிசாரிடமும் சிக்கவில்லை. இருவரையும் ஏமாற்றி விட்டாள். எங்களையும் ஏமாற்றிவிட்டாள்.

அங்கே அந்தக் கற்புக்கனல் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

ஆம்! பாத்ரூமுக்குள்ளே தூக்கில் தூங்கிக் கொண்டிருந்தாள் என் சகோதரி.

இனி அவளை உங்கள் பொலிஸ் என்ன செய்யமுடியும்? இந்த மரணத்திற்கு அது யாரைக் கைது செய்யமுடியும்?

ஒருவேளை அந்தச் சடலத்தை அந்தப் பெரிய மனிதரிடம் ஒப்படைத்திருந்தால், அப்போதும் அவர்தன் ஆசையைத் தீர்த்துக் கொண்டிருக்கக்கூடும்.

இப்படிச் சொல்லிவிட்டு ஜெயஸ்ரீ ஓங்கிச்சிரித்தாள். குமாஸ்தா குப்புசாமி நடுநடுங்கிவிட்டார்.

சரசுவின் நெற்றி வியர்த்திருந்தது. வேதநாயகம் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று அடித்தது.

(விளக்கு எரியும்)

வாரமொரு சிந்தனை சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்



# கூட்டுறவே நாட்டுயர்வு

மனித சமுதாயத்தில் மதிப்பீட்டுக் கொள்கை காலந் தோறும் மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் அரச பதவிகள் மதிக்கப்பெற்றன. ஆட்சித்திறனும் செங்கோண்மையுமே மதிக்கப் பெற்றன. ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருந்த அரசர்கள் எல்லோரையும் மனிதகுலம் மதிக்கவில்லை. புலமைக்கு, திறமைக்கு, தவத்திற்கு மதிப்பு என்றெல்லாம் இருந்துவந்துள்ளன.

இன்றைய சமுதாயத்தில் பணத்திற்கே மதிப்பு. இதனால் இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டு உடைமைசேர்க்கும் சமூகத்தின் பழைய போக்குகள் - மதிப்புகள் இன்னும் மாறவில்லை. இந்த மதிப்புக்கு பதிலாக புதிய மதிப்புக்கள் தோன்றவேண்டும். அதாவது மனித மதிப்பீட்டுக் கொள்கைகள் உருவாக வேண்டும்.

நமது நாட்டில் ஏழைகளின் தொகுதி கணிசமாகவுள்ளது. இந்த ஏழைகளுக்கு வாழ்க்கையில் ஆக்கமும், பாதுகாப்பும் தரக் கூடியதும், மனித மதிப்பீட்டுச் சமுதாயம் உருவாகத் துணை செய்வதும் கூட்டுறவு ஒன்றேயாம்.

ஜனநாயக முறையில் பொருளாதார முன்னேற்றம் காண்பதில் பகைவராது. வன்முறைக்கு அதில் வழி இல்லை. அமைதியான சகோதர அன்பின் அடிப்படையில் எளிதாகப் பொருளாதார முன்னேற்றம் காணக் கூட்டுறவு துணை செய்யும்.

ஆதிக்கம், இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் சிரத்தை உள்ளூர முரண்பாடுடையது. இலாபம், ஆதிக்கம், இவற்றில் நாட்டமுடையோர் இலாபத்திற்குத் தரும் முதன்மையை எப்போதும் அன்புக்கும், உறவுக்கும் தர மாட்டார்கள். எவரையும் எப்படியும் தன்னுடைய இலாபத்திற்காகச் சாமர்த்தியமாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் மற்றவர்களுக்கு உபயோகப்பட மாட்டார்கள். உள்ளூர முரண்பாடான சிந்தனைகளைக் கொண்டிராத மனிதர்கள் அடங்கிய அமைப்புக் களில்தான் கூட்டுறவு வளரமுடியும். நிலை பெறமுடியும்.

பொருளியல் இயற்றுவதில் தனியார் துறை, அரசுத்துறை அதாவது பொதுத்துறை, கலப்புப் பொருளாதார அமைப்பு, கூட்டுறவுத்துறை என அமையும். மனிதகுலத்தில் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கக் கூடிய அமைப்பே நமது இலட்சியம்.

சோசலிச சமுதாய அமைப்பை சர்வதேச சமுதாய அமைப்பை அமைக்க விரும்பினால், அதை நிறைவேற்றத் தனியார் துறை இடமளிக்காது. பொதுத்துறை இடமளிக்கும் என்ற நம்பிக்கை சில ஆண்டுகளுக்கு முன்வரை இருந்தது.

இப்போது இந்த நம்பிக்கை குறைந்துவருகிறது. கலப்புப் பொருளாதாரத்திற்கும் இதே கதிதான். சோஷலிச இலட்சியத்தை அடைய சர்வதேச சமுதாயத்தை அமைக்க கூட்டுறவு துறையே துணைசெய்யும்.

நமது நாட்டில் உள்ள இன்றைய கூட்டுறவு அமைப்புக்களின்மூலம் இதனைச் சாதிக்க இயலாது. இன்றைய கூட்டுறவு இயக்கம் அரசாங்கம் இயந்திரத்தின் இரும்புப்பிடியில் சிக்கியிருக்கிறது. இழப்புக்கும், ஈட்டத்திற்கும் பொறுப்பேற்காதவர்கள் மேலாண்மைப் பொறுப்பை ஏற்கிறார்கள். கூட்டுறவில் அமைந்துள்ள உள்ளீடான ஜனநாயக மரபுகள் அழிக்கப்படுகின்றன.

இன்றைய கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு வடிவமைப்பைக் கொண்டுள்ளனவே தவிர, உணர்வால் கூட்டுறவு நிறுவனங்களாக விளங்கவில்லை. இந்தக் குறைபாட்டிலிருந்து ஓரிரு கூட்டுறவு நிறுவனங்கள் விடுபட்டிருக்கலாம். அதற்கு நிர்வாகம் பொறுப்பில் இருக்கும் அலுவலர்களின் சமூகச் சிந்தனையும், ஆர்வமுமே காரணம். கூட்டுறவு இயக்கங்களை மக்களே தொடக்கத்திலிருந்து நடத்தி, நேரிடையாக என்று பங்கு கொள்கிறார்களோ, பயனடைகிறார்களோ, அன்றுதான் கூட்டுறவு இயக்கம் வெற்றிபெறும். நமது நாட்டில் சுதந்திரம் பெற்ற நாள் முதல் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுவருவது. "நமது இலட்சியம் கூட்டுறவுப் பொதுநலச் சமுதாயம்" என்பது. ஆனால் இந்தத் திசையில் இன்று நாம் செல்லவில்லை. வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிறோம்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பை நோக்கியே நாடு போய்க்கொண்டிருக்கிறது. வறுமைக்கோடு என்று ஒன்று நீளுகிறது. அல்லது உயர்கிறது. இந்தப் போக்கு மாற "கூட்டுறவுப் பொதுநலச் சமுதாயம்" காண்பதே வழி. வேறு வழியில்லை. மக்கள் எந்தச் சூழ்நிலையிலும் பொருளாதார அடிப்படையில் ஒருவரை சார்ந்தில்லாமல் தாமே வாழ முடியும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்த கூட்டுறவு பொருளாதாரச் சமுதாயத்தினால் மட்டுமே இயலும். மேலும் பிறபொருளாதார அமைவுகளில் பொருள் கிடைத்தாலும் ஆன்மா வளர்வதில்லை. ஆட்சித்திறன் வளர்வதில்லை. சமுதாயம் ஒருங்கிணைந்து வாழ்வதற்குரிய பண்பு நலன்கள் வளர்வதில்லை. கூட்டுறவுத்துறையில் மட்டுமே ஒருங்கிணைந்த வளர்ச்சி உண்டு. ஒரு நல்ல கூட்டுறவாளன் வறியோரை - நலிந்தோரை அவமதிக்கமாட்டான்.

(தொடரும்)

# தூங்கும்போது செல்போனை அருகில் வைக்காதீர்கள்



செல்போன் வைத்திராதவர்களே இல்லை என்று கூறும் அளவுக்கு இன்று செல்போன் பயன்பாடு அதிகரித்துள்ளது. அலுவலகங்களுக்கு வேலைக்கு வரும் போதும், வேலைமுடிந்து திரும்பும் போதும் பலர் "ஹெட்போன்" மூலம் பாடல் கேட்டுக்கொண்டே செல்கிறார்கள்.

ஒரு சிலர் சார்ஜர் போட்டுக் கொண்டே செல்போனில் பேசுவார்கள். இதுபோன்ற நேரங்களில், பலமுறை செல்போன் பேட்டரி அளவுக்கு அதிகமாக சூடாகி வெடித்துச் சிதறி இருக்கிறது. செல்போன் பயன்படுத்தும் பலர் அதனை எப்படி கையாள்வது என்று தெரியாமலேயே சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள்.


இது தொடர்பாக செல்போன் கடை வைத்திருக்கும் சுனில் என்பவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

நமக்கு பிடித்தமான உணவை சில நேரங்களில் நாம் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவோம். அப்போது அஜீரண கோளாறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. நமது வயிறு எப்படி அதனை ஏற்றுக்கொள்வதில்லையோ, அதே போலத்தான் செல்போனும் அளவுக்கு அதிகமாக ஏற்றப்படும் பேட்டரி சார்ஜரை ஏற்றுக்கொள்வதில்லை. செல்போனை நாம் சார்ஜர் போட்டு 2 அல்லது 3 மணி நேரத்துக் குள்ளாகவே "பேட்டரி புல்" என்று காண்பிக்கும். அல்லது செல்போனில் பச்சைக் கலர் லைட் எரியும். உடனே சார்ஜரில் இருந்து செல்போனை எடுத்துவிடவேண்டும். இல்லையென்றால் பேட்டரி அதிக சூடாகி வெடித்து ஆபத்தில் முடிந்துவிடும்.

அதே நேரத்தில், செல்போனை தலைக்கு அருகில் வைத்தும் தூங்கக் கூடாது. அதில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு உடல் நலனை பாதிக்கும். குறிப்பாக இரவுநேரங்களில் செல்போனை சார்ஜர் போட்டுவிட்டு தூங்கச் செல்வதை முற்றிலுமாக தவிர்க்கவேண்டும்.

# வாராந்த செய்திக்கொத்து

## சீனி கலந்த குடிபானங்கள்மீது அரசுகள் வரி விதிக்கவேண்டும்!



ஆரோக்கியமற்ற உணவை சந்தைப்படுத்துவதை உலக அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் சிறார்கள் மோசமாக குண்டாவதைத் தடுக்க சீனி கலந்த குடிபானங்கள்மீது அரசுகள் வரிவிதிப்பது பற்றி பரிசீலிக்கவேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. குழந்தைப் பருவத்தில் உடல் பருமனாதலை குறைப்பதற்கான முக்கியத்துவம் குறித்த அறிக்கை ஒன்றில் உலக சுகாதார நிறுவனம் இந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. 1990 முதல் உலகளவில் அதிக எடைகொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 33 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்களுடன் கூடிய மீன்



கால்களுடனான மீன் இனமொன்று நியூசிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. ஆச்சரியத்திற்குரிய இந்த மீன் இனத்தை சுற்றுலா பயணி ஒருவரே முதலாவதாக கண்டுள்ளார்.

## ரஜினிகாந், ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆகியோருக்கு பத்மபூஷண் விருதுகள்!



இந்த ஆண்டுக்கான பத்மவிபூஷண் விருதுகள் நடிகர் ரஜினிகாந்த், ஆன்மீக குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் உள்ளிட்டோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நடிகர் ரஜினிகாந்த், பத்திரிகையாளர் ராமோஜி ராவ், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் ஜக்மோகன், ஆன்மீகக் குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர். முன்னாள் கணக்கு தணிக்கையாளர் வினோத் ராய், பொலிவூட் நடிகர் அனுபம் கேர், பாடகர் உதித் நாராயண், ரிலையன்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் திருபாய் அம்பானி எனப் பலரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

## யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் அமைதி ஏற்பட்டுவிடுவதில்லை! சந்திரிக்கா



யுத்தமொன்றை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன் அமைதி என்பது தானாக ஏற்படமாட்டாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார். மத்திய மாகாணத்தின் தைப்பொங்கல் விழாவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், யுத்தமொன்று முடிவுக்கு வந்தவுடன் தானாக ஏற்படும் அமைதி தற்காலிகமானது. அதனை நிரந்தர அமைதியாக மாற்றிக் கொள்வது அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்துள்ளது. கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் சிங்களவர்கள் பெரும்பான்மையினர் என்று கூறிக்கொண்டு ஏனைய இனங்களின் உரிமைகளை கொடுக்காமல் தடுத்துக் கொண்டிருந்தார்கள். எனினும் நான் கட்சியின் தலைமைத் துவத்தில் இருந்திருந்தால் இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு புலமைப்பரிசில்



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் செயற்திட்டமொன்றை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.


இதன்படி முதற்கட்டமாக 36 சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டிருந்தார்.

## மலையக மக்களை இலக்கு வைக்கும் 'சிறுநீரக வியாபாரக் கும்பல்கள்'



மலையகத்தில் வறுமையில் பிடியில் வாடும் தோட்டத் தொழிலாளர்களை குறிவைத்து சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்தில் சிலர் ஈடுபட்டுவருவதாக மலையகத்தைச் சேர்ந்த அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். மலையக மக்களை இலக்குவைத்து இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் நடந்துவருவதை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே உறுதிசெய்திருப்பதாகவும் கல்வி அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் பி.பி.சி.யிடம் கூறினார். இவ்வாறான சிறுநீரக வியாபாரத்தில் தரகர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நேர்ந்துள்ள நிலைமை பற்றி வெளியில் கூற அச்சப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஞானசார தேரர் கைது வாரண்ட்




பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை கைதுசெய்து முன்னிலைப்படுத்துமாறு ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பான வழக்கு ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## முல்லைத்தீவில் வீடு தீக்கிரை

முல்லைத்தீவு, அளம்பில் தெற்கு யாழ். வீதியில் உள்ள வீடு ஒன்று முற்றாக தீயினால் எரிந்து நாசமடைந்துள்ளது. அளம்பில் சந்தி பகுதியில் தையல் நிலையம் ஒன்றினை நடாத்திவரும் யாழ். வீதி அளம்பில் தெற்கை சேர்ந்த கண்ணையா விஜயராசா என்பவருடைய வீடே இரவு 7 மணியளவில் வீட்டில் யாரும் இல்லாதவேளையில் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது. இவர்கள் தற்காலிகமாக வசித்து வந்த வீடே முற்றாக எரிந்துள்ளது. தீயை அணைக்க அயலவர்களும் வீட்டாரும் முயற்சித்தபோதிலும் அது பலனளிக்காது போகவே வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு தலைவரானார் சனத் ஜெயசூரியா?



இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூரியா மீண்டும் இலங்கை அணியின் தெரிவுக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரா மற்றும் இலங்கை கிரிக்கெட் வாரிய நிர்வாகிகளும் இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக முன்னரே தெரிவித்திருந்தனர்.

அதன்படி முன்னாள் இலங்கை அணியின் தலைவரான சனத் ஜெயசூரியாவை மீண்டும் தெரிவுக் குழுவின் புதிய தலைவராக நியமிக்க முடிவெடுத்திருப்பதாக கூறப்படுகிறது. தற்போது இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவராக கபில விஜயவர்தன கடமையாற்றி வருகிறார். இவர் தலைமையிலான தெரிவுக்குழுவானது, எதிர்வரும் இந்திய கிரிக்கெட் அணியுடனான கிரிக்கெட் தொடரில் பங்குகொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணியை தெரிவுசெய்யும். இதன்பின்னர் நடைபெறும் அனைத்து தொடர்களுக்கான இலங்கை அணியை தெரிவுசெய்யும் பொறுப்பு புதிதாக நியமிக்கப்படும் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவிடம் வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது. கடந்த 2014ஆம் ஆண்டு வங்கதேசத்தில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை கிரிக்கெட் அணியை சனத் ஜெயசூரியா தலைமையிலான தெரிவுக் குழுவே தெரிவுசெய்தது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியன்

**விளையாட்டுச் செய்திகள்**



கோண்டாவில் - மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் ஆதரவுடன் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. போட்டி தொடங்கியநேரம் முதல் இரு அணிகளும் கடும் போட்டியாக விளையாடியபோதிலும் முதற்பாதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 02-க்கு 01 என்ற பழங்கள் கணக்கில் முன்னிலை பெற்றுக் காணப்பட்டது.


இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளின் ஆதரவாளர்களின் ஆரவாரத்தின் மத்தியில் இரு அணிகளும் களம் இறங்கியபோதிலும் மீண்டும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மிகவும் அவதானத்துடன் விளையாடி மேலும் இரண்டு பழங்களை பெற்றநிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்டநிறைவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 04 க்கு 01 என்ற பழங்கள் கணக்கில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. போட்டிகளின் சிறந்த வீரர்களாக காளியம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.சயந்தனும் சிந்து விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.பிரபாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## எவ்.ஏ. கிண்ணத்துக்காக கிளிநொச்சி லீக்குகளுக்கு இடையே கால்பந்தாடத் தொடர்

எவ்.ஏ. கிண்ணத்துக்காக கிளிநொச்சி லீக்குகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கால்பந்தாடத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸ் அபார வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரின் கிளிநொச்சி லீக்கில் அங்கம்வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான மூன்றாம் சுற்று ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி மோதியது. உதயதாரகை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

# வாரமொரு காரம்



## அதிரவைக்கும் இதர செயலை எப்படித் தடுப்பது?

இலங்கையில் வருடமொன்றுக்கு 3ஆயிரத்து 500 மில்லியன் சிகரெட்டு கள் விற்பனையாகின்றன என்று போதைப்பொருள் தொடர்பான தகவல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் புபுது சுமனசேகர தெரிவித்தார்.

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மஹரகமவிலுள்ள இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது. இதன்போதே போதைப் பொருள் தொடர்பான தகவல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

“2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி சிகரெட் விலையை இரண்டு ரூபாவால் அதிகரித்த போது, கம்பனிகள் வீழ்ச்சியடையும் என்றும், ஆட்சிமாற்றம் ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் கூறப்பட்டு அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது. ஆனால், ஜனவரி 3 ஆம் திகதி கம்பனிகள் தாமாக விலை அதிகரிப்பை மேற்கொண்டன.

இலங்கையில் வருடமொன்றுக்கு 3 ஆயிரத்து 500 மில்லியன் சிகரெட்டுகள் விற்பனையாகின்றன. அப்படியானால், இரண்டு ரூபாய் விலை அதிகரிப்புமூலம் கம்பனிகளுக்கு 7 ஆயிரம் மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கிறது. இது அரசால் வருடமொன்றுக்கு மக்களுக்கு வழாங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவின் மொத்தச் செலவுக்கு நிகரான தொகையாகும்” என்றும் அவர் கூறினார்.

இன்றைய இளைஞர் - யுவதிகள் மத்தியில் மது அருந்துதல், புகைத்தல் ஆகியன ஒரு பஷனாக மாறிவிட்ட நிலையில் விருந்துபசாரம் போன்ற களியாட்ட நிகழ்வுகளில் மதுபான வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவருகின்றன.

ஏதாவது கொண்டாட்ட நிகழ்வு களுக்கு வருமாறு இளைஞர்களுக்கு அழைப்புவிடுத்தல் வைன், பியர், விஸ்கி, பிறண்டி வழங்கப்படு கின்றனவா என்று கேட்டுக்கொண்டே மேற்படி கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு பலர் ஒன்றுகூடும் களியாட்ட நிகழ்வுகளில் மது அருந்துதல் என்பது சாதாரண நிகழ்வாகிவிட்டது என்பதுடன், மது அருந்தாது விடுபவர்களை பட்டிக்காடு என்று நோக்கும் நிலையும் வந்துவிட்டது.

ஆனால், இவற்றால் எமது உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை எவரும் சிந்தித்துப் பார்ப்பதுமில்லை. அவ்வாறு சிந்திப்பவர் களின் புத்தியையும் மது என்ற பானம் மயக்கிவிடும்.

மது அருந்துதல், புகைத்தல் மற்றும் வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து உண்ணுதல் இந்த மூன்றும் எமது உடலுக்கு பாதகமானவையாகும்.

அளவுக்கதிகமான மதுபான வகைகளைப் பாவிப்பவர்களுக்கு நரம்புத்தளர்ச்சி, பாலியல் குறைபாடு, ஈரல் கரைதல் போன்ற நோய்களும் புகைப்பவர்களுக்கு சுவாசப் புற்று நோய், நரம்புத்தளர்ச்சி, பாலியல் குறைபாடு போன்ற நோய்களும் வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து சாப்பிடுபவர்களுக்கு வாய்ப்புற்றுநோயும் ஏற்படுகின்றன.

இதுதவிர, ஒருவர் புகைப்பிடிக்கும் போது அருகிலுள்ளவர்களும் தன்னிச்சையாக புகைப்பிடிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு தன்னிச்சையாக புகைப்பிடிப்பதற்கு பெண்களும் விதிவிலக்கல்ல என்பதுடன், பெண்கள் தன்னிச்சை புகைத்தலுக்கு ஆளாகுவதால் அவர்களது சந்ததியினருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. எமது நாட்டு அரசாங்கம் மது மற்றும் புகைத்தல் நடவடிக்கைகளை கட்டுப் படுத்துவதற்காக “மத்தட திட்ட” என்னும் மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி ஓரளவு வெற்றி கண்டது.

தற்போது மதுப்பாவனையால் ஏற்படும் நோய்களுக்கு 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்க வைத்தியசாலைகளில் இலவச சிகிச்சை வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும், அரசாங்கத்தின் இந்த நடைமுறையானது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதும் கேள்விக் குறியே. இது ஒருபுறமிருக்க வேறொரு துருவ செய்தியும் எம்மை அதிர வைக்கின்றன.

சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை தொழில் ஒழுங்குவிதிமுறையை மீறி மேற்கொள்கின்ற இலங்கை வைத்தியர்கள் ஆறு பேருக்கு எதிராக இந்தியாவில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் கொழும்பில் உள்ள வைத்திய சாலைகளில் கடமையாற்றுபவர்கள் ஆவர். இதுவரைக்கும் இவ்விதம் 60 சிறுநீரக மாற்று சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களை பயன்படுத்துகின்ற கும்பலின் தலைவர் அடங்கலாக மூவர் அஹமபாத்தில் கைது செய்தனர். கைதானவர்கள் வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே மேற்படி அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின. இவ்வாறாக எமது சமூகம் பல இடர்களிற்குள் இடிபட்டுள்ளது. இதற்குள் இருந்து பிள்ளைகளை வளர்த்தெடுத்து ஆளாக்குதல் என்பது இன்றைய நிலையில் பெற்றோர்க்கு பெரும் சவாலே. சந்ததியை அழிக்கும் சவாலை சந்திக்க அனைவரும் தயாராகவேண்டும் என்பதே இந்த வார காரத்தின் கருப்பொருளாகும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(28.01.2016 தொடக்கம் 03.02.2016 வரை)

### மேடம்

எதிலும் நிதானம் அவசியம். ஆடம்பர செலவு களை குறைக்க ஆசைகளை கட்டுப்படுத்துவது அவசியம். சாதகபாதகங்கள் இருந்தாலும் நற்பலன்கள் ஏற்படும். வரவு சிறக்கும். நேரத்தை பயன்படுத்திகொண்டு சேமிப்பில் ஈடுபடுவது நல்லது. திடீர் விருந்தினர் வருகை இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற முனைப்புடன் செயல்படுவீர்கள். உடன்பிறந் தோரால் உங்கள் கௌரவம் உயரும். எதிர்பாராதவகை யில் பெரிய மனிதர்களுடனான சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் பிடிவாதமான செயல்கள் மனவருத்தம் தரும். கடன்பிரச்சினைகள் குறையும். தம்பதியரின் கருத்தொற்றுமையால் எடுத்த செயல்கள் வெற்றிபெறும். உத்யோகஸ்தர்கள் அலுவலகத்தில் உடன் பணிபுரிவோரை சார்ந்திருக்க வேண்டியிருக்கும். கலைத்துறை யினருக்கு தடைகள் நீங்கும்.

### இடபம்

சாதக பாதகங்கள் கலந்திருக்கும். போராட்டமான சூழலை எதிர்கொள்ள நேரிடும். நினைத்த காரியங்கள் இழுபறி தரும். ஒவ்வொரு காரியத்திலும் நீங்களே நேரடியாக பணியாற்ற வேண்டியிருக்கும். சுறுசுறுப்புடன் காரியமாற்றவேண்டிய நேரம் இது. உழைப்பிற்கான பலன் உடனடியாக கிடைக்கும். இலாபம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அடுத்தவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் வெற்றிதரும். அதே நேரம் அடுத்தவர்களை நம்பி ஜாமீன் பொறுப்புகளை ஏற்பது கூடாது. சம்பந்தமில்லாத விவகாரங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். உடன்பிறந்தோரால் இழப்புகள் ஏற்படும். பிள்ளைகளின் பெயரில் சேமிப்பில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகும். நரம்புத்தளர்ச்சியால் உடல்நலம் பாதிக்கப்படும்.

### மிதுனம்

நற்பலன்கள் ஏற்படும். இருப்பினும் எடுத்த காரியங்களை சிரமப்பட்டு சாதிக்கவேண்டி இருக்கும். எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க அடுத்தவர்கள் துணையை நாடவேண்டிய சூழல் உருவாகும். முக்கியமான பணிகளுக்கு இடைத் தரகர்களை நம்பாது நேரடியாக செல்வது நல்லது. மன வருத்தம் இருக்கும். இயலாமையால் பேச்சில் கடுமை வெளிப்பட்டு அடுத்தவர் மனதைப் புண்படுத்தக்கூடும் என்பதால் பேச்சில் கவனம் அவசியம். குடும்பத்தில் சலசலப்பு இருக்கும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்யப்போய் சங்கடங்கள் வரும். முன்பின் தெரியாதவர்களிடம் கூடுதல் எச்சரிக்கை தேவை. பிள்ளைகளின் பிடிவாதமான செயல்கள் மனவருத்தம் தரும் .

### கடகம்

தொட்டது துலங்கி நற்பலன்கள் ஏற்படும். அடுத்தவர்களுக்கு உதவி செய்ய எண்ணு வீர்கள். பொதுப் பிரச்சினைகளில் முன்நின்று செயல்படுவீர்கள். கௌரவம், புகழ் உயரும். இக்கட்டான சூழலில் விவேகமான செயற்பாடுகள் வெற்றிதரும். எங்கே எப்படிப் பேசவேண்டும் என்பதை அறிந்து நேரத்திற்குத் தக்கவாறு பேசி காரியத்தை சாதிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பும், சலசலப்பும் மாறி மாறி இருக்கும். நிலுவை யில் உள்ள பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்க்கும் வரவு கிடைக்கும். புதிய பெண் நண்பர்களால் நன்மை உண்டாகும். தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பொழுதுபோக்குக் கருவிகளாகப் பயன்தரும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக கோப்புகளை பொறுமையுடன் கையாள்வது நல்லது.

### சிங்கம்

சங்கடங்கள் படிப்படியாக குறையத் துவங்கும். செயல்வேகம் அதிகரிக்கும். நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக இருக்கும். இழுபறியான சூழலிலும் கஷ்டத்தை வெளிப்படுத்தாமல் எடுத்த செயல்களை முடிக்க முயற்சிப்பீர்கள். தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்க பேச்சில் கூடுதல் கவனம் அவசியம். உங்கள் ஆலோசனைகள் அடுத்தவர்களுக்கு பயன்தரும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்யப்போய் உபத்திரவம் ஏற்படும். தகவல் தொடர்புசாதனங்கள் உங்கள் பணிகளுக்கு பக்கபலமாக அமையும். அண்டை அயலாரு டன் பழகும்போது எச்சரிக்கை தேவை. குடும்ப விவகாரங்களை வெளியில் பேசுவதை தவிர்க்கவும். தம்பதியருக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு.

### கன்னி

நெடுநாளைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்ப பிரச்சினைகள் முடிவிற்கு வரும். சுகமான சூழல் நிலவினாலும் ஓய்வின்றி செயலாற்ற வேண்டியிருக்கும். எதிர்ப்புகளை மீறி செயல்பட்டு வெற்றிகாண்பீர்கள். குடும்பத்தில் நிலவும் சலசலப்பை போக்கி கலகலப்பான சூழலாக்க முயற்சிப்பீர்கள். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். பேச்சில் அதிகாரம் இருக்கும். அவப்பெயரை தவிர்க்க கூடுதல் கவனம் அவசியம். உறவினர்கள் உங்கள் உதவிநாடி வருவர். எதிலும் அகலக்கால் வைக்கலாகாது. புதிய வீடுகட்டும் முயற்சியில் உள்ளோருக்கு காலநேரம் சாதகமாக அமையும். அவர்களால் உங்கள் கௌரவம் உயரும். நீரிழிவு நோயாளர்களுக்கு உடல்நிலையில் கூடுதல் கவனம் அவசியம்.

### துலாம்

வாழ்க்கை தரம் முன்னேற்றம் அடையும். உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி கொள்வதற்கான சந்தர்ப்பம் அமையும். அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகும். நெடுநாளைய விருப்பங்கள் நிறைவேறும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பல்வேறு வழிகளிலிருந்தும் வரவு வரும். பேச்சால் கௌரவம் உயரும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்வீர்கள். பிரயாணத்தின்போது புதிய நட்பு உண்டாகும். வீட்டுக்கு தேவையான ஆடம்பர பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் செயல் களில் முன்னோர்களின் சாயல் வெளிப்படும். தம்பதியருக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றி மறையும்.

### விருச்சிகம்

துவக்கம் மந்தமாக இருந்தாலும் படிப்படியாக சீராகும். அலைச்சல் அதிகரித்தாலும் இறங்கிய பணியில் வெற்றிகாண்பீர்கள். அடுத்தவர்கள் பணிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வீர்கள். மிகவும் நெருங்கிய நபர் ஒருவர் உங்களுக்கு எதிராக செயல்படுவதை கண்டு வருத்தம் உண்டாகும். அடுத்தவர்களின் உதவியை எதிர்பாராது நேரடி யாக இறங்கும் செயல்கள் நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வரவிற்கும் செலவிற்கும் சரியாக இருக்கும். கையிருப்பில் காசு ஏதும் மிஞ்சாது. பேச்சால் நற்பெயர் கிடைக்கும். மூத்த சகோதர, சகோதரி களால் நன்மை உண்டு. குடும்பத்தினருடன் கேளிக்கை, கொண்டாட்டங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டு. கௌரவ செலவுகள் அதிகரிக்கும்.

### தனுசு

துவக்கமே சிறப்பான நற்பலன்களை தரும்வகையில் அமையும். நினைத்த காரியங்களை எளிதில் நடத்தி முடிக்கும் திறன் கூடும். நீங்கள் சந்திக்க நினைக்கும் நபர் உங்களை நாடி வந்து உதவிசெய்வார். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பேச்சில் விவேகம் இருக்கும். மதிப்பு உயரும். உழைப்பிற்கேற்ற ஊதியம் உடனுக்குடன் கிடைக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நெருங்கிய நண்பர் ஒருவர் உங்களுக்கு விரோதமாக செயல்படுவதை கண்டு வருத்தம் ஏற்படும். சோம்பலால் இழப்புகள் ஏற்படும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் அவசியம். தொழிலில் சிறப்பான முன்னேற்றம்காணும் நேரம் இது. உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரி களிடம் மதிப்புக்கூடும்.

### மகரம்

அயராத உழைப்பும், தளராத முயற்சியும் உங்களை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும். உத்வேகம் செயலில் வெளிப்படும். எதிர்காலம் குறித்த எண்ணங்கள் மனதை அதிகம் ஆக்கிரமிக்கும். புதிய செயல்திட்டங்களை வகுப்பதில் குழப்பம் உண்டாகும். சிறிது காலத்திற்கு புதிய முதலீடுகள், புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாமல் அமைதிகாப்பது நன்மைதரும். குடும்பத்தில் அமைதியான சூழல் நில- வும். பேச்சில் நிதானம் வெளிப்படும். பல்வேறு வழி களில் வரவு வரும். முன்பின் தெரியாத புதிய நபர்களின் பேச்சை நம்பி எந்தவொரு விஷயத்திலும் தலையி டுவதை தவிர்க்கவும். உடன்பிறந்தோரிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். வண்டி, வாகனங்களால் செலவுகள் அதிகரிக்கும்.

### கும்பம்

தடையேதுமின்றி உங்கள் வெற்றிப் பயணத் தைத் தொடர்வீர்கள். பொறுப்புகளை பங் கிட்டு வேலைவாங்குவதில் தனித்துவம் காண்பீர்கள். பொதுப்பணிகளில் அதிகம் பங்கேற்கவேண்டிய சூழல் உருவாகும். குடும்பத்தில் லேசான சலசலப்பு தோன்றும். அவ்வப்போது மனம் சஞ்சலப்படும். எதிர்பார்த்த வரவு வந்துசேரும். பேச்சில் விவேகம் இருக்கும். கௌரவம் உயரும். உடன்பிறந்தோரால் கூடுதல் செலவுகள் ஏற்படும். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் அதிக நாட்டம் உண்டாகும். பிறந்த வீட்டுக்கு பெருமை சேர்க்கும்விதமான நிகழ்வுகள் நடக்கும். திடீர் விருந்தினர்களால் குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும். அந்நியப் பெண்களை நம்பி புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது.

### மீனம்

சாதக பாதகங்கள் கலந்திருக்கும். செயல்திறன் கூடும். திட்டமிட்ட செயல்களில் வெற்றி பெறுவீர்கள். சிறப்பான வரவு உண்டு. கடன் பிரச்சினைகள் முற்றிலும் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் நகைச்சுவை வெளிப்படும். நண்பர்களின் ஆலோசனைகள் தக்கநேரத்தில் பயன் தரும். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்கள் பணிகளுக்கு துணைநிற்கும். பெரிய மனிதர்களுடனான சந்திப்பு உங்கள் கௌரவத்தை உயர்த்துவதோடு எதிர்காலத் திட்டங்களுக்குப் பயன் தரும்வகையில் அமையும். வீடு, மனை போன்ற அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்குக் காலநேரம் சாதகமாக அமையும். வண்டி, வாகனங்கள், பிரயாணங்களால் ஆதாயம் உண்டாகும். உறவினர்களின் வருகை குடும்பத்தில் கலகலப்பை அதிகரிக்கும்.

## மனிதநேயம்!



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிசில் பரபரப்பான ஆட்டத்தின் மத்தியிலும் பிரெஞ்சு வீரர் ஜோ வில்பிரட் சோங்காவின் செயல் ரசிகர்களை நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நடந்த போட்டியில் தரவரிசைப் பட்டியலில் 9ஆம் இடத்தில் உள்ள பிரெஞ்சு வீரர் ஜோ வில்பிரட் சோங்கா, அவுஸ்திரேலியா வீரர் ஓமர் ஜெசிகாவை எதிர்த்து விளையாடினார். ஆட்டம் பரபரப்பாக சென்று கொண்டிருந்தபோது பந்தை எடுத்துக்கொடுக்கும் பணியில் உள்ள இளம்பெண் (Ball girl) உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்த ஜோ, அவருக்கு ஆறுதல்கூறி அவரை மைதானத்திற்கு வெளியே உள்ள பணியாளர்களிடம் ஒப்படைத்தார். சக மனிதருக்கு உதவிய ஜோவுக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் அரங்கில் இருந்த ரசிகர்கள் கைதட்டி ஆர்ப்பரித்தனர். இதனால் அரங்கமே அதிர்ந்து போனது. இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளத்தில் வேகமாக பரவிவருகிறது.

## பெண்களுக்கு...



உண்மையான பெண்மையை சோதித்து அறிகின்ற வித்தையாக மார்பக சவால் சீனாவில் பிரசித்தி அடைந்துவருகின்றது.

இச்சவாலில் ஈடுபடுகின்ற பெண்கள் மார்பகங்களை படமெடுத்து சமூகத்தளங்களில் பதிவேற்றவும் செய்கின்றனர். ஒரு பேனாவை தாங்கிப்பிடிக்கின்ற அளவுக்கு பெரிய மார்பகத்தை கொண்டிருப்பவரே உண்மையான பெண்மையை உடையவராவார் என்பதை எடுகோளாக கொண்டு மார்பகச் சவாலை மேற்கொள்கின்றார்கள். இதற்காக மேலங்கியின்கீழ் பாகத்தை தூக்கிப்பிடித்து மார்பகத்தின்கீழ் பகுதிக்குள் பேனாவை செருகுகின்றார்கள்.

சில பெண்கள் பேனைக்கு பதிலாக வீட்டில் கிடைக்கின்ற வேறு பொருட்களையும் சவாலுக்கு பயன்படுத்துகின்றனர். உதாரணமாக போத்தல்களை கூறலாம். டோக்கியோவில் செக்ஸி ரோபோ உணவகம் ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் அமையப்பெற்று உள்ள ரோபோ உணவகத்தையே படத்தில் காண்கின்றீர்கள். செக்ஸியான பெண் ரோபோக்கள் கண்களுக்கு விருந்து வைக்கின்றன. ஆண் ரோபோக்களின் சாகசங்களும் ஈர்க்கின்றன.

## பிரமாண்ட சிலை



இராமாயணக் கதையில் வருகின்ற முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரங்களில் பறவை அரசன் சடாயுவும் ஒருவர். இவர் சீதையை இராவணன் கடத்தி சென்றபோது எதிர்த்து தைரியமாகப் போரிட்டார். இவர் இந்து தெய்வங்களில் ஒருவரும் ஆவார். இந்தியாவில் கேரளா மாநிலத்தில் கொல்லம் மாவட்டத்தில் உள்ள சண்டயமங்கலம் என்கிற கிராமத்தில் சடாயூவின் பெயரால் அதிசயப் பூங்கா ஒன்று கட்டப்படுகின்றது. இங்கு சடாயுவுக்கு மிக பிரமாண்ட சிலையும் எழுப்பப்படுகின்றது.

உலகின் மிகப்பெரிய பறவைச் சிலை இதுவே ஆகும். இராவணனுடன் சடாயூ போரிட்டு வீழ்ந்தார் என்று ஊர் மக்களால் நம்பப்படுகின்ற இடத்திலேயே பூங்கா அமைக்கப்படுகின்றது. சடாயுவின் சடலத்தின் பாகங்களை இன்றும் இங்கு காணமுடிகின்றது. சடாயு அலகினால் கொத்தி உருவாக்கிய குட்டையும், இராமரின் கால்தடமும் இங்கு உள்ள மலைமுகட்டில் தென்படுகின்றன. எனவே இப்பூங்கா இதிகாசக் கதையுடன் சம்பந்தப்பட்டதாகும். இப்பூங்கா கேரளாவில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு பேருதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 20 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படுகின்ற இப்பூங்கா வெகுவிரைவில் பூர்த்தியாக்கப்பட்டு திறந்துவைக்கப்படும். அடி பிரதேசத்தில் நிர்மாண வேலைகள் இடம்பெறுகின்றன.

## தங்க பாபா



உத்தரகாண்ட்டில் நடைபெறும் கும்பமேளாவில், உடல்முழுவதும் தங்கநகைகள் அணிந்துவரும் ஒரு சாமியார் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார். எல்லோரும் அவரை “தங்கப் பாபா” என்று அழைக்கிறார்கள். சன் டி.வியில் முன்பு ஒளிபரப்பாகி வந்த நிகழ்ச்சிகளில் ஒன்று தங்கவேட்டை. முடிந்தளவு தங்கநகைகளை அள்ளி அணிந்துகொண்டு அந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார் நடிகை ரம்யாகிருஷ்ணன். அந்த நிகழ்ச்சிக்குப்பின் அதிக நகை அணிந்தவர்களைக் கண்டாலே தங்கவேட்டை ரம்யாகிருஷ்ணன் மாதிரி இருக்கியே என மற்றவர்கள் கேலி கிண்டல் செய்வார்கள்.



ஆண் சாமியார் - தற்போதும் தங்கவேட்டை ரம்யாகிருஷ்ணனைப் போன்றே தங்கநகை அணிந்து ஒருவர் உத்தரகாண்டில் வலம் வருகிறார். ஆனால், அவர் பெண் அல்ல, ஆண். அதிலும் முற்றும் துறந்த சாமியார் கும்பமேளா...

ஆம், இவர் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள ஹரித்துவார் நகரில் நடைபெறும் கும்பமேளா நிகழ்ச்சிக்கு வருகைதந்துள்ளார். தங்கநகைகளை அணிந்து நடமாடும் நகைக்கடையாக உள்ள அவரை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜனவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.